தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

பெப்ரவரி 2000



- வெற்றியின் பின்னால்
- சிங்களத்தின் போர்பட்ஜெட்
- எமது படைவலுவை பெருக்கிடுவோம்!!

## சமாதானத்துக்கான யுத்தத்தை (?) ஆதரித்த சிங்களம்..



## தடைகள் தகர்க்கும் மட்டக்களப்பு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அக்கறைப் பூக்கள்



எரிமலைஆசிரியருக்கு,

தை 2000 ஆம் ஆண்டு இதழ் கிடைக்கப் பெற்றேன். அதில் இடம் பெற்ற மீள்பார்வைத் தொகுப்பு பூரணமாக தொகுக்கப் படாவிட்டாலும் பயனுள்ளதாக அமைந்தது. இம்முறை வந்த இதழில் புதிய விடயங்கள் சேர்க் கப்பட்டு புத்துணர்வை ஊட்டி யிருந்தது. இனி வரும் இதழ்களில் மாதந்தோறும் நடைபெறும் எம் மண்ணின் நிகழ்வுகளை மாதாந்த மீள்பார்வையாகத் தந்தால் மிக நன்றாக இருக்கும். எரிமலை புத் தாயிரமாண்டில் வீறுநடை போட எனது வாழ்த்துக்கள்.

சிவாநந்தன்
பிரான்ஸ்

★★★

ஆசிரியருக்கு,

பத்தொன்பதாமாண்டில் கால டியெடுத்து வைக்கும் எரிமலை யின் தை 2000 ஆண்டு இதழ் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றது. எரிமலை தமிழீழ விடு தலையின் தார்ப்பரியத்தை விளக் கும் பேரிதழாக விளங்குகிறது என்பதில் ஐயமில்லை. எரிமலை இதழின் ஆசிரியர் தலையங்கம் இலங்கைத்தீவில் தமிழர்களுக்கு தமிழீழத்தில்தான் நிம்மதியென் பதையும், சிறீலங்காவில் தமிழர் கள் வாழமுடியாது என்பதையும் வலியுறுத்துகிறது.

இலகு தமிழில் அமைந்த தர் மத்தின் வாழ்வு என்ற போராளி எழிலின் ஆக்கம் ஒரு போராளி யின் உள்மனது எவ்வளவு உன்னத மானது என்பதை என்போன்ற தமி ழீழத்திற்கு வெளியே வசிக்கும் தமி ழர்கள் உணரக்கூடியதாக இருக்கும்.

எனக்கு எரிமலை இதழ்களை தொடர்ச்சியாக பெற்றுக் கொள்ள ஆவலாக உள்ளேன் ஏற்பாடு செய்யவும்.

த.சம்பந்தன்
செங்கல்ப்பட்டு
இந்தியா

★★★

ஆசிரியருக்கும் தாய்மண் வெளி யீட்டாளர்களுக்கும்,

எரிமலையின் நீண்ட கால வாச கர்களில் ஒருவன். தொடர்ச்சியாக ஐந்து வருடங்களாக எரிமலையி தழினை படித்தும் பேணியும் வரு கிறேன். இறுதியாக 1999 நவம்பர் டிசம்பர் மாத இதழ் கிடைக்கப் பெற்றது. அதில் தமிழீழ விடுதலை பேச்சுவார்த்தை மூலமா? யுத்தத் தின் மூலமா? என்ற கட்டுரை என் னைப்போன்ற பாமரர்களாலும் இலகுவாக விளங்கிக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

இது போன்ற எளிய தமிழில் வரும் ஆக்கங்கள் அனைத்துத் தரப் பினரையும் சென்றடையும்.

இரா. ஞானமூர்த்தி
பினாங்
மலேசியா

★★★

எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,

விடுதலை ஆக்கங்களோடு விண் ணதிர வலம் வரும் எரிமலையின் புத்தாயிரமாண்டு தை இதழ் கிடைத் தது. கிட்டண்ணாவின் ஏழாமாண்டு நினைவலைகளை சுமந்தவாறு வந்த எரிமலையில் போராளி அருணா வினால் ஆக்கப்பட்ட அன்பின் வடிவமாய் என்ற கட்டுரை கிட் டண்ணாவைப் பற்றி இது வரை பலர் அறியாத விடயங்களைத் தந்து, கிட்டண்ணா ஒரு தனி மனித சரித்திரம் என்பதை தெளிவு படுத்தியது.

மாமனிதர் குமார் பொன்னம் பலத்தினை படுகொலை செய்த தன் மூலம் சிறீலங்கா அரசு தான் நினைத்ததை சாதிக்க முடியாது போயுள்ளதை தோலுரித்துக்காட் டிய எரிமலை இதழ். புத்திஜீவிகள் தமிழீழ சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டியுள்ள பணியை வலியுறுத் தியுள்ளது.

சுதர்சன்
சொலுத்தூண்
சுவிஸ்.

★★★

தமிழீழ விடுதலையின் சங்கான எரிமலைக்கு

தைமாத இதழைக் கண்டதும் எழுதும் கடிதம். ஆனையிறவு முற்று கைச்சமர் பற்றிய ஆய்வு முற்று கைச்சமரின் போக்கை தெளிவு படுத்தியதோடு, ஆனையிறவின் வீழ்ச்சியை விரைவுபடுத்தியாழ் குடாநாட்டு மீட்பிற்கு புலம் பெயர்ந்த எம்போன்றவர்கள் செய்ய வேண்டிய உச்சபட்ச நிதிப் பங்களிப்பின் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளது.

சிவச்சந்திரன்
பாரிஸ்
பிரான்ஸ்

★★★

எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,

2000—ம் ஆண்டில் ஈழத்தமிழ ருக்கோர் விடிவுகாலம் பிறக்கும் என்ற நம்பிக்கை எல்லோர் மனதி லும் ஏற்பட்டுவிட்டது. அதற்காக எந்தவித உதவியும் நாம் செய்யக் காத்திருக்கிறோம். எனது முகவரி இதில் இணைத்துள்ளேன். எனக்கு தொடர்ந்து எரிமலை இதழை அனுப்பிவைக்கவும்.

செங்கல்வராயன்
சிதம்பரம்
தமிழ்நாடு

★★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உள்ளே...

எரிமலை
பெப்ரவரி 2000


## கட்டுரை

ஒளிதந்த தீபங்கள் பக்கம் - 18
கொக்கிளாய் முகாம் தகர்ப்பு பக்கம் - 27
மொழி பக்கம் - 37
இரு சிங்களப் படங்கள் ஒரு நோக்கு பக்கம் - 46

## சிறுகதை

தீச்சுடர் பக்கம் - 28
பெப்ரவரி 14 பக்கம் - 35
-த.ம. சேந்தன்-

## நேர்காணல்

புதுவை அன்பன் பக்கம் - 38

## கவிதை

இது ஒரு நாய்க் கவிதை பக்கம் - 07
-சடையர்-
பாவத்தின் கூலிகள் பக்கம் - 13
-புதுவை இரத்தினதுரை-
போர்ப் பிரகடனம் பக்கம் - 21
-வேலணையூர் சுரேஸ்-
வருக! இரண்டாயிரம் பக்கம் - 26
-காசி ஆனந்தன்-
எனது வருகை பக்கம் - 30
-கருணாகரன்-
சிலுவையூன்றாச் சவக்காலை பக்கம் - 45
-உமாஜிப்ரான்-


## தொகுப்பு

மீள்பார்வை ஜனவரி2000 பக்கம் - 48

12 "புதைகுழி மனிதரை" இனம்காண முடியுமா?




14 தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசம்



42 எனது தகப்பனாரின் அஸ்தி





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இலட்சியத்தில் ஒன்றுபட்டு உறுதிபூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பர்

எமது மக்கள் போற்றப்பட வேண்டியவர்கள், கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். தேசியப் போராட்டத்தில் எமது மக்களின் பங்களிப்பு சாதாரணமானதல்ல. அவர்களது பங்களிப்பு அளப்பரியது என்றுதான் சொல்வேன்.
இலைமறைகாயாக இருந்து விடுதலைப் போராட்டத்திற்கு தோள் கொடுத்துவரும் எமது எண்ணற்ற ஆதரவாளர்களையும் அனுதாபிகளையும் மனவுறுதி படைத்த மாமனிதர்கள் என்றுதான் அழைக்க வேண்டும்.
நீண்ட காலமாகவே போராட்டத்தின் பெரும் பளுவை பொதுமக்களே சுமந்து வருகின்றார்கள். சாவும், அழிவும், பசியும், பட்டினியும், இரத்தமும், கண்ணீருமாக எமது மக்கள் எதிர் கொண்ட தாங்கொணாத் துன்பத்தைச் சொற்களில் சித்தரிக்க முடியாது.
உலகில், எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் ஒடுக்கு முறையின் நெருப்பில் குளிப்பது பொதுசனங்களே. ஏனென்றால் அடக்குமுறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தைவிடப் பொதுமக்களின் ஆன்மீக உறுதியை உடைக்க வேண்டும் என்பதில்தான் அதிக அக்கறை காட்டுகிறார்கள். ஆனால் இந்த முயற்சிகள் ஒரு பொழுதும் வெற்றியளிப்பதில்லை. மக்களின் விடுதலை உணர்வை அடக்குமுறையால் அழித்துவிட முடியாது. உலக வரலாறு பகரும் உண்மை இது. ஏனென்றால், விடுதலை உணர்வே மனித ஆன்மாவின் சாரமாக, உயிர் மூச்சாக இயங்குகிறது. மனித வரலாற்றை இயக்கும் மகத்தான சக்தியும் அதுவே.
சிங்களப் பேரினவாத அடக்குமுறையானது எமது மக்களுக்கு சாவையும் அழிவையும் தாங்கொணாத்துயரையும் கொடுத்த போதும் என்றுமில்லாத வகையில் தேசியப் பற்றுணர்வையும் சுதந்திர தாகத்தையும் தூண்டிவிட்டிருக்கிறது. தமிழரின் தேசிய ஆன்மாவை விழித்தெழச் செய்திருக்கின்றது.



இந்தச் சுதந்திர அறைகூவல் எமது எதிரியின் காதுகளுக்கு எட்டாமல் இல்லை. சீற்றம் கொண்ட பூகம்பத்தின் குமுறலாக எழும் எமது இனத்தின் எழுச்சிக்குரலை சிங்கள தேசமும், சர்வதேச சமூகமும் அசட்டை செய்யமுடியாது.
இலட்சியத்தில் ஒன்றுபட்டு உறுதி பூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள். இந்த வரலாற்றின் படைப்பாக, எமது தேசிய மண், ஒரு சுதந்திர பூமியாக பிறப்பெடுக்கும் என்பது திண்ணம்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

★

பத்தொன்பதாம் ஆண்டு
பெப்ரவரி
2000

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
*C/O T.C.C-France,*
*341, Rue des Pyrenees,*
*75020 Paris.*
*Tel: 01 - 43 58 11 42*
*Fax: 01 - 43 58 11 91*

# தலைவாசல்

## அங்கீகாரமே சரியான முதலடி!

சந்திரிகா அரசு 2000ம் ஆண்டிற்கான வரவு–செலவு அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து கடந்த காலத்து அனைத்து வரவுசெலவு அறிக்கைகளையும் மிஞ்சும் விதத்தில் 5200கோடி ரூபாய்களை இராணுவத்திற்கு ஒதுக்கியுள்ளது. அன்னியச் செலவாணி கையிருப்பு வீழ்ச்சி, தேசிய உற்பத்தி வீழ்ச்சி, ஏற்றுமதி வீழ்ச்சி போன்ற மோசமான பொருளாதாரச் சூழ்நிலைகளில்கூட சிங்கள இனவாத இயந்திரம் போரிற்காக பெரும் தொகை நிதியை ஒதுக்கி தமது தேசிய முன்னுரிமையை தமிழர்களுக்கு எதிரான இனஅழிப்புப் போரிற்கு வழங்கியுள்ளது. இவ் அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சிறப்பாக வருகை தந்து வாசித்த சந்திரிகா, பாதுகாப்புக்கான வரி என்ற பெயரில் வசூலிக்கப்படும் 5.5வீத வருவாயை மேலும் பரவலாக்கும் யோசனையையும், படையினருக்கு உடைகள் காலணிகள் தயாரிக்கும் உற்பத்திக் கூடங்களை அமைப்பதற்கான நிதி ஒதுக்கீட்டு யோசனையையும் முன்வைத்தார்.

நோர்வேயின் மத்தியத்துவத்துடன் இணக்க முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள வேளையில் சிங்கள இனவாத இயந்திரம் தமது போரிற்கான முன்னுரிமையை இவ்வறிக்கை மூலம் வெளிக்காட்டியுள்ளனர். 15000 படையினரை படையில் சேர்ப்பது, தப்பிஓடிய படையினரை கட்டாயப்படுத்தியாவது போர்முனைக்கு அனுப்புவது, பெருமளவிலான ஆயுதக் கொள்வனவு என்ற தொடர் முயற்சிகளிற்கான நிதி ஆதாரத்தை சந்திரிகா அம்மையார் இவ் வரவு செலவு அறிக்கையில் வழங்கியுள்ளார்.

ஓயாத அலைகளின் தாக்கத்தினால் இராணுவ – அரசியல் – இராஜதந்திர வலுவை இழந்து பெரும் தாக்கத்திற்கு உள்ளான சந்திரிகா, முரண்பாடான சமிக்ஞைகள் ஊடாக தமது பிரதான போர்த் திட்டத்தை இப்போது முன்னெடுக்க முயல்வதை சமகால நிகழ்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஒருபுறம், தனது தமிழ் கைக்கூலிக்குழுக்களுடன் அரசமைப்பு திருத்தம், தீர்வுப்பொதி என்ற தலைப்புக்களில் வேடிக்கையான சந்திப்புக்களை நடாத்தி, அதனை உலக செய்தி ஊடகங்களுக்கு செய்தியாகக் கொடுத்து வருகின்றார். மறுபுறம், நோர்வே உதவியுடன் புலிகளுடன் பேசப்போவதாக வெளிவிவகார அமைச்சு மூலம் அறிவிக்கின்றார். இவற்றிற்கு இடையே இராணுவத் திட்டம் வெளியிடப்படுகின்றது.

இவை அனைத்தும் தமிழர்களின் நீண்டகால அனுபவத்தை மீள உறுதிசெய்கின்றன. உலகசமூகம் இவ் ஆபத்தை உணர்ந்து, சிங்களத்தின் பரப்புரைகளுக்கும் இராஜதந்தர பேச்சுக்களுக்கும் தக்க பதிலடி கொடுக்க வேண்டும். தமிழர்களின் அனைத்து உரிமைகளையும் விவாதத்திற்கு அப்பாற்பட்ட முறையில் அங்கீகரித்து நீதியான அரசியல் இணக்க முயற்சிக்கு உலக சமூகம் உதவவேண்டும். சிங்களத்தின் பேரினவாதப் போக்கை நிராகரித்து தமிழர்களின் அபிலாசைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர்களின் தேசிய விடுதலை இயக்கமான புலிகளை உலகம் அங்கீகரிக்க வேண்டும்.

நீண்ட துன்பங்களைத் தாங்கும் எமது மக்கள், நோர்வேயின் இணக்க முயற்சியை உலக சமூகத்தின் ஆழ்ந்த கரிசனையாகப் பார்க்கின்றனர். அதேவேளை சிங்களத்தின் தந்திரமுயற்சிகளையும் சூழ்ச்சிகளையும் முறியடிக்க தமிழீழ மக்கள் கடுமையாக செயற்படவேண்டும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# சமாதானத்துக்கான யுத்தத்தை (?) ஆதரித்த சிங்களப் பேரினவாதம்... சமதானத்துக்கான சமாதானத்தை எதிர்க்கின்றது!

பேச்சுவார்த்தைகள் பற்றித்தான் தற்போது எங்கும் பேச்சாக இருக்கின்றது. நோர்வே அரசு இது விடயத்தில் பகிரங்கமாகவே இறங்கியிருக்கின்றது. பேச்சுவார்த்தைக்கான பேச்சுவார்த்தையில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் திரு. குனூட் வோல்பேக் நேரடியாகவே ஈடுபட்டுள்ளார். விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கத்துடன் பெப்ரவரி பன்னிரண்டாம் திகதி இலண்டனில் பேச்சுக்களை நடாத்திய திரு குனூட் வோல்பேக் அவர்கள் அடுத்த நான்கு நாட்களில் கொழும்பு சென்று சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா, மற்றும் சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா ஆகியோரைச் சந்தித்து முதல்கட்ட பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

பேச்சுவார்த்தைக்கூடான அரசியல் தீர்வொன்றை இலங்கை இனப்பிரச்சினைக்கு கண்டுபிடிப்பதே அவரது சிக்கலான பணியாகியுள்ளது. இது சிக்கலானதுதான் என்பதை உணர்ந்தபோதும் இதனை ஒரு சவாலாக ஏற்பதாக அவர் தெரிவித்திருக்கின்றார். இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண முடியும் என சிறீலங்காவின் தலைநகர் கொழும்பில் வைத்து அவர் தெரிவித்திருக்கின்றார். அதாவது சந்திரிகாவின் சமாதானத்துக்கான போர் என்ற கபடத்தனமான திட்டத்தை அவர் தனது கருத்தூடாக பகிரங்கமாகவே நிராகரித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடனோ அல்லது சிறீலங்கா அரசுடனோ நோர்வே அரசு என்ன பேசிக்கொண்டது என்பது இன்னமும் பகிரங்கப்படுத்தப்படாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றபோதும். விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை ஒன்றுக்கான ஆரம்பம் ஆரம்பமாகி விட்டது என்பது பகி

> பௌத்த சிங்களப்பேரினவாத ஆட்சியின் அதிகாரப்பிடியில் இருந்து, ஆக்கிரமிப்புப் பிடியில் இருந்து தமிழீழ மக்கள் விடுதலை பெற்று சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் அனைத்து தேசிய இனங்களைப்போல் மனித வாழ்வின் சிறப்புக்களைப் பெற்றவர்களாக வாழும் நாள் இந்த சமாதான முயற்சியூடாகத் தோன்றுமா என்ற கேள்வி தமிழ்மக்கள் மத்தியில் தோன்றாமலில்லை.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ரங்கமானது. அடுத்த கட்டப் பேச்சுக்களும் விரைந்து நடக்கும் சாத்தியப்பாடுகளே காணப்படுகின்றன.

பௌத்த சிங்களப்பேரினவாத ஆட்சியின் அதிகாரப்பிடியில் இருந்து ஆக்கிரமிப்புப் பிடியில் இருந்து தமிழீழ மக்கள் விடுதலை பெற்று சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் அனைத்து தேசிய இனங்களைப்போல் மனித வாழ்வின் சிறப்புக்களைப் பெற்றவர்களாக வாழும்நாள் இந்த சமாதான முயற்சியூடாகத் தோன்றுமா என்ற கேள்வி தமிழ்மக்கள் மத்தியில் தோன்றாமலில்லை. சிங்களப்பேரினவாதமும், அது மையநிலையாய் இருந்து இயக்கிவரும் சிங்களப் பேரினவாத அரசும் இதற்கு இடம்தருமா என்ற சந்தேகமும், கசப்பான கடந்த கால அனுபவ வெளிப்பாடுகளுமே அர்த்தமுள்ள இந்தக் கேள்வியெழக் காரணமாகின்றன.

சமாதான முயற்சிகள் ஒரு புறத்தே வேகம் பெற்றுவருகின்ற அதே வேளை, அதற்கெதிரான பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் கூப்பாடுகளும் உச்சம் பெற்றுவருகின்றன. நோர்வே அரசின் சமாதான முயற்சி குறித்த செய்திகள் அடிபட ஆரம்பித்த நாளிலிருந்தே சிங்களப்பேரினவாதம் உசார் அடைந்துவிட்டது. சமாதானத்துக் கெதிரான போரில் அவை நேரடியாகவே களம் இறங்கியுள்ளன.

நோர்வே வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகள் கொழும்பில் ஆரம்பக்கட்ட நாடிபிடித்தல் பேச்சுக்களில் ஈடுபட்டபோதே பௌத்த பிக்குகளும் சிங்களப் பேரினவாதிகளும் நோர்வேயின் சமாதான முயற்சியை எதிர்த்து கொழும்பில் ஊர்வலம் நடத்தினர். கொழும்பில் நோர்வே தூதுவராலயத்தின் முன்றலில் நின்று எதிர்ப்பார்ப்பாட்டம் நடத்தினர்.

பேரினவாதப் பத்திரிகைகள் நோர்வே நாட்டின் சமாதான முயற்சியை கேவலப்படுத்தும் வகையில் எழுதிவருகின்றன. கட்டுரையாளர்களின் கண்ணோட்டம் என்றும், வாசகர்களின் கருத்தென்றும் இத்தகைய சேறடிப்புகள் நடைபெறுகின்றது நோர்வேயின் தலையீடானது சிறீ லங்காவின் இறையாண்மையைப் பாதிப்பதாக அவர்கள் கொக்கரிக்கின்றனர்.

புலிகளை பயங்கரவாத அமைப்பாக பிரகடனம் செய்யவேண்டும், விடுதலைப் புலிகளின் உலகளாவிய செயற்பாடுகளை தடுக்கவேண்டும், விடுதலைப் புலிகளை அழிக்கவும், தமிழர்களின் விடுதலைப்போரை ஒடுக்கவும், நிதியுதவியும் தரவேண்டும் என உலகநாடுகளில் எல்லாம் பிச்சைகேட்டு பவனிவரும் லக்ஸ்மன் கதிர்காமர் இனப்பிரச்சினையில் மூன்றாந்தரப்பு தலையீடு குறித்து கடுமையாக பிரதிபலிப்பார். இது உள்நாட்டுப் பிரச்சினை இதில் யாரும் தலையிடத்தேவையில்லை...



சமாதானத்தை எதிர்ப்பதில் தீவிரம்

பணமும் ஆயுதமும் தாருங்கள் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்பது அவரதும் அவரினது அரசினதும் வழக்கமான பிதற்றலாக இருந்துவந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபைகூட இதில் தலையிடவேண்டியதில்லை என்பது கதிர்காமரின் பிடிவாதம். நுளம்புக்கு மருந்தடித்தலே ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான பணிகளில் ஒன்றாக வகைப்படுத்தியவர் கதிர்காமர். சிங்கள அரசினதும் அதன் இத்தகைய கோணங்கித்தனமான அமைச்சர்களினதும் கருத்துக்களை அச்சொட்டாக பிரதிபலிக்கும் கருத்துக்களே சிங்கள வாசகர்களாலும் பேரினவாதப் பத்திரிகைகளாலும் நோர்வே அரசுக்கு எதிராக, அதன் சமாதான முயற்சிக்கு எதிராக பலகோணங்களில் பல வகைகளில் வெளிப்படுத்தப்பட்டுவருகின்றன.

இலங்கை உள்விவகாரங்களில் தலையீடு செய்வதை கண்டிப்பதாக நோர்வே அரசுக்கு கண்டனம் தெரிவித்து பௌத்த சிங்களப்பேரினவாத இயக்கங்கள் பதினைந்து ஒன்றாக இணைந்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன. பௌத்த சங்கங்களும் சிங்கள அமைப்புக்களுமான அவை, நோர்வே அரசை மிரட்டும் பாணியில் அறிக்கை வெளியிட்டுள்ளன. தமிழர் பிரச்சினை என அழைக்கப்படும் இந்தப் பிரச்சினை எனவும், இது ஒரு பயங்கரவாதப் பிரச்சினையே எனவும் வகைப்படுத்தும் இந்தப் பேரினவாத அமைப்புக்கள் இப்பிரச்சினையை தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசே தீர்த்துவைக்கும் எனவும் இதில் அந்நிய சக்திகள் தலையிடவேண்டியதில்லை எனவும், காட்டமாக அறிவிக்கின்றன. இந்த நாட்டுக்கு எதிரிநாடாகவே நோர்வேயைக் கருதவேண்டிவரும் என அவை எச்சரிக்கின்றன.

கூடவே நோர்வே அரசுக்கு அவை சில புத்திமதிகளையும் கூறத்தலைப்பட்டுள்ளன. சமாதான முயற்சியில் இருந்து பின்வாங்குமாறும்... வெளிவிவகார அமைச்சருக்கும், கொழும்

-சுப்பு-



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

புத்தூதரக அதிகாரிகளுக்கும் இது விடயத்தில் தலையிடாமல் இருக்கப் பணிக்குமாறும் அவ்வமைப்புக்கள் நோர்வேக்கு வலியுறுத்தியுள்ளன.

கூடவே இன்னொரு வசதியும் மேற்படி அமைப்புக்களுக்கு நோர்வேயிடம் இருந்து தேவைப்படுகின்றது. அதாவது... நோர்வேயில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை தடை செய்யுமாறும்... அவர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் செய்துவரும் உதவிகளை நிறுத்துமாறும்... வலியுறுத்தும் மேற்படி பேரினவாத அமைப்புக்கள் அமெரிக்க அரசு செய்ததுபோன்று... விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக அறிவிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றன.

நோர்வேயின் சமாதான முயற்சி வெற்றியளிக்கின்றதோ இல்லையோ.. ஆனால் இதன் ஆரம்ப செயற்பாடுகளை கண்ணுற்றுவிட்டே... சிங்களம் அல்லோலப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இம்முயற்சி வெற்றியளித்துவிடும்.. தமிழர்கள் உரிமை பெற்றுவிடுவர்.. ஆண்டான் அடிமை நிலை அடியோடு அழிந்துவிடும் என்ற



நோர்வே வெளிவிவகார அமைச்சர் குனூட் வோல்பேக்


பதைபதைப்பு சிங்களத்தைப் போட்டு பாடாய்ப் படுத்துகின்றது. அதன் வெளிப்பாடுகள்தான் சிறீலங்காவில் எங்கும் தென்படுகின்றது. இவையெல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல்... சிறீலங்காவின் தேசியக் கொடியில் இருந்து மற்றைய இனங்களைப் பிரதிபலிக்கும் குறியீடுகளை அகற்றிவிட்டு தனிச் சிங்கம் இருக்கக்கூடியதாக தேசியக்கொடி அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி, சிங்களப்பேரினவாத இயக்கம் ஒன்று அதன் பிரச்சாரப்பணியில் குதித்துள்ளது. பௌத்த அமைப்புக்களின் கூட்டமைப்பே இத்திருக்காரியத்தில் இறங்கியுள்ளது. பிரபலமான புத்த மதத்துறவிகள் ஆசியுடன், இதற்கான பிரச்சாரங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. சிங்கம் தனித்து வீராவேசமாக நிற்கக்கூடியதான சிங்களத் தேசியக் கொடியை வரைந்து, சுவரொட்டிப் பிரச்சாரத்தில் அது குதித்துள்ளது.

ஆக... சிங்களம் தனித்திருக்க விரும்புகிறது.

தமிழர்களும் அதைத்தான் தமது தேசியத் தாகமாக வரிந்துகொண்டுள்ளனர். இவ்வளவு உயிர்விலை கொடுத்து.. இரத்தம் சிந்தி.. கொடும் துயர் சுமந்து.. வதைபட்டு சிறைப்பட்டு.. இதற்காகத்தானே போராடி வருகின்றனர்.

**இலங்கைத்தீவில்,**
**சிங்களத்திற்கு சிங்கக்கொடி..**
**தமிழர்களுக்கு புலிக்கொடி..**

■




# "யுத்தமே தேவை"

**பாராளுமன்றில் திலக்கருணாரட்ண**

"புலிகளை அழிப்பதன் மூலமே சமாதானத்தை ஏற்படுத்துங்கள், எவரையேனும் சமாதானப்படுத்துவதற்காக பேச்சுவார்த்தைகளை நடாத்த வேண்டாம் யுத்தத்திற்கு சிங்கள மக்களே பாதுகாப்புவரி செலுத்துகின்றனர். முதலில் பகைவரை அழியுங்கள் பின்னர் பேசுவோம்" என்று நோர்வே அரசின் மத்தியஸ்தத்திற்கு எதிராக பாராளுமன்றத்தில் திலக்கருணாரட்ண எம்.பி துள்ளிக்குதித்துள்ளார். வழமையாக பேச்சுவார்த்தைக்கான சூழல்கள் ஏற்படும் காலங்களில் சிங்கள பேரினவாதிகள் துள்ளிக் குதிப்பது தெரிந்ததே.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இது ஒரு நாய்க் கவிதை

எனக்குள் ஒரு சந்தேகம்...?
நீலன்... ராசிக்...தாசன்...
இப்படியாய் சேவகம் செய்தவர்
ஒரே நிலைபெற்று மாண்டோராயினும்
நீலனுக்கிருந்த செல்வாக்கு ஏனோ
மற்றவர் இருவர்க்கும் இல்லாது போனது,

இனத்தை அழிக்க இனத்தில் இருந்தே
தெரிவாகிச் சென்றவர்
செய்த சேவகம் கொஞ்சமா...? நஞ்சமா...?
இருந்தும் ஏனோ
மற்றவர்க்கில்லாச் சிறப்பினை நீலன்
பெற்றதெப்படி...?
சிங்களம் அழுது கண்ணீர்வடித்தது.
சிங்களத்தின் எஜமானம் கறுப்புக்கொடியுயர்த்தி
கண்டனம் புனைந்தது.
தலையில் தூக்கியாடி
துயரில் தவித்தது சிங்களம்...
எப்படித் தாங்குவோம் இப்பெரும் துயரை...



சேவகம் செய்தோர் பலராய் இருந்தும்
சிங்களச் சிறப்பினைப் பெற்றதெப்படி...?

சிந்தனை நீண்டது...
நீண்டு... சில பொழுதில்
மண்டை குழம்பி தலைகனத்தது.
குந்தியிருந்து காரணம் தேடினேன்.
காரணம் என்னவோ...?

சிந்தனை முறித்தன நாய்களின் ஊளை.
கட்டாக்காலி நாய்களைப்பிடிக்கும்
நாய்வண்டில் வந்தது.
உச்சிப் பறக்கும் நாய்களின் குரைப்பும்...
பிடிபட்டுக்கிடக்கும் நாய்களின் ஊளையும்...
ஊரைப் பிளந்தன.
இத்தனை காலமும் வீட்டோடு கிடந்த என்வீட்டுச்
"சொறியனை"
எட்டிக் கடந்த எனது சின்னவள்...
ஆசையாய் வளர்க்கும்... "பொமரேனியன்"குட்டியை
அள்ளியெடுத்து நெஞ்சோடு அணைத்தாள்.

மினுமினுப்புக்கும் பளபளப்புக்கும் கவர்ச்சி அதிகமோ...?
நாய்வண்டில் கம்பி வழியால்... பார்த்தபடிக்கென்
"சொறியன்" அழுதான்.

என் சொறியன் போனதில் கவலை...
எனினும் என் சந்தேகம் தீர்ந்தது.!

சடையர்
கவிதைகள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தடைகள் தகர்க்கும் மட்டக்களப்பு

## -முற்றுகையும் முற்றுகை உடைப்பும் நிகழும் மண்-



*சிங்களப் பேரினவாதத்தின் கொடூரேப்பற்கள் பதிந்த நிலமாக தென்தமிழீழம் திகழ்கின்றது. கொல்லப்பட்ட சிங்களத் தளபதிகள் லெப். ஜெனரல் லக்கி அல்கம, மேஜர் ஜெனரல் லறி ஜெயவர்த்தனா, பிரிகேடியர் நளின்அங்கமன போன்றோரும் தென்தமிழீழத்தை பெரும் இரத்த ஆற்றில் நனையவைத்தார்கள். கொக்கட்டிச்சோலை படுகொலைகள் போன்ற பெரும் இனஅழிப்பு நடவடிக்கைகளைக் கண்டு விக்கித்த பூமியாக தென்தமிழீழம் திகழ்ந்தது.*

*முன்னைய ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்காலத்தில் தென்தமிழீழம் மீதான தீவிர ஆக்கிரமிப்பை ஒரு மூர்க்கமான போர்க் கொள்கையாக சிங்கள இராணுவம் பின்பற்றியது. 1990களில் பிரேமதாசாவின் சதிகாரப்பேச்சுக்கள் முறிவடைவதற்கான இராணுவப் பின்னணியை இப்பிராந்தியமே கொடுத்தது. பெரும் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை அழிக்க முயன்ற சிங்கள இயந்திரங்கள் தென்தமிழீழத்தை சிதைக்கும் உட்கிடக்கையை எப்போதும் தமது போரின் உட்கிடக்கையாகக் கொண்டிருந்தனர்.*

*இந்தப் பின்னணியில் இன்றைய தென்தமிழீழத்தை எடுத்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

இங்கு உண்மை என்னவெனில் இராணுவம் 30 வீதமான நிலப்பரப்பை கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது. மீதி 70 வீதமான பிராந்தியமும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது என மட்டக்களப்பு கூட்டணி பிரமுகர் பரராஜசிங்கம் 'வாசிங்டன் போஸ்ட்' நிருபரிற்கு அளித்த செவ்வியில் கூறுகின்றார். மட்டக்களப்பு ஒரு பரபரப்பு நிறைந்த நகரம். அங்கே எந்த இடத்திலும் புலிகளால் நினைத்த நேரத்தில் நகர முடியும் என அமெரிக்க செய்தியாளர் பாமிலா கொன்ஸ்டபிள் வியக்கின்றார் (வாசிங்டன் போஸ்ட் 30.01.00). ஆனால் புலிகளினால் தமிழர் பிரதேசங்கள் மட்டக்களப்பில் மீட்கப்படுவதை ஒப்புக்கொள்ளும் மட்டக்களப்பு இராணுவ உயரதிகாரி மேஜர் குணசேகர, 23 வீதமான நிலப்பரப்பே இராணுவத்தால் நெருங்கமுடியாத பகுதி எனவும் புலிகள் இதனை நிர்வகிப்பதாகவும் கூறுகின்றார். (டைம்ஸ் ஒவ் இந்தியா 14.02.00).

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிப்பளை, வவுணதீவு பிரதேசங்களும் போரதீவுப்பற்று பிரதேசத்தில் மண்டூர் தவிர்ந்த ஏனைய பகுதிகளும் இராணுவக்கட்டுப்பாடு அற்ற பகுதிகள் என அறிவிக்கப்படுகின்றது. ஏறாவூர்ப்பற்றுப் பிரதேசத்தில்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

செங்கலடி — பதுளை வீதிக் கிராமங்களும் வாழைச்சேனையில் ஒரு பகுதியும் இராணுவத்தினரால் நெருங்க முடியாதவை என உத்தியோகபூர்வமாக ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

சிங்கள இராணுவம் தன் ஆக்கிரமிப்பை மட்டக்களப்பின் நகரப் பகுதிகளில் தீவிரப்படுத்தும் அதே வேளை தமது தரைவழித் தொடர்புகளுக்கான பகுதிகளிலும் ஆக்கிரமிப்பைப் பாதுகாக்க முயல்கின்றது. நீண்ட போரனுபவங்களும், உத்திகளும் கொண்ட புலிகளின் தந்திரோபாயம் நிரம்பிய தரைவழி நகர்வுகளை எதிர்நோக்கும் சிங்களப் படைகள் தமது அதீதமான ஆட்பலம், ஆயுதபலம் என்பனவற்றின் மூலம் மட்டக்களப்பில் உள்ள தமது நிலைகளை தக்கவைக்க முயல்கின்றனர்.

இவ்வாறான இராணுவ சூழ்நிலையில், சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தின் முக்கிய தரைவழிப் பாதையான பொலநறுவை — மட்டக்களப்பு வீதியில் மீயாங்குளத்திற்கும் வாகனேரிக்கும் இடையில் சிங்களப் படையணிகளின் பெரும் இராணுவத் தொடரை புலிகள் அண்மையில் தாக்கியபோது, தென்தமிழீழத்தில் சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தின் பாதுகாப்பு பற்றியதாய் பெரும் விவாதம் இடம்பெற்றது.

மட்டக்களப்பில் இருந்து படையினரை பிற இடங்களுக்கு நகர்த்துவது, ஆயுத தளபாடங்களை மட்டக்களப்பில் குவிப்பது போன்ற இராணுவச் செயற்பாடுகளுக்கும் சிங்கள ஆட்சியதிகாரத்தை நிலைநாட்டுவதற்கான அரசியல் செயற்பாடுகளுக்கும் ஆக்கிரமிப்புப் படையின் பொலநறுவை மாவட்டத்தில் வெலிக்கந்தை படைத்தளத்துடன் தொடர்புகளை பாதுகாக்க வேண்டும். 1990 களின் ஆரம்பத்தில் இப் பிரதான பாதை மீதான நடவடிக்கைகளை புலிகள் தீவிரப்படுத்தினர். இதனால் ஏற்பட்ட இழப்புக்களை தவிர்க்க விமானம் மூலம் சிங்களப் படைகள் ஆட்களையும், ஆயுதங்களையும் நகர்த்த முற்பட்டன. பின்னர் புகைவண்டிப் பாதையை சிங்கள இராணுவம் தமக்குப் பாவிக்க முற்பட்டது. 1995 முதல் இப் புகைவண்டிப் பாதைகளை புலிகள் தாக்க ஆரம்பித்தனர். இராணுவத் தளபாடங்களை ஏற்றிவரும் புகைவண்டிகள் தாக்கப்பட்டன. புகையிரதப் பாதையை பாதுகாக்க பாதைகளில் நிறுத்தப்பட்ட படையினர் புலிகளின் இலக்குகளாக்கப்பட்டனர். மூன்று தடவை புகையிரதங்கள் கண்ணிவெடிகளினால் சிதைக்கப்பட்டது. இறுதியாக 1996ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மட்டக்களப்பு நோக்கிச் சென்ற புகையிரத சேவையை தாக்கி இடைநிறுத்தியதன் பின் சிங்களப் படைகளின் புகையிரத வழியிலான வழங்கல் பாதையை புலிகள் இழுத்து மூடிவிட்டனர். மறுபுறம், புலிகளின் அதிகரித்துவரும் ஆற்றலினால் மட்டக்களப்புக்கான வான் பாதையை பெருமளவில் தொடர்ச்சியாக பாவிப்பது ஆபத்தானது என்பதை சிங்களப் படைத்தலைமை உணர்ந்தது. குறிப்பாக மட்டக்களப்புக் குடாவின் மறு பகுதியைக் கட்டுப்படுத்தும் புலிகளால் வான்மார்க்கப் பாதையை இலகுவாகத் தாக்க முடியும் என்பதை சிங்களம் ஊகித்தது.

**புலிகளின் அதிகரித்து வரும் ஆற்றலினால் மட்டக்களப்புக்கான வான் பாதையை பெருமளவில் தொடர்ச்சியாக பாவிப்பது ஆபத்தானது என்பதை சிங்களப் படைத்தலைமை உணர்கிறது.**

இதன் காரணமாக, தரைவழிப் பாதையை மட்டக்களப்பிலிருந்து வெலிகந்தை வரை மேற்கொள்வதற்கான முடிவை சிங்களப் படைத்தலைமை மேற்கொண்டது. மட்டக்களப்பிலிருந்து பொலநறுவையில் உள்ள வெலிகந்த படைத்தளத்திற்கான பாதையே உபயோகிக்கப்படலாயிற்று. 1997 முதல் மட்டக்களப்பிலிருந்து பிரதான வீதிவழியாக டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் பெரும் படைப்பலம் பாவிக்கப்பட்டு தரைவழிப்பாதைப் பயணத்தை சிங்களம் பாதுகாத்து, சில இராணுவ முகாம்களை இப்பாதையின் பாதுகாப்புக்காக சிங்களம் நிறுவியது. இராணுவம் பயணிக்கும் பாதையை பாதுகாக்கவென பலநூாற்றுக்கணக்கான படையினர் நிறுத்தப்பட்டனர். வீதிகள், மதகுகள், விளம்பரப் பலகைகள் சோதனைக்குள்ளாகின. பாதையை பாதுகாக்கும் உத்திக்காக மக்களைப் பணயம் வைக்கும் முயற்சிகளையும் இராணுவம் மேற்கொண்டது. வீதியின் இருமருங்கிலும் உள்ள வணிக நிலையங்களும் மக்கள் குடியிருப்புக்களும் தம்மீதான தாக்குதலை தடுப்பதற்கான பணியில் ஈடுபட வேண்டும் என இராணுவம்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நிர்ப்பந்தித்தது.

இக் கடும் இராணுவ வியூகத்தை கணித்த விடுதலைப் புலிகள், சிங்களத்தின் ஜீவநாடியான பிரதான பாதையை அச்சுறுத்தும் பணியை தீவிரப்படுத்தினர். 1998 — 1999ம் ஆண்டுகளில் கண்ணிவெடித் தாக்குதல்களும் பொறிவெடித் தாக்குதல்களும் நடாத்தப்பட்டன. மட்டக்களப்புக்கு அருகாமையாக, பிரதான பாதையில் பொருத்தப்பட்ட பொறிவெடிகள் பெரும் சேதத்தையும், பீதியையும் இராணுவத்திற்குக் கொடுத்தது. மேலும் அதிகமான படையினரை பாதைப் பாதுகாப்புக்காக சிங்களம் பயன்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டது. இவ்வாண்டு இப்பாதை மீதான தாக்குதலில் புதிய உத்தியை புலிகள் பயன்படுத்தினர். பொலநறுவையிலிருந்து படையினரை ஏற்றி வந்து கொண்டிருந்த தொடரணியை, இரு



பருத்தித்துறையில் தற்கொடைத் தாக்குதலில் கொல்லப்பட்ட வடமராட்சி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லரி ஜெயவர்த்தனா

இராணுவ முகாம்களிற்கு இடையே வைத்து புலிகள் தாக்கினர். வாகனேரி, மியாங்குளம் முகாம்களுக்கு இடைப்பட்ட வலயத்திற்குள் ஊடுருவிய புலிகளின் ராக்கட் இயக்கும் போராளிகள் தொடரணியில் கூடிய உயிரிழப்பை ஏற்படுத்தக் கூடிய இலக்கான பஸ்வண்டிகள் இரண்டைத் தாக்கினர். டாங்கிகளும், கவச வாகனங்களும் சொற்ப தொகையான படையினரையே கொண்டிருப்பதால் அரச படையினரை ஏற்றி வந்த பஸ்வண்டிகள் தாக்கப்பட்டன.

**பல்லாயிரம் போராளிகள் தென்தமிழீழத்தில் பயிற்றுவிக்கப்படுகின்றார்கள் என சிங்கள ஆய்வாளர்கள் கூக்குரலிடுகின்றனர்**

இது ஒருபுறம் இராணுவத்திற்கு தரைவழிப் பாதை தொடர்பான அச்சத்தைக் கொடுத்துள்ள அதே வேளை உளவியல் ரீதியான தாக்கத்தையும் கொடுத்துள்ளது என்கின்றார் ஒரு ஆய்வாளர். தமது பின்தளத்துடனான உண்மையான தொடர்பு இழக்கப்பட்டால் பெரும் அழிவைச் சந்திக்க நேரலாம் என்ற அச்சம் சாதாரண சிங்களச் சிப்பாய்களிடம் உள்ளது என்பதை இராணுவம் உணர்கின்றது. இது வியட்நாம் போன்றதொரு சூழ்நிலை என இராணுவ அதிகாரி ஒருவர் வாசிங்டன் போஸ்ட் நிருபரிடம் கூறுகின்றார். புலிகள் தம்மை இடையூறு செய்து குழப்ப விரும்புகின்றார்கள் எனக் கூறும் அவர் மக்கள் மீதான தமது கோபத்தை பகிரங்கமாக வெளிக்காட்டுகின்றார். சிங்களப்படைகளால் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள 70 வீத பிரதேசத்தை மீட்கும் துணிவு இல்லை என வாசிங்டன் போஸ்ட் நிருபர் இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டிக் கூறுகின்றார்.

இவ்வாறான இராணுவச் சூழ்நிலைகள் மத்தியில் தென்தமிழீழம் மீதான பொருளாதார முற்றுகையை சிங்களம் இறுக்கிவருகின்றது. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களின் மீதான பகிரங்க தடைகளை விடாப்பிடியாக அமுல்படுத்தும் சந்திரிகா அரசு மட்டக்களப்பில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வாழும் மக்களிற்கான புதிய பாஸ் முறைகள் மூலம் அவர்களது பொருளாதார நகர்வுகளைக் கட்டிப் போட்டுள்ளது.

மட்டக்களப்பின் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் சர்வதேச உதவிநிறுவனங்கள் எதுவிதமான மக்கள் நலன்புரி பணிகளையும் செய்யக்கூடாது என சிங்கள அரசு தடைவிதித்துள்ளது. நோராட் என்ற சர்வதேச நிறுவனம் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட புனர்வாழ்வுப் பணிகள் என்ற திட்டத்தை அமுல்படுத்திய துரிதப் பணிகளை இனக்குரோதத்துடன் பார்த்த சந்திரிகா அரசு, 1998ல் 520 மில்லியன் ரூபாய்கள் செலவில் தொடங்கப்பட்ட அபிவிருத்தி புனர்வாழ்வுப் பணிகளை தடுத்து நிறுத்தியது. இதனை மீளப்பெற பல்வேறு தரப்பினர் முயன்ற போதும் சந்திரிகாவின் நேரடி உத்தரவினால் தடுத்து நிறுத்தப்பட்ட சர்வதேச புனரமைப்புப் பணிகளை மீள செயற்படுத்த முடியவில்லை.



மட்டக்களப்பில் தமிழர் படுகொலைகளுக்குத் தலைமை தாங்கிய பிரிகேடியர் அங்கமன 1997 வலையிறவு பாலத்தில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலின் போது கொல்லப்பட்டார்.

இந்நிலையில், உலக வங்கி, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் மட்டக்களப்பு நீர்ப்பாசனக் குளங்களை சீரமைக்கும் பணிகளுக்கு உதவ முன்வந்துள்ளது. நியாப் திட்டம் என பெயரிடப்பட்ட இத்திட்டத்தை உலக வங்கி செய்யக்கூடாது என மீண்டும் சந்திரிகாவின் உத்தரவு வழங்கப்பட்டது. 13 பாரிய குளங்கள், 12 நடுத்தரக் குளங்கள், 4 சிறிய குளங்கள் என்பனவற்றைத் திருத்தும் பணியை மறுத்ததன் மூலம் தமிழர்களின் மீதான பொருளாதாரத்தடையை சந்திரிகா அரசு தீவிரப்படுத்தியது. குளங்களை சீர்திருத்துவது தமிழர்களின் உணவுப் பஞ்சத்தைப் போக்கும் என்ற மோசமான ஊகத்தின் வெளிப்பாடே இதுவாகும். இன்று மட்டக்களப்பின் 90 வீதமான விவசாய நிலங்களும், 95 வீத


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மான குளங்களும் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ளன என்கிறது ஒரு தரவு. இக்குளங்கள் திருத்தப் படாதவிடத்து நீர்விரயம் ஒரு புற மும், நீர் கிடைக்காத நிலங்கள் தரிசு நிலங்களாக மாறி பழுதடையலாம் என்ற அச்சமும் அப்பகுதி மக்களி டம் தோன்றியுள்ளது என்கின்றது ஒரு ஆய்வு. ஆசிய அபிவிருத்தி வங்கி விடுவிக்கப்பட்ட வவுணதீவு, பட்டிப் பளைப் பிரதேசங்களிற்கு மின்சக்தி களை வழங்க முன்வந்தது. ஆனால் அத்திட்டங்களையும் சந்திரிகா அரசு நிராகரித்துவிட்டது. மேலும் சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடுகளையும் முடக்கிப் போட்டு தென்தமிழீழத்தின் மீது மருத்துவத் தடைகளை ஏற்படுத்த சிங்களம் முயற்சிக்கின்றது.

இவ்வாறான தடைகள் மத்தியில் தென்தமிழீழம் விடுதலைப் போரின் முக்கிய பூமியாக உருவாகி வருகின் றது. விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் சீரமைக்கப்பட்ட தமிழீழ நிர்வாகம் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழீழ காவல்துறை, நீதித்துறை என்பன செயற்படுகின்றன. பெரும் எழுச்சிப் பேரணிகளும், விடுதலை உணர்வை வெளிக்காட்டும் செயற்பாடுகளும் தென்தமிழீழ மண்ணில் இடம்பெறு கின்றன. பல்லாயிரம் போராளிகள் தென்தமிழீழத்தில் பயிற்றுவிக்கப்படு கின்றார்கள் என சிங்கள ஆய்வாளர் கள் கூக்குரலிடுகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியினால் பாதுகாக்கப் பட்ட பூமியை இன்று சந்திரிகா அரசு இழந்து விட்டதாக கொழும்பு இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின் றனர். கொழும்பு மற்றும் சிறீலங்காப் பகுதிகளின் பாதுகாப்பை தென்தமி ழீழம் அச்சுறுத்துவதாக கூறப்படு கின்றது. முன்பு சிங்கள பொலிஸ் அதிரடிப் படையின் கோட்டையாக விபரிக்கப்பட்ட பிரதேசங்களில் இன்று டாங்கிகளும், கவசங்களும் கொண்ட இராணுவம் கட்டிப் போடப்பட்டு வருவது தமிழீழ விடு தலைப் போரின் மற்றுமொரு பரிணாமமாகும்.

—நாதன்—




கூ... காளி மாகாளி
கோலத்தில்...
தந்திரக்காரி!
வேட்டை நாய்ப்பற்கள்
வெறி உமிழும் கண்கள்
தமிழர் தலைபறித்து... அவர்குடலில்
அதைத்தொடுத்து மாலை
வெள்ளைப் புறாவை குத்திக்குதறி
குதூகலித்து...
"சமாதானத்துக்கான யுத்தம்(?)"
நடத்துகின்ற "மலை விழுங்கி"


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# “புதைகுழி ம
# இனங்காண

யுத்தத்தில் காணாமல் போவோர் பின்னர் புதைகுழிகளிலிருந்து எலும்புக் கூடுகளாக மீட்கப்படுவது சர்வசாதாரண ஒரு நிகழ்வு. தமிழீழப் பிரதேசத்தில் சிங்களப் படைகளால் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டோரின் புதைகுழிகள் கண்டு பிடிக்கப் படுவது தொடர்கதையாகிவிட்டது.

சிறீலங்காவிலும் இவ்வாறு அரச வன்முறைக்கு பலியாகிய பல சிங்கள இளைஞர்களின் எலும்புகள் புதைகுழிகளிலிருந்து மீட்கப்பட்டன.

ஆனால் இவ்வாறு மீட்கப்படும் எலும்புக் கூடுகள் குவியலாக கண்டு பிடிக்கப்படுவதால் அவை யாருடையவை என்று அடையாளம் காணுவது சாத்தியமானதா?

டி.என்.ஏ பரிசோதனை சட்டபூர்வமான ஒன்றாக இப்பொழுது உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த டி.என்.ஏ பரிசோதனை என்றால் என்ன? இது எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது?

மனித கலங்களில் இரண்டு வகையான டி.என்.ஏக்கள் உள்ளன. கலங்களின் நியூக்கிளிசுக்குள்ளே இருப்பவை ஒருவகை. அவை குரோமசோம்களாக தாய் தந்தை இருவர்களிடமும் இருந்தும் பெறப்படுவன. இதைவிட எழும்புக்கலங்களுக்குள்ளே நூற்றுக் கணக்கில் சிறிய மைட்டர் காண்ட்ரியா என்ற சிற்றுறுப்புகள் உள்ளன. அவை கலங்களுக்கு ஆற்றலை வழங்குபவை. இவற்றுக்குள்ளும் டி. என். ஏ உள்ளது. இந்த டி. என். ஏ தாய் வழியாக மட்டும் பெறப்படுவது.



செம்மணி மனிதப் புதைகுழிகளை அகழும் நடவடிக்கை 1999



மனிதன் இறக்கும் போது கலங்களுக்குள்ளே உள்ள டி.என்.ஏ சிதைய ஆரம்பிக்கிறது. வெப்பம், ஈரம், புற ஊதாக்கதிர் போன்றவையும் மண்ணில் உள்ள பக்ரீரியாவும் சேர்ந்து சிதைவை வேகப்படுத்துகிறது. ஒவ்வொரு கலத்திலும் டி.என்.ஏயின்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ...ரிதுளர்” ...டியுமா?

இரண்டு நகல்கள் இருக்கின்றன. கலங்கள் சிதையும் போதும் இவையும் சிதைந்து விடுவதால் குரோமசோம் டி.என்.ஏயைப் பயன்படுத்துவது சிரமமாகி விடுகிறது. எழும்புக் கலங்களுக்குள் இருக்கும் மைட்டோகாண்ட்ரியா டி.என்.ஏ, நியூக்கிளிய டி.என்.ஏ யைவிட பாதுகாப்பாக இருப்பதால் இதைப்பயன்படுத்துவது எளிது.

காணாமல் போனவர்களை அடையாளம் கண்டுபிடிக்க அவரது தாய் வழி உறவினர்களில் எத்தனை பேர் முடியுமோ அத்தனை பேர்களது இரத்த மாதிரிகள் எடுக்கவேண்டும். ஏனெனில் குரோமசோம் டி.என்.ஏ போல் மைட்டோகாண்ட்ரியா டி. என்.ஏ அவ்வளவு தெளிவாக இராது. எனினும் இவ்வாறு மேற்கொள்ளப்படும் சோதனைகளில் இலட்சத்தில் ஒன்றுதான் தவறாக வாய்ப்புள்ளது. (ஆனால் குரோமசோம் டி. என். ஏ யில் 10 லட்சத்தில் ஒன்றுதான் தவறுதலாக அமையலாம்). இச் சோதனையின் போது மைட்டோகாண்டிரிய டி.என்.ஏ யின் சோதனையை மட்டும் மேற்கொள்வதில்லை. பல் அமைப்பு எலும்புகளின் நீளம் என்பவற்றின் மூலம் இறந்தவரின் உடலமைப்பு உயரம் என்பனபற்றிய தகவல் கிடைக்கும்.

மைட்டோகாண்ரிய டி.என்.ஏயை பகுத்து ஆராய்வதற்கு முதலில் எலும்புகள் சேகரிக்கப்படுகின்றன. அதன் மீது ஒட்டியிருக்கும் அழுக்கு பக்ரிரியா போன்றவை கழுவி நீக்கப்படுகின்றன பின் அவை மாவாக அரைக்கப்படுகின்றன. அதன்பின் இரசாயனங்கள் பாவிக்கப்பட்டு எலும்புக் கலங்கள் கரைத்து நீக்கப்பட்டு டி.என்.ஏ பிரித்தெடுக்கப்படுகிறது மையநீக்குவிசைக் கருவிமூலம் இதிலிருந்து டி. என். ஏ தனியாக பிரித்தெடுக்கப்படுகின்றன.

பிரித்தெடுக்கப்பட்ட டி.என்.ஏ ஐ சில இரசாயனத் தாக்கங்களுக்கு உட்படுத்தி நிறமூட்டி லேசர் நிறங்களைப் படிக்க முடியும். இந்த நிறவரிசை இறந்தவர்களின் தாய் வழி உறவினர்கள் மைட்டோக் காண்ட்ரியாக்களின் நிறவரிசையுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படும். அவை ஒத்தவையாக இருந்தால் குறிப்பிட்ட எலும்புக்குரியவர் அடையாளம் காணப்படுகிறார்.

இவ்வாறான சோதனைமுறை இன்று உலகில் சர்வசாதாரணமாக மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் இத்தகைய பரிசோதனைகளில் படுகொலைக்கு உத்தரவிட்ட சிறீலங்கா அரசு அக்கறை கொள்ளுமா? என்பது கேள்விக்குரியதே.



கிருஷாந்தி கொலைவழக்கின் மரண தண்டனைக் கைதிகளை நீதி மன்றத்திலிருந்து அழைத்துச் செல்லும் காட்சி

## பாவத்தின் கூலிகள்

மனிதத்தின்முன் குனிந்து
மனச்சாட்சிமுன்னே நாணுகின்ற
பாவத்தின் கூலிகளே!
தலைநிமிர்த்தி முகத்திரை விலக்குங்கள்.
நீங்கள் கருவிகளே எய்தவனிருக்க
அம்பைமட்டும் நோவானேன்.
'வெள்ளடியன் சேவல்கள்' வேறென்னசெய்யும்!
உயிருருவல்தானே உங்களுக்கானது
இங்குமட்டுமல்ல எங்கும்தான்.
'செம்மணிக்கானவர்' நீவிர்மட்டுமல்ல
இன்னும் பலர்.
அவர்கள் சிரித்தபடி எம்தெருவில்
ஆரோகணித்துத் திரிகின்றனர்.
விசாரணையுமில்லை விலங்கிடப்படவுமில்லை
பாவத்தின் முதற்சம்பளம் உமக்கானது.
உங்களிருவரில் தங்கையின் கைகளைக்கட்டியது யார்?
எவனடா கழுத்தை நெரித்தது?
புல்முளைத்துப்போனதா புதைகுழி?
இல்லை. நிலங்கிழித்து நிமிருவர் நாளை.
செம்மணியில் இன்னும் பலரெனச்
சொன்னவன் யாரடா?
செய்ததை மன்னிக்கமுடியாதெனினும்
சொன்னதற்கு நன்றி.

புதுவை இரத்தினதுரை


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம்.




கலாநிதி சி.க.சிற்றம்பலம்
(வரலாற்றுத்துறை, யாழ் /பல்கலைக்கழகம்)

(முன்னிதழ் தொடர்ச்சி)

**சோ**ழரின் ஆட்சியின் படர்ச்சி மட்டக்களப்புத் தமிழகத்திலும் காணப்பட்டாலும் இதுபற்றிய விபரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. வடபகுதியில் மாதோட்டம் சோழ மன்னனின் பெயரால் இராஜ ராஜ புரம் என அழைக்கப்பட்டது. இங்கும் கோயில்கள் கட்டப்பட்டன. யாழ்குடா நாட்டிலுள்ள முதலாம் இராஜேந்திரனுடைய கல்வெட்டு இங்குள்ள கோயிலொன்றுக்கு அளிக்கப்பட்ட தானத்தைக் குறிக்கிறது. இக்கோயில் அமைந்த இடம் நல்லூர் என இனங்காணப்பட்டது. கிபி. 1070—ல் சோழர் ஈழத்தினை விட்டகன்றனர்.

சோழர் அரசில் எற்பட்ட முக்கிய அரசியல் மாற்றங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்ததாலும் ஈழத்தில் முதலாவது விஜயபாகு தலைமையில் சோழருக்கெதிரான கிளர்ச்சி வலுவடைந்ததாலுமே சோழர் ஈழத்தின் மீதான தமது ஆதிக்கத்தை விட்டனர் எனலாம். சோழர் மறைந்தாலும் சோழ ராட்சி ஈழவரலாற்றில் குறிப்பாகத் தமிழர் வரலாற்றில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியது. இதனையே பேராசிரியர் கிங்ஸ்லி டீ சில்வா பின் வருமாறு கூறுகிறார்;




கி.பி.15ம் நூற்றாண்டில் வன்னியில் மக்கள் வாழ்க்கை

சோழராட்சியின் தவிர்க்க முடியாத விளைவு யாதெனில் ஈழத்தின் மதத்துறையிலும் பண்பாட்டுத்துறையிலும் இந்து—பிராமண சைவசமய நடைமுறைகளும் திராவிடக் கலையும் கட்டடக்கலையும் தமிழ் மொழியும் ஊடுருவி மிகப்பலம் வாய்ந்த முறையில் மேலோங்கியமையே. இக்காலந்தொட்டு ஈழத்தின்மீது தென்னிந்தியா செலுத்திய ஆதிக்கம் முற்றும் முழுதாக இந்துமத உள்ளடக்கத்தினையே கொண்டதாகவிருந்தது'

சோழருக்குப் பின் பொலநறுவையில் ஆண்ட அரசர்களுள் முதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு, நிசங்க மல்லன் ஆகியோர் குறிப்பிடத்தக்க பேரரசர்களாவர். முதலாம் விஜயபாகு கந்தளாயிலிருந்த சோழமன்னன் இராஜ ராஜன் பெயரில் அமைக்கப்பட்ட சிவாலயத்திற்குத் தன் பெயரை இட்டான். இதனால் இது விஜயராஜேஸ்வரம் மாவட்டத்திலுள்ள பாளமோட்டைத் தமிழர் கல்வெட்டில் இம்மன்னன் காலத்தில் இக் கோயிலுக்கு அளிக்கப்பட்ட மானியம் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. கந்தளாய் இந்து — திராவிடக் கலாச்சாரத்தின் மையப் பிரதேசமாக விஜயபாகுவுக்குப் பின்னரும் காணப்பட்டது. இரண்டாம் கஜபாகு (கி.பி 1132–1153)


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




கி.மு.3ம் நூற்றாண்டைச் சேர்ந்த தொலைமியால் வரையப்பட்ட முதல் உலக வரைபடத்தில் ஈழம்

தனது கடைசிக்காலத்தை இப்பகுதியில் இச்சூழலிலே கழித்தான் எனக் கூறப்படுகிறது. கோணேசர் கல்வெட்டு இம்மன்னன் கோணேஸ்வரத்திற்கு அளித்த தானத்தைப்பற்றிக் கூறுகிறது. முதலாம் பராக்கிரமபாகு காலத்தில் கிழக்குப் பகுதியில் பொலநறுவை அரசின் மேலாணை பரந்திருந்தது. வடபகுதியைப் பொறுத்தமட்டில் முதலாம் விஜயபாகு காலத்தில் அவன் இப் பகுதியில் மேற்கொண்ட அரசியல் நடவடிக்கைகளுக்குப் பதிலாகக் கலாச்சார நடவடிக்கைகள் பற்றிய சான்றுகளே காணப்படுகின்றன. எனினும் முதலாம் பராக்கிரபாகு இப்பகுதியிலுள்ள ஊர்காவற்றுறை, மட்டுவில், வலிகாமம் போன்ற துறைமுகங்களில் தமிழகத்திலுள்ள சோழருக்கெதிராக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டான் எனச் சூளவம்சம் குறிப்பதும், நயினாதீவில் இப்பகுதித் துறைமுகத்தில் மேற்கொண்ட வர்த்தக நடவடிக்கைகள் பற்றிக் குறிக்கும் இவனது தமிழ்க் கல்வெட்டுக் காணப்படுவது தமிழ்ப் பகுதியில் இவனது மேலாணை பரந்திருந்ததும் புலனாகின்றது. நிசங்கமல்லனின் மேலாணை வடபகுதியிற் பரவியதற்குத் தடயங்கள் காணப்படவில்லை. ஆனால் கிழக்கே கந்தளாய் சிவன்கோயிலில் தனது தாயின் நினைவாக 'பார்வதி தர்மசாலா' என்ற ஓர் தர்ம நிறுவனத்தை அமைத்ததற்கான சான்றுகள் உள.

நிசங்க மன்னனின் பின் கலிங்க வம்சத்தவர் ஆட்சி சில காலம் நீடிக்க கி.பி 1215இல் இந்தியாவிலுள்ள கலிங்க தேசத்திலிருந்து மாகன் என்ற அரசன் தமிழ், கேரளப் படையுடன் வந்து பொலநறுவையைக் கைப்பற்றி நாற்பது ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவன் காலத்தில் வடபகுதியில் சிலகாலம் சாவக நாட்டிலிருந்து வந்த சந்திரபானு ஆட்சிசெய்தான். இவன் மகன் பின்னர் அரசனானான். இவர்கள் தமிழகத்திலிருந்து வந்த பாண்டியரால் தோற்கடிக்கப்பட, மாகனாட்சியைத் தொடர்ந்து வடபகுதியில் பாண்டியரின் கீழ் சேனாதிபதிகளாக விளங்கிய ஆரியச் சக்கரவர்த்திகள் 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் சுதந்திர அரசை ஸ்தாபித்தனர். எனினும் மாகனது ஆட்சி கிழக்கு மாகாணத்தில் தமிழரது செல்வாக்குப் பல வழிகளிலும் ஸ்திரம்பெற உதவியமை குறிப்பிடத்தக்கது.

வடபகுதியிலமைந்த சுதந்திர இராச்சியத்தின் தலைநகராகச் சிங்கைநகர், நல்லூர், யாழ்ப்பாணப்பட்டினம் ஆகிய பெயர்கள் காணப்படுகின்றன. வடக்கே இவ்வாறு சுதந்திர அரசு தோன்ற அநுராதபுர, பொலனறுவைப் பிரதேசம் காடடர்ந்த பிரதேசமாக மாற, சிங்கள மன்னரின் அரசிருக்கை தென்மேற்கே தம்பதேனியா, யாப்பகூவா, குருநாகல், கம்பளை, கோட்டை, கண்டி ஆகிய பகுதிகளை நோக்கி நகர்ந்தது. இவ்வாறு



சோழரால் பொலநறுவையில் கட்டப்பட்ட குமார பொற்குளம் கி.பி.1000 ஆண்டு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



நாகர் வழிபாட்டுச் சின்னங்கள்
கி.மு.6—ம் நூற்றாண்டு


சிங்கள — தமிழ் அரசுகள் வெவ்வேறு புவியியற் பிராந்தியங்களிற் சுழன்றாலும் சிங்கள அரசில் தமிழ்க் கலாச்சாரத்தின் தாக்கம் இல்லாமலில்லை. நிற்க, யாழ்ப்பாண அரசின் மன்னர் தமது சிம்மாசனப் பெயர்களாகப் பரராசசேகரன், செகராசசேகரன் ஆகியவற்றைக் கொண்டனர். ஆரியச்சக்கரவர்த்திகள் என இவர்கள் அழைக்கப்பட்டதற்கு காரணம் இவர்கள் சக்கரவர்த்தி என்ற பட்டத்தினை சூடிய பிராமணர்களாகப் பாண்டிய அரசின் படைத்தளபதிகளாகக் கடமையாற்றியதேயாகும். இவர்கள் கொடிபற்றியும் இலக்கியங்கள் குறிக்கின்றன. செகராசசேகரமாலை தனது சிறப்பாயிரத்தில் இதனை 'விடைக் கொடியும், சேதுவும் நீள்கண்டிகள் ஒன்பதும் பொறித்து மிகைத்த கோவும்' எனக் கூறத் தக்ஷிண கைலாச புராணம் 'இடப வான் கொடி எழுதிய பெருமான் சிங்கையாரியன் சேது காவலன்' எனக் குறிக்கின்றது. இவர்கள் நாணயங்களில் சேது என்ற தமிழ் வாசகம் காணப்படுகிறது. இவ்வாசகம் இராமேஸ்வரக் கரையிலுள்ள சேதுக் கரையிலிருந்து இவர்கள் வந்ததை எடுத்துக் காட்டுகின்றது. இச் சேதுக்கரை பல புண்ணியத் தலங்கள் நிறைந்த பகுதியாகும்.

இதனால் இது ஒரு மங்களப் பொருளாக இவர்களின் நாணயங்கள், கல்வெட்டுக்களில் காணப்படுகிறது எனலாம். இவர்கள் நாணயங்களில் சேது என்ற தமிழ் வாசகமும் அதன் மேல் நந்தியும் காணப்படுகின்றது. இத்தகைய சின்னங்கள் தமிழகத்திலுள்ள பல்லவ நாணயங்களிற் காணப்படுவதும் அவதானிக்கத்தக்கது. எல்லாமாக 17 மன்னர்கள் யாழ்ப்பாண அரசை ஆட்சி செய்தனர். கடைசி மன்னராகிய இரண்டாவது சங்கிலியன் 1619இல் போர்முனையில் போர்த்துக்கேயரால் தோற்கடிக்கப்பட்டான். இவர்கள் நிர்வாக முறை மத்திய காலத்தில் தமிழகம், ஈழம் ஆகிய பகுதிகளில் வழக்கிலிருந்த நிர்வாக முறையை ஒத்துக் காணப்பட்டதோடு இந் நிர்வாகம் தமிழில் நடைபெற்றதும் அவதானிக்கத்தக்கது. இவர்களின் தலைநகர் நல்லூரில் புகழ்பூத்த நூலகமாகிய 'சரஸ்வதிமகால்' என்ற நூல்நிலையம் காணப்பட்டது. தமிழ் கலை, கலாச்சாரம் ஆகியன மேன்மைபெற்ற காலமாக இம்மன்னராட்சி விளங்குகின்றது. எனினும் இவ்வரசின் வரலாற்றில் இரு முக்கிய நிகழ்ச்சிகள் குறிப்பிடத்தக்கன. ஒன்று பதின்நான்காம் நூற்றாண்டில் இவ்வரசு ஈழத்தில் காணப்பட்டது. சிங்கள அரசைவிட வலிமையுடைய அரசாக எழுச்சி பெற்றதோடு அக்காலச் சிங்கள அரசின் மையப் பிரதேசமாக விளங்கிய கம்பளை அரசினை வெற்றி கொண்டதை கேகாலை மாவட்டத்திலுள்ள இவ்வரசின் தமிழ்க் கல்வெட்டு பின்வருமாறுஎடுத்தியம்புகிறது.

சேது

கங்கணம் வேற் கண்ணிணையாற்

கட்டினார் கர்மர் வளைப்



16ம் நூற்றாண்டில் திருகோணமலையில் ஒல்லாந்தரின் கோட்டை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பங்கையக் கைமேற்றிலதும்
பாரித்தார்
பொங்கொலிநீற்
சிங்கை நகராரியனை சேரா
வனுரேசர்
தங்கள் மடமாரதர் தாம்.


ஆரியச் சக்கரவர்த்தியின் வரிசேகரிப்போர் கம்பளை அரசில் வரிசேகரித்தமையும் மடவல என்ற இடத்திலுள்ள சிங்களம் எடுத்தியம்புகிறது. ஆரியச்சக்கரவர்த்தியின் நூற்றுக்கணக்கான கப்பல்கள் பாக்குநீரிணையில் நிறைந்திருந்ததை இபன் பற்றுற்றா என்ற அராபிய யாத்திரிகர் குறிப்பிடுகிறார். இம்மன்னர் மேலாணை தெற்கே நீர்கொழும்பு, சிலாபம் போன்ற பகுதிகள்வரை பரந்திருந்தாலும் பின்னர் நெடுங்காலம் நீடிக்கவில்லை. 14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழகத்தில் எற்பட்ட விஜய நகரப் பேரரசின் எழுச்சியும் ஈழத்தின் வடபகுதியில் அதனது ஆதிக்கப் படர்ச்சியும் ஆரியச் சக்கரவர்த்திகளின் மேலாணை ஈழத்தின் தென் பகுதிக்கு விஸ்தரிக்கப்படுவதைத் தடுத்தன. எனினும் 15 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கோட்டை அரசு ஆறாவது பராக்கிரமபாகு காலத்தில் வலுப்பெற்ற காலத்தில் இந்நூற்றாண்டின் நடுப்பகுதியில் 17 ஆண்டுகள் கோட்டை அரசின் பகுதியாக யாழ்ப்பாண அரசு கோட்டை அரசனின் பிரதிநிதியாகிய சப்புமால் குமாரய என்ற சிங்களப் பெயருடைய செம்பக பெருமாள் என்ற கேரளத் தளபதியால் ஆளப்பட்டாலும் மறுபடியும் யாழ்ப்பாண அரசு தனியரசாகியது. போர்த்துக்கேயரால் இது வெற்றி கொள்ளப்படும் வரை இது நிலைகொண்டிருந்தது. வடமாகாணத்தில் வன்னிப்பகுதி வன்னியர் என அழைக்கப்பட்ட தமிழ் குறுநிலமன்னர்களால் ஆளப்பட்டது. இவர்கள் வருடாவருடம் யாழ்ப்பாணத்திலுள்ள ஆரியச்சக்கரவர்த்திகளின் தலைநகருக்குச் சென்று திறை கொடுத்தாலும் பெருமளவுக்குச் சுதந்திரமாக விளங்கினர். யாழ்ப்பாண அரசின் ஆதிக்கம் தற்போதைய வடமாகாணப் பகுதியிலும் கிழக்கு மாகாணத்தில் வெருகல்ஆறு வரையும் பரந்திருந்தது. திருகோணமலையில் ஆட்சிசெய்த வன்னியர் யாழ்ப்பாண அரசுடன் நெருங்கிய உறவுகொண்டிருந்தனர்.

ஈழத்தில் எப்போது வன்னியர் ஆட்சி தொடங்கியதென்ற கேள்வி எழுகிறது. சோழராட்சியின் இறுதியிலே இதுதொடங்கிவிட்டதுபோற் தெரிகிறது. காரணம் இவ் வன்னியர் தலைவர்கள் சோழப் படைகளான வேளைக்காரருடன் சேர்ந்து போரிட்டதற்கான சான்றுகள் தமிழகத்திற் காணப்பட்டதால் ஈழத்திலும் இவ்வாறே நடைபெற்றிருக்கலாம்போல் தோன்றுகிறது. இவர்களுக்கு அளிக்கப்பட்ட நிலமானியங்களே வன்னிமைகள் எனப்பட்டன. வடபகுதியிற் காணப்பட்ட வன்னிமைகளைவிடக் கிழக்கு மாகாணத்திலும் புத்தள மாவட்டத்திலும் இவை காணப்பட்டன. கிழக்கு மாகாணத்திற் காணப்பட்ட வன்னிமைகளின் வரலாற்றில் குளக்கோட்டன் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறான். இவன் காலம் 13ஆம் நூற்றாண்டாகும். சோடகங்கன் எனவும் இவன் இலக்கியங்களில் அழைக்கப்படுகிறான். தமிழ்நாட்டிலிருந்து வன்னியர்களை அழைத்து வந்து அவர்களுக்கும் திருகோணமலைக் கோணேஸ்வர ஆலயத்திற்கும் இவனளித்த தானங்கள் பற்றிய விபரம் கோணேசர் கல்வெட்டில் உண்டு. இதுபற்றி யாழ்ப்பாண வைபவமாலையிலும் குறிப்புண்டு. தான் கோயிலுக்குக் கொடுத்த தானங்களுக்கு ஊறு செய்தோர் நீறாக அழிவர் எனக் கோணைநாதர் மீது ஆணையிட்டு இவன் கூறியதாக இக்கல்வெட்டில் பின்வரும் செய்யுள் கூறுகிறது.

'மாறாத புனல் பாயும்
திருக்குளமும்
வயல் வெளியும் வருந்திச்
செய்தே
வீறாக என் மரபோற் கீயாமற்
கோணமலை விமலர்க் கீந்
தேன்
பேறான பெரியோரே இதற்
கழிவு
நினைத்தவர்கள் பெட்பு நீங்கி
நீறாகப் போவரிது நிச்சயம்
நிச்சயங்
கோண நிமலர் ஆணை'

குளக்கோட்டன் பற்றித் திருகோணமலையிலுள்ள கோட்டை வாசலிலுள்ள கல்வெட்டும் பின்வருமாறு குறிக்கிறது.

'முன்னே குளக்கோட்டன்
மூட்டுத் திருப்பணியை
பின்னே பறங்கி பிரிக்கவே
மன்னவ
பின்பொண்ணாத தனையி
யற்ற வழித்தேனைத்து
எண்ணாரே பின்னரசர்
கள்'



(தொடரும்)


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



## ஜமாலியா கடற்பரப்பில் ஏற்பட்ட விபத்தில் விதையான வேங்கைகள் நினைவாக

# ஒளி தந்த

திருகோணமலை மக்களுக்கு அது ஒரு கறுப்பு நாள். திருகோணமலையின் போராட்ட வரலாற்றில் அதுவொரு நெருப்புநாள். மாபெரும் வரலாறொன்றை சாதித்த வெற்றியுடன் திரும்பிவரும் வேளையிலே அந்த வீரபுருசர்கள் இருபத்தியிரண்டு பேரைக் கடலலை சுருட்டிக் கொண்டது. சிறீலங்காவின் சிங்களச் சிப்பாய்களைக் கண்ணிவெடியிலே சிதறடித்தவர்கள், இந்தியப்படையை சொல்லிச் சொல்லிச் சுட்டவர்கள்.

ஓ! எத்தனை கோரமான நிகழ்வு அது. ஜமாலியா என்ற அந்த முஸ்லிம் கிராமத்திலே முகாமிட்டிருந்த தமிழினத் துரோகிகளின் (ஈ.என்.டீ.எல்.எவ்) முகாமைக் கடல்மார்க்கமாகச் சென்றடைந்த விடுதலைப் புலிகள் அந்தத் துரோகக் கும்பலைச் சுற்றிவளைத்துத் தாக்க... எதிர்பாராத தாக்குதலாலும், எங்கள் வீரர்களின் அதிவேகமும் கண்டு துரோகக் கூட்டம் ஓரிரு நிமிடங்களிலே தங்கள் முகாமைவிட்டுத் தலைதெறிக்க ஓடிவிட வெற்றி புலிகளுக்கே என்றானது. நூற்றுக்கணக்கான ஆயுதங்கள். எண்ணிலடங்கா தோட்டாக்கள் பெரிய வாளிகளில் படகுகளில் ஏறியது. அந்த ஏராளமான சுமைகளோடு இரண்டு படகுகள் தயாராகின. வீரர்கள் வந்த மூன்று படகுகளில் ஒரு படகின் படகோட்டி (தனிநபர்) பயப்பீதியில் காணாமல் போயிருந்தான். அது விதியின் செயலாக இருந்தது. ஏனெனில் ஏராளமான கனத்தின் காரணமாக இரண்டு



படகுகளும் நீர்மட்டத்தில் நின்றிருந்தன.

அந்த முகாம் வெற்றியடைந்ததுமே மேஜர் கமல் மூலமாக வெற்றிச் செய்தி எங்களின் மத்திய முகாமை வந்தடைகிறது. உடன் சென்ற மேஜர் மதியும் மேஜர் சுரேசும் 'இன்னும் நூறு புதிய புலிவீரர்களுக்குத் தேவையான ஆயுதங்கள் கொண்டு வருகின்றோம்' என வெற்றியின் பெறுமதியைக் குதூகலத்துடன் கூறகின்றார்கள்.

ஆம்! கமலும், மதியும், சுரேசும் ஏற்கனவே பல ஆயுதங்களை சிங்கள, இந்திய இராணுவங்களிடமிருந்து கைப்பற்றியதால் நூற்றுக்கணக்கான புதிய வீரர்கள் உருவானார்கள். ஒரு ஆயுதம் கைப்பற்றப்படும் போது ஒரு புதிய வீரன் கிடைத்ததாக நினைக்கின்ற புரட்சித் தளபதிகள் அவர்கள். நூற்றுக்கணக்கான ஆயுதங்களை வென்றதும் அவர்கள் நூறு வீரர்களைக் கண்டதாகவே ஆனந்தமானார்கள்.

ஆழ நடுக்கடலிலே பயணித்துப் பெரியதொரு வெற்றியைப் பெற்றிருந்தார்கள். அந்த மாபெரும் வெற்றியில் மகிழ்ந்த அவர்களின் மீது பொறாமை கொண்ட இயற்கை பெரும் சீற்றத்துடன் அவர்கள் மீது புயலென சீறியது. அது விதியின் சதி. விடுதலைக்கு உரமிட்டவர்களை, மண்ணின் காவலர்களை விதி எனும் கொடும் அரக்கன் வெற்றியை அனுபவிக்க விடாமல் பேரலைகளால் சர்வநாசம் செய்துவிட்டான்.

காலையில் விழித்தெழுந்ததுமே அடுத்த நடவடிக்கைக்கு அடித்தளம் போடுகின்றவர்கள். நூற்றுக்கணக்கான கண்ணிவெடிகளும், மிதிவெடிகளும் செய்கின்றவர்கள்.

கெரில்லாப் போர்முறையிலிருந்து மெல்ல மெல்ல முன்னேறி, காட்டிலே வீடு கட்டி, பெரிய தோட்டங்கள் செய்து, வாகனங்கள் ஓடிவர வழிகள் வெட்டி, புதிய தேசத்தை கானகத்தில் உருவாக்கி, நூற்றுக்கணக்கான வீரர்களுக்கு பயிற்சியளித்து, காட்டினுள் கால் வைக்கும் ஒவ்வொரு சிப்பாயின் சப்பாத்துக் கால்களும் சிதறுகின்ற மாயத்தைக் காட்டு எல்லையிலே குறிபிசகாது செய்துவிட்டு, தேடிச்சென்று நேரடியாக மோதுகின்ற புதுயுகத்தை அவர்கள் தினசரியாக்கினார்கள்.

1989ஆம் ஆண்டு தமிழீழமெங்கும் முதல் முதலாக 'மாவீரர் நாள்' பிரகடனமாயிற்று. வீரத் தலைவர் மேதகு பிரபாகரனின் ஆசியுடன் எமது வீரர்கள் சாம்பல்தீவு என்ற கிராமத்தை கட்டுப்பாட்டில் கொண்டு வருகின்றார்கள். சாம்பல் தீவு எதிரிகளின் (இந்தியப்படை, ஈ.என்.டீ.எல்.எவ்) மத்திய முகாம்கள் அமைந்திருந்த கிராமம். திருமலை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# 22 தீபங்கள்

நகரத்தின் அண்மையில் அமைந் துள்ள பெரிய கிராமம். அன்று முழுவதும் இந்திய டாங்கிகளும் துரோகக் கூட்டமும் எமது வீரர் களுடன் மோதினார்கள். ஆயினும் கொண்டிருந்த இலட்சியம் அன் றைய தினம் வரை குன்றிட வில்லை. சாம்பல்தீவு தோரணங்க ளாலும் வண்ணவளை வுகளாலும் ஜொலிக்க, ஒலிபெருக்கி வீரர் புகழ் பாடியது. எங்களின் வீரர் கள் சளையாது சண்டை யிட்டு அன்று முழு நாளும் சாம்பல்தீவைக் கட்டுப்பாட்டில் வைத்தி ருந்தார்கள்.

இப்படியான வாழ்வின் மறக்க முடியாத சாதனைகளெல்லாம் படைத்த அந்த மறவர்கள் ஒரு பெரிய சாதனையை வென்றெடுத்து வரும்வழியிலே.. பிரிந்தார்கள். எம்மை விடுப் பிரிந்தார்கள். அவர்கள் வெற்றியுடன் வருகிறார்கள் என்று அறிந்ததுமே சாம்பல்தீவு கிராமம் மகிழ்ந்ததும்... பின் அவர்கள் ஆழ்கடலில் உறைகின்றது தெரிந் ததும் இருண்டதும்.... இன்றைக்கும் மறக்கமுடியாத நினைவு.

சாதனை படைத்தவர்களை கொடிய விதியரக்கன் கடலலையை ஏவி விட்டுவிட்டான் போலும். மக்களின் நெஞ்சங்களிலே வீரமறவர் களாக பவனி வந்தவர்கள் இன்று கதறியழும் மக்களிடை 'மாலையிட்ட மாவீரராய்' மறிவிட்டார்கள். அவர் கள் கட்டியாண்ட தேசம் இவர்க ளைத் தேடி நிற்கின்றது. கமல் மாமா என்ற குழந்தைகளும், சுரேஸ் அண்ணா, மதி அண்ணா என்ற மழலைகளும் விக்கிவிக்கி அழுகின்றார்கள். இனி அந்த மாமா வரமாட்டாரா? என்று கேட்டவர்கள் விழிகளெல்லாம் கண்ணீரே.

இந்திய இராணுவம் தமிழீழத்தை விட்டு வெளியேறுகின்ற அந்தக் காலகட்டத்திலே இந்திய அரசின் கைக்கூலிகளாக செயற்பட்ட ஈ.என். டீ.எல்.எவ் போன்ற துரோகிகள் தாங்களும் இந்தியக் கப்பல்களில் ஏறி தப்பியோட ஆயத்தமாகிக் கொண்டிருந்தர்கள்.

இந்தத் துரோகிகள் தப்பிச் செல் லவிருக்கின்ற அந்த ஓரிரு நாட்களில் மேஜர் கமல், மேஜர் மதி, மேஜர் சுரேஸ் போன்ற தளபதிகள் மூன்று படகுகளில் ஆழக்கடலில் பயணித்து ஜமாலியாக் கடற்கரையிலே தரையி றங்கினார்கள். கரையிலிருந்து சுமார் ஐந்து நிமிட நடை தூரத்திலிருந்த ஈ.என்.டி.எல்.எவ் துரோகிகளின் முகாமை புலிகள் சுற்றிக்கொள்ள, சுமார் ஐந்து நிமிட நேரத்தில் முகாம் வீழ்ச்சியடைந்துவிட அந்த முகாமி னுள்ளிருந்த மிக ஏராளமான ஆயு தங்களையும், எண்ணிலடங்கா ரவைக் கேன்கள், பைகள், ரவைக் கூடுளையும் சுமந்து கரையை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

கரையில் இரண்டு படகுகள் மட் டுமே நிற்கின்றன. ஆம் ஒரு பட கோட்டி பயப்பீதியில் படகோடு போய்விட்டான். இது விதியின் முதற் படி. எமது வீரர்கள் இரண்டு படகு களிலும் ஆயுதங்களை ஏற்றிமுடிக் கின்றார்கள். படகுகள் பாரத்துடன் கடலில் மிதக்கின்றன. அடுத்தடுத்து ஒவ்வொருவராக படகிலேறுகிறார் கள்... படகு புறப்படுகின்றது.

கரையிலிருந்து ஐந்து நிமிடதூரம் படகிரண்டும் அசைந்தாடிச் செல்லு கின்ற நேரத்தில் திடீரென பெரும் லைகளோடு பேரலைகள் ஆர்ப்ப ரிக்க ஆரம்பிக்கின்றன. அதுவொரு எதிர்பாராத நிகழ்வு. படகுகளினுள் நீர் நிரம்பிவிடுகிறது. எட்டாத தூரத் தில் கரை தெரிகிறது. போகவேண் டியது ஏராளமான தூரம். படகுகள் நீரினுள் அமிழ்கின்றன.

கைகளில் ஆயுதங்களும், காலிலே



பூட்சுகளும், நெஞ்சிலே கோல்ஸ்ட ரும் நீந்தமுடியாத நிலையாகிறது. உப்பு நீர் வயிற்றை நிரப்புகிறது. வாந்தியும் வருகிறது. இது சமயம் கரை யிலே இந்திய இராணுவம் வேட்டுத் தீர்க்கிறது. தப்பிச்சென்ற ஈ.என்.டி. எல்.எவ். துரோகிகளின் தகவலில் ஜமாலியாவின் அண்மையிலிருந்த லவ்லேன் நெக்ஸ்டோர்ஸ் முகாமிலி ருந்து வந்த இந்தியத் துருப்பு கரை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

யில் நின்று கண்காணிப்புச் செய்த படி.. துப்பாக்கி முழக்கம் செய்கி றது.

தோட்டா எட்டாத தொலை விலே எங்கள் வீரரின் இரு படகு களும் நீரில் மூழ்கிவிட ... ஆழக் கடலின் அடிமணலிலே கனபாரங் களுடன் மூச்சுக்குப் போராடி மாண் டனர் சிலர்; இனி முடியாது என்ற றிந்து சயனைற்றுக் குப்பியை வாயில் மென்று மடிந்தவர் பலர்... ஆயுதங் களை பிள்ளை என்றும், தாயென் றும் மார்போடணைத்துக் கொண்டு சுவாசிக்க மறந்தவரும் பலர்.

நெஞ்சங்களிலே சாதனையால் படைத்த வெற்றிகளின் அந்த வீரக் காளைகள் துன்பப் பெருமூச்சை அள்ளித் தந்துவிட்டு சென்றுவிட் டார்கள்.

ஆனால் அவர்கள் ஒரு காவியத்தை இறுதி நேரத்திலும் வென்று வந்து தான் வீரச் சதியில் சாய்ந்தார்கள். அவர்கள் சாகின்ற கடைசி நேரத் திலும் ஒரு பெரிய வெற்றியை ஈட் டிய மகிழ்வுடன்தான் கடலில் உயிர் விட்டார்கள்.

அந்த நிகழ்விலே உயிர்துறந்த ஒரு வீரனின் தாய் 'என்னுடைய மகன் கடலில் செத்ததற்கு நான் வருந்த வில்லை. அவன் வீரனாக செத்திருக் கிறான். அதனால் நான் பெருமைய டைகிறேன்' என்று கூறினாள். அந் தத் தாய்க்கு இனிமேல் புலிவீரர்கள் ஒவ்வொருவரும் தன் பிள்ளையா கவே தெரியும்.

வெற்றியுடன் புலிவீரர்களை வர வேற்க ஆயத்தமாகிக் கொண்டிருந்த சாம்பல்தீவு மக்கள் சேதியறிந்ததும் துன்பத்தில் துடித்துப்போனார்கள். திருகோணமலையெங்கும், தமிழீழ மெங்கும் செய்தி கேட்டு மக்கள் இமைக்க மறந்தனர். மூடிய விழிகளி லிருந்து நீர்த்துளிகள். ஒரு குஞ்சை இழக்கவில்லை, தன் குஞ்சுகள் எல் லாவற்றையுமே இழந்தது போல திருமலை மக்கள் ஆறாத்துயரில் ஆழ்ந்து போனார்கள்.

இதில் மேஜர் கமல், மேஜர் மதி, மேஜர் சுரேஷ் போன்ற தளபதிக ளுடன் கப்டன் நேமி, கப்டன் ரகு, கப்டன் குகன், கப்டன் மகேஷ், கப்டன் அன்ரன் ஆகிய இளந்தள பதிகளுடன்.. லெப் கில்பட், 2ம் லெப் கிருபன், 2ம் லெப் அசோக், 2ம் லெப் நவா, 2ம் லெப் சங்கர், வீர வேங்கை சொனி, வீரவேங்கை குமார், வீரவேங்கை விஜி, வீரவேங்கை கருணா, வீரவேங்கை சின்னமதி, வீரவேங்கை சின்னசுரேஷ், வீர வேங்கை காந்தி, வீரவேங்கை பைர வன், 2ம் லெப் சாந்தன் போன்ற வீரர்களும் கடலிலே கரைந்தவர்கள். இவர்கள் மண்ணை நேசித்தவர்கள், மண்ணுக்காக குருதியை நீராய் இறைத்தவர்கள். கடைசி நேரமும் காவியம் படைத்த சாதனையாளர் கள். அவர்கள் மீட்கத் துடித்த தேசம்... அவர்களின்றி விக்கித்து நிற்கின்றது. மண் ஒருநாள் மீட்கப்படும். அன்று இந்த வீரர்களின் கனவு நனவாகும். அவர்கள் இப்போதும் அந்த மண் ணின் காவலர்களாகவே உலா வரு கின்றார்கள். ■■

**மேஜர் கமல்**
**மேஜர் மதி**
**மேஜர் சுரேஸ்**
**கப்டன் நேமி**
**கப்டன் ரகு**
**கப்டன் குகன்**
**கப்டன் மகேஷ்**
**கப்டன் அன்ரன்**
**லெப்டினன்ட் கில்பட்**
**லெப்டினன்ட் கிருபன்**
**2ம் லெப் சங்கர்**
**2ம் லெப் அசோக்**
**2ம் லெப் சாந்தன்**
**2ம் லெப் நவா**
**வீரவேங்கை சின்னமதி**
**வீரவேங்கை குமார்**
**வீரவேங்கை காந்தி**
**வீரவேங்கை சின்னசுரேஸ்**
**வீரவேங்கை பைரவன்**
**வீரவேங்கை கருணா**
**வீரவேங்கை விஜி**
**வீரவேங்கை சொனி**

# என்றும் இருப்பார்

என்மொழி உயர எதனையும் செய்வேன்
என்றவர் பாவலர்ஏறு!
தென்மொழி நடத்தி தமிழ் நிலம் உயர்த்தி
திகழ்ந்தவர் புகழ் வருமாறு!
வன்முறை என்ன! கொடுமைகள் என்ன!
வார்த்தைக்கு விலங்குகள் உண்டோ?
பன்முறை வந்தவன் முறை கண்டும்
பதுங்குதல் என்பதே இல்லை!

விடுதலை உணர்வை விதைத்தவர்! அதற்கே
வியர்வையும் இரத்தமும் வடித்தவர்!
கொடு தலை என்றால் கொடுத்தார் தன்
கொள்கையை செய்படத் துடித்தார்!
கெடுதலை நீக்கி கிளந்தவர்! எந்தக்
கேடுவந்தாலுமே சிரிப்பார்
படுகொலை செய்த மரணமே பார்! பார்!
பாவலர் என்றுமே இருப்பார்.

**அல்லையூர் சொ.சதீஸ்வரன்**


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# போர்ப் பிரகடனம்

ஊசிமுனைகளுக்குள்ளெல்லாம்
உட்புகுந்து ---
உளவெடுத்து அலைகிறது காற்று,
அதற்குள் ---
உருமறைப்புச் செய்கின்றன;
இலைகளும், குழைகளும்

"சந்திகள்" காவலுக்கு இருக்கின்றன.
மிதிவெடிகளைத் தெருவில் ஊன்றிவிட்டு
ஒழுங்கைகளுக்குள் கதியால்கள்
ஒழிந்திருக்கின்றன.
மதில்களும், மரங்களும்
மறித்தடிப்பதற்குத் தயாராக!

முனைகளைத் தீட்டின முட்கள்.
பதம் பார்க்க ஆயத்தமாக
கற்கள் கூர் பெற்று!
பட்ட மரங்கள் மீள மீள
வைரம் கொள்கின்றன;
புயலை எதிர் கொள்ள.

முடியும்---? எங்கும் குரல்கள் பலமாக
ஓங்கி ஒலிக்கின்றன முனைப்போடு.
போர்ப் பிரகடனம் விடுக்கின்றன
போர் அணிகள்.

புயல் வருகிறது
சடுதியாய்க் கனதியாய்
அசுர வேகமெடுத்து---

காற்று எச்சரிக்கை அரவம்
செய்கிறது.
மின்னல் வேகத்தில் யாவும்.
சந்திகள் தொடுக்கின்றன போரை
கதியால்களின் விசையில்
சடசடக்கின்றன;
மிதிவெடிகள்.
கற்களும் முட்களும் எழுந்து
புயலின் முகத்தில் ஓங்கி
அறைகின்றன.
மரங்கள் வளைந்தும் நிமிர்ந்தும்
கிடையாயும் தாக்கித்---தாக்கி---
பஸ்மீகரம் செய்கின்றன புயலை.
பாவம்.
செந்நீர் தெளித்து நிலம் பரவ
மூச்சிறைத்து விழுகிறது புயல்.
புயலின் இறக்கைகள் நறுக்கப்பட்டு
எச்சங்கள்---
காட்சிக்கு வைக்கப்படுகின்றன.
புயலுக்கு நேர்ந்த பரிதாபத்தைப்
பலரும் பார்க்கின்றார்கள்—
"அதர்மம்"
காட்சிப் பொருளானதை நினைத்து!

மரங்களும் மதில்களும்
கை கொட்டி மகிழ
சந்திகள் புன்னகைக்கின்றன.
எதையோ---
சங்கரித்துவிட்ட நிமிர்வோடு!

-வேலணையூர் சுரேஸ்-

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# எம் தேசத்தைக் காக்க

# எமது படைவலுவை பெருக்கிடுவோம்

புலம்பெயர் வாழ் தமிழீழ மக்களே!! எமது விடுதலையை விரைவாக்க கிடைத்துள்ள அரிய சந்தர்ப்பம் இது. அதற்கு நாம் விரைந்து பணிசெய்வோம். இதைத் தவறவிட்டால் நாங்கள் மாபெரும் வரலாற்றுத் தவறை இழைத்தவர்கள் ஆவோம். விடியலுக்கான வேளை வந்துவிட்டது. அதனைச் சரியாகப் பயன்படுத்தி விடுதலையை விரைவாக்க தேசியத் தலைவரவர்களின் வழி நடாத்தலில் களம் பல கண்ட தளபதிகளும், தானைப்புலி மறவர்களும் அவர்களோடு களமாட தமிழீழ மக்கள் சக்தியும் திரண்டுள்ளது. எதிரியிடமிருந்து பறித்தெடுத்த கனரக ஆயுதங்கள் தமிழீழ விடுதலைக்கு களமாடக் காத்திருக்கின்றன. புலம்பெயர்ந்த தமிழர்கள் செய்ய வேண்டியது என்னவெனில் தமிழீழ விடுதலைப் படைகளின் சுடுவலுவை (fire power) அதிகரிக்க நிதிவளத்தைப் பெருக்க வேண்டும்.

இன்று சந்திரிகா படைகள் பல பிரதேசங்களில் விரட்டியடிக்கப்பட்டுள்ளன. தமிழர் படையணிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் இப்பிரதேசங்களில் நிலை கொண்டுள்ளனர். *1996*-இல் பறிபோன யாழ் பிரதேசம் மீட்கப் படவேண்டும். அன்று யாழ் குடாநாட்டிலிருந்து வன்னிக்கு வந்தது எமது தேசியத் தலைவரின் தீர்க்கதரிசனமான வழிகாட்டுதலே காரணமாகும். ஏனெனில் யாழ் குடாநாட்டைக்கைப்பற்றும் நடவடிக்கையில் குறைந்தது *50,000* மக்கள் கொல்லப்படுவர் என இராணுவம் கணிப்பிட்டிருந்தது. மேலும் எதிரியை எதிர்த்து போராடக்கூடிய மரபுவழி படைக்கலங்களோ அல்லது கொரில்லாத்தாக்குதலை மேற்கொள்ளக் கூடிய தரையமைப்போ இருக்கவில்லை. ஆனால் இன்று நாம் பெருந்தொகையான மரபு வழி படைக்கலங்களோடு நிற்கிறோம். அத்துடன் மக்கள் சக்தி என்ற மாபெரும் சக்தி தமிழீழத் தேசியத் தலைவரின் பின்னே அணிதிரண்டு நிற்கிறது. அத்துடன் எமது வழங்கல் நிதி வலுவைப் பெருக்கி எறிகணைகள், உந்துகணைகள், வெடிபொருட்கள் தட்டுப்பாடின்றி களமுனைக்கு அனுப்பப்படுமாயின் வெற்றிக்கனியை இலகுவில் சுவைப்போம்.

பொருளாதார ரீதியான பிரச்சனை, பெருமளவில் இராணுவத்தினர் தப்பியோடுகின்றனர், புதிதாக






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எவரும் படையில் இணையாமை, ஆக்கிரமிப்புப் பிரதேசங்களை தக்க வைக்க முடியாமை, யாழ்ப்பாணத்திலுள்ள படையினருக்கு விநியோகத்தை மேற்கொள்வதிலுள்ள தடங்கல்கள் என இராணுவம் எல்லா வழிகளிலும் பிரச்சனையை எதிர் கொள்கிறது.

யாழ் குடாவில் மாத்திரம் 40,000 இராணுவத்தினர் முடக்கி வைக்கப் பட்டுள்ளனர். யாழ்குடாநாட்டு சனத் தொகையைப் பொறுத்தமட்டில் 8 தமிழருக்கு ஒரு இராணுவம் என்ற ரீதியில் குடாநாடெங்கும் இராணுவ மயப்படுத்தப் பட்டுள்ளது. அதைத் தக்க வைப்பதற்கென அதைவிட பெரிய படையொன்று யாழ் குடா நாட்டிற்கு பாதை திறக்கவென வந்தது, படுதோல்வியடைந்து வந்த இடத்திற்கே திருப்பியடிக்கப்பட்டுள்ளது. இன்று எதிரியானவன் தனது மனோபலத்தை இழந்து தறிகெட்டு ஓடும் நிலையிலுள்ளான். இது எமக்கு சாதகமான சந்தர்ப்பம் அவர்கள் திரள முன்னர் நாங்கள் முந்துவோம்.

இன்று தென்தமிழீழத்தின் பல இடங்களில் பெருமளவிலான படை முகாம்கள் மூடப்பட்டு அங்கிருந்த பெருந்தொகையான இராணுவத்தினர் தள்ளாடியிலும், ஆனையிறவிலும் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் பெருமளவிலான தென்தமிழீழப் பிரதேசங்கள் தற்காலிகமாக விடுவிக்கப் பட்டுள்ளன. இதை நிரந்தரமாக்க வேண்டுமாயின் எதிரிக்கு யாழ்குடாவில் வைத்தே சமாதி கட்டவேண்டும்.

அதற்கு புலம்பெயர்ந்த மக்களின் செறிந்த பங்களிப்புத் தேவை. இன்று எமது தாயகத்தின் தலைப்பகுதியில் கூடுகட்டும் எதிரியை குலைத்து அடித்து நாளையே நாம் நிரந்தர வெற்றி பெறுவோம்!!

ஒரே நேரத்தில் தாக்குதல் யுத்தத்திலும் தற்காப்பு யுத்தத்திலும் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது. தற்காப்பு யுத்தத்தின் மூலம் எதிரி எமது பிரதேசத்தை ஆக்கிரமிப்பதிலிருந்து பாதுகாக்க வேண்டும். தாக்குதல் யுத்தத்தின் மூலம் ஆக்கிரமித்துள்ள எதிரியை கொன்றொழித்து எமது பெருந்தொகையான பிரதேசங்களை மீட்கமுடியும். இதற்கு பெருந்தொகையளவு சுடுவலுவும், பின்தளவலுவும் (மருத்துவம், உணவு, உடை) ஏற்படுத்துவதற்கான நிதிவளத்தை தருவது உங்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

சிறு கரந்தடிப்படையாக தோன்றிய எமது இயக்கம், இன்று தரைப் படை, கடற்படை, விமானப்படை, பீரங்கிப்படையென மரபுரீதியாக வளர்ந்து நிற்கிறது. நாங்கள் உங்களிடம் கேட்பதெல்லாம் நிதிப்பலம் ஒன்றை மட்டுமே.

அன்பார்ந்த புலம்பெயர் வாழ் தமிழீழ மக்களே! இன்றைய யதார்த்தத்தை ஒருகணம் சிந்தித்து பாருங்கள். அந்நிய நாடுகளிலிருந்து எத்தனை காலம்தான் வாழ்க்கையை போக்குவது. தாயகத்தில் உங்கள் உடன்பிறப்புக்கள் படும் அவலங்கள் உங்களை எட்டவில்லையா? உச்ச பட்ச நிதிப்பங்களிப்பை செலுத்தாமல் இருக்க உங்கள் மனச்சாட்சி இடங்கொடுக்குமா?

எமது மானம், மரியாதை, மொழி, கலாச்சாரம், எல்லாவற்றையும்விட எம்முயிரினும் மேலான தாயகம் போனபின்னே வெறும் பணம் இருந்து என்ன பலன்? உங்கள் மனச்சாட்சிப்படி முடிவெடுங்கள்! எல்லோரும் அணிதிரண்டு அள்ளி வழங்குங்கள் நிதி வலுவை. நாளையே எமது தேசம் மலர்ந்து சிரிக்கும்.

■■

# மகளுக்கொரு தாலாட்டு




கருவாகி உருவாகி என்னுள்ளே உதித்திருக்கும்
இளம் புயலே......, என் மகளே! சிங்களத்தின்
இனவாதப் புயல் சீற்றம் எமைத் தள்ளக்
கடல்தாண்டிக் கரை சேர்ந்தேன்! அன்று
மலையகத்தில் தவழ்ந்த மகள் உன் தாய்
அறிக நீயே....! இன்று தமிழகத்தில் காலூன்றி
நின்னைச் சூல் கொண்டேன்..., வருக நீயே !
மண்ணற்ற மக்களாய் நம் சுற்றம் மேதினியில்...
எண்ணற்ற அவலத்தை இடியாய்த் தாங்கி....
கண்ணற்ற ஏதிலி நிலை கைவிட்டு போவதற்காய்.....
வல்வெட்டித் துறையின்று உதித்தான் எம் அண்ணன் !
ஈழத்தின் தவப்புதல்வன்.... உன்றன் தாய்மாமன் !
நீ பிறக்கும் நன்னாளில்.... உன் மாமன் உத்தரவால்,
கிழக்கும் சிவக்கும்....! தமிழீழம் பிறக்கும் !
பறக்கும்.... பறக்கும்....புலிக்கொடி பறக்கும் !!

-சாரதா கதிரவன்--



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# வெற்றியின் பின்னால்

சடை விரித்தது போல அகலப் பரந்திருந்தது புளுகுணாவ காட்டுப்பகுதி. எப்ப வருவார்கள்? வந்தால் வெட்டிவீழ்த்துவோம் என இறுமாந்திருந்தனர் புளுகுணாவ முகாம் சிறீலங்கா சிறப்புப் படையினர். அதுபோக, கிழடுகட்டை என எல்லையைப் பாதுகாக்கவென சிங்கள மக்களின் ஊர்காப்புப்படைகள். இத்தனைக்கும் மத்தியில் எதிரியின் கண்களில் மண்ணைத் தூவி, பல மைல்கள் கால் நடையாகவும் சேறு, சகதி, முள்தரைகள், ஆறு, குளம் என எத்தனையோ தடைகளைத் தாண்டியும் எதுவரினும் சளையோம் என இறுமாந்து எதிரியின் கொட்டமடக்க துடிக்கும் புலிப்போராளிகள். இத்தனைக்கும் மேலாய் அழியப்போகும் புளுகுணாவ எதிரிமுகாமின் எச்சம் பார்க்கவும் தம்மடியில் தவழ்ந்த போராளிகளின் பாரம்குறைக்க, அவர்களோடு தோள்கொடுக்க, போராளிகளோடு இணைந்து நிற்கும் தென்தமிழீழத்துமக்கள். இன்னும் தம் முலையூட்டிய பாலோடு வீரத்தையும் மானத்தையும் சேர்த்தூட்டிய தமிழ் அன்னையர்— என புலிகளோடு புலிகளாகி மறைந்திருந்தனர்.

'காலம் பனித்து விழ' நேரம் கிட்டக்கிட்ட நெருங்கித் தன் புள்ளியைத் தொட முனைந்து கொண்டிருந்தது. போராளிகளுக்கும் அவர்களோடிருக்கும் அந்த மனிதர்களுக்கும் இதயத்துடிப்பு வேகமாகிறது. உறைந்திருக்கும் மௌனத்தின் மீது அந்த துடிப்பொலி அதிர்கிறது.



களத்தில் நேரும் சிறுதவறும் அந்தக்களத்தின் நிலவரத்தையே மாற்றிவிடும். நாம் அடைய வேண்டிய பல இலக்குகளை அடைய முன்னரே பல இழப்புகளை நாம் சந்திக்க வைத்துவிடும். ஆகவே வேகமாகவும் நிதானமாகவும் தலைவரின் கனவோடும் தளபதியின் நேரிய கட்டளையின் படியும் புலிப்படையணி, இறுமாந்து அகலக்கால் விரித்து பரந்து படுத்திருக்கும் பேய்களின் பாசறை நோக்கி நகர்கிறது. கூத்தும் கும்மாளமுமாக அடுத்து தன் தலையில் விழப்போகும் இடியைப்பற்றித் தெரியாமல் இருந்தான் எதிரி. நேரம் சரியாக இரவு 12.18 பெரியதொரு வெடியோசை. போராளிகள், தளபதிகள் மற்றும் எல்லோரினது முகங்களும் இருண்டுவிட்டன. ஏதும் பிசகாகிவிட்டதோ அல்லது எதிரி கண்டு தாக்கத் தொடங்கிவிட்டானோ? யாருக்கும் தெரியாது. எதிரி விதைத்து வைத்த கண்ணியொன்று எமது போராளியான 2ம் லெப். மருதவாணனின் காலைப்பதம் பார்த்துவிட்டது. நிலைமை மோசமடையப் போகிறது. தலைவர் தாக்குதலுக்கான ஆயத்தத்தின்போது இறுதியாகக் கூறிய இறுக்கமான வார்த்தை, கட்டளைத் தளபதியின் காதுகளில் ஒலித்து கண் முன் வந்து போகிறது. கருணாம்மான் இது ஒரு கடும் சண்டையாக இருக்கும். இழப்புக்கள் கூடுதலாக இருக்கும். என்றாலும் போராளிகளின் மன உறுதிகளின் முன் இவை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

யெல்லாம் சுலபமே. ஆகவே நாம் எதிலும் நிதானத்தோடும் மிக எச்சரிக்கையோடும் செயற்படுவோம். வெற்றி நிச்சியம் எனக்கூறி அனுப்பினார். ஆனால் கால், தொடையுடன் துண்டாடப்பட்ட நிலையிலும் என்னைப்பற்றி கவலைப்படாதையுங்கோ. நீங்கள் கெதியாய் போய் முகாமைத் தாக்குங்கோ என்று சொல்லி தன்னைக்கடந்து செல்லும் ஒவ்வொரு போராளியையும் வழியனுப்பி வைக்கின்றான் அந்த வீரப்புலி. கண்ணி வெடித்த சத்தம் கேட்டவுடன் மிகச் சாதுரியமாக தன்னுடைய வலியையும் பொருட்படுத்தாமல் தனது காலை இழந்தது பற்றிக் கவலைப்படாமல், எதிரியை திசைதிருப்பும் நோக்குடன் ஒரு காட்டுப்பன்றியைப் போலச் சத்தமிட்டு நிலைமை மோசமடையா வண்ணம்பார்த்துக்கொண்டான் மருதவாணன். தனது வேதனையின் மத்தியிலும் ஏற்றுக் கொண்ட இலட்சியத்தில் சற்றும் தளராத இந்த வீரனின் செயல் எம்மை மெய்சிலிர்க்க வைத்தது. வெடிச்சத்தம் கேட்டதும் எதிரி உசார் அடைந்தான். சத்தத்தைத் தொடர்ந்து பன்றியின் கதறல் ஒலி கேட்டதும் எதுவோ காட்டு விலங்கு மாட்டிப்போட்டுது என்று நினைத்து அமைதியாக இருந்து விட்டான். நேரம் சரியாக 12.20. எமது படையணிகள் எல்லாம் தத்தமது இலக்குகளுக்கு ஏற்றமாதிரி நிலையெடுத்து தளபதியின் கட்டளைக்காக காத்திருந்தனர். தாக்கு என இறுதிக் கட்டளை கிடைத்ததுதான் தாமதம், ஒரேநேரத்தில், மிகப்பெரும் அதிர்வுடன், வேகத்துடன், ஒருமித்த தாக்குதல் தொடங்கியது. எதிரியின் தலையில் எண்ணற்ற குழலிகள் கொட்டத் தொடங்கின. வேகமுடன் பரவிவரும் காட்டுத்தீயின் முன்னால் அசைந்தாடும் நாணற்புற்கள் போல எதிரி மடிந்தான். எதிரிகளில் பலர் கொல்லப்பட்டனர். சிலர் தப்பியோடினர். முகாம் தீப்பற்றி எரிந்தது. எங்கும் வெடியோசை கூச்சலும் ஆரவாரமும் ஓங்கி ஒலித்தன. வேகம் வேகம் எதிலும்வேகம் எல்லாவற்றிலும் வேகம் புயலாகப் புலிகள் சுழன்றடித்தனர் புயலடித்த களமாயிற்று படைமுகாம். ஆயுதங்கள் அள்ளப்பட்டன. ஆட்டிலறி, ஆம் ஆம் எதிரி எங்கள் பூமியை எந்தநாளும் கலக்கியடிக்கப் பயன்படுத்திய அந்த ஆட்டிலறி எம்மவர் கண்களில். கண்கண்ட அந்தப் படைக்கலம் புலிகளின் கைகளில் சேர்ந்தது வெற்றி, மகிழ்ச்சி. எதிரிப்படை முகாம் அழிக்கப்பட்டதொரு மகிழ்ச்சி. அதொரு வெற்றி. எதிரியிடம் இருந்த சுடுவலு கூடிய ஆட்டிலறி எம்கை சேர்ந்தது இன்னொரு வெற்றி. அது ஒரு புது மகிழ்ச்சி. வேகமாகச் செயல்பட்டன. எமது படையணிகள். நாற்பக்கமும் எதிரிமுகாம்கள். சூழவும் சிங்கள மக்கள் கூக்குரலிட்டவுடன் ஓடிவரும் தூரத்தில் இருந்தன. ஆறாம்கட்டை இராணுவமுகாம் பத்தாம்கட்டை முகாம்கள் எல்லாம் அருகருகே இருந்தன. ஆகவே எவ்வளவு குறுகிய நேரத்தில் கைசேர்ந்த ஆட்டிலறியையும் மடிநிறைந்த ஆயுதங்களையும், வெற்றிக்கு வித்தாகிய மாவீரர்களின் புகழுடல்களையும் எம்முடைய பிரதேசங்களுக்கு நகர்த்த முடியுமோ அவ்வளவு விரைவாக நகர்த்த வேண்டும். இந்தப் பணியை ஒழுங்காகச் செய்து முடிக்கும் கடமையை படுவான்கரைப் பிரதேசமக்களுக்கு தளபதியால் வழங்கப்பட்டிருந்தது. சண்டை தொடங்கிய மறுகணமே காடுவெட்டிப்பாதை திறக்கும் பணியில், இயந்திர கெதியில் மக்கள் ஈடுபட்டனர். அது பூரண வெற்றியுமாகிவிட்டது. படுவான்கரைப் பிரதேசத்தைச் சூழவுள்ள மக்களைக் கொன்றொழிக்கப் பயன்பட்ட ஆயுதம் சிங்கள வெறியர்களின் நெம்புகோல், எம்மக்களால் பல மைல் தூரத்திக்கு இழுத்து வரப்பட்டு புலிகளின் பாசறையில் சேர்க்கப்பட்டது. உண்மையில் இந்தப் பணியில் போராளிகள் பல சிரமங்ளையும், கஸ்டங்களையும், துன்பங்களையும் சந்தித்தாலும் கிடைத்த வெற்றி இதையெல்லாம்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

துடைத்தெறிந்து விட்டது. தாயகத்தின் மீது கொண்ட பற்றும், தலைவரின் மேலுள்ள அளவிடமுடியாத விசுவாசமுமே இப்பணியை வீரமுடன் செய்யத்தூண்டியது. காலத்தில் இந்தச் செயலும் இந்த அர்ப்பணிப்புகளும் இந்த நிகழ்வுகளும் அழியாதவை. எதிரியின் படைமுகாமைத் துவம்சம் செய்து வெற்றியுடன் திரும்பும் வேங்கைகளின் முன் நெஞ்சை உருக்கும் ஓர் காட்சி, எனக்குப் பிரச்சினையில்லை, நான் சத்தம் போடமாட்டன், என்னைப் பற்றி யோசியாமல் முன்னுக்குப்போய் அடியுங்கோ எனக்கூறி தோழர்களை வழியனுப்பி விடைகொடுத்த அந்தப் போராளி இப்போது அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான். முகாம் வீழ்ச்சியடைந்த மகிழ்ச்சி அவன் இதழ்களில் தெரிகிறது. எல்லோரின் விழிகளும் ஈரமாகித் தத்தளிக்கின்றன. அன்று அந்தக் கணத்தில் இவன் வேதனையின் வலியைத் தாங்கமாட்டாமல் சத்தமிட்டிருந்தால் அந்த இராணுவமுகாம் மீதான தாக்குதலே தடம்மாறிப்போயிருக்கும். இழந்த தோழரின் நினைவுகள் மனதில் நிறைந்திருக்க, கொட்டமடக்கிய வெற்றிக்களிப்புடன் மக்களமைத்த காட்டுப்பாதையினூடு மீண்டு கொண்டிருந்தன புலியணிகள், எதிரிப்படையில் கைப்பற்றிய ஆயுதங்களோடும் வேறு தளபாடங்களோடும் அந்த மீள்கை நடந்து கொண்டிருந்தது. சிறப்புப் படையணிகளின் அயராத உழைப்பும், கடும்பயிற்சியும் மக்களின் பங்களிப்புமே இந்த அளப்பரிய வெற்றியை நாம் பெற வழியமைத்தன. இத்தாக்குதலில் மகளிர் படையணியின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. பிரபாகரனின் படைக்கேயுரிய துணிவு, தந்திரம், உறுதி, வலிமை எல்லாம் இணைத்து எதிரியின் கோரப்பல்லையுடைத்தது. இந்த வலிந்த தாக்குதல் எமது போராட்ட வரலாற்றில் ஒரு சிறப்புப்பதிவே. தலைவரின் கனவை நனவாக்கிய பெருமிதத்தோடு பாசறைக்குத் திரும்பிக் கொண்டிருந்த புலிகளுக்கு கையசைத்து விடைகொடுத்தாள் வனத்தாய். காட்டுப் பறவைகள் வாழ்த்துப்பாடி வழியனுப்பின. புதிய சூரியன் பொலிவுடன் எழுவான் திசையில் உதித்தான்.

# வருக !

## இரண்டாயிரம் ஆண்டே வருக !

**வ**ருக ! இரண்டாயிரம் ஆண்டே !

எமை அழித்தவர் தலை
திருக நீ பாய்ந்து வருக!

புலிவீரர் திண்டோள் வெற்றி
பெருக எம் கண்முன் வருக!
நஞ்சினை விட்டுயாம் அமிழ்தம்
பருக வருக! தமிழீழம்!
பழுக்க வருக வருகவே!

இடிக நின் வரவில் கொடியர்
பாசறை திசைகள் எட்டும்!
ஒடிக நின் காலின் வைப்பில்
தமிழனை மிதித்த கால்கள்!
முடிக தமிழீழ மாமண்ணில்
கொடுங்கோலர் மூச்சும் பேச்சும்!
விடிக எம்புலிகள் கண்முன்
புதுக்காலை விடிக! விடிகவே!

அறிக! போனநூற்றாண்டில்
அடிமையராய் நின்றழிவுற்றோம்!.
எறிக! ஒளிநெருப் பெறிக!
விடுதலைப் பொன் ஒளிவெள்ளம்
செறிக எங்கணும்! செத்துச்
செத்து வாழ்ந்த வாழ்வொழிக!
முறிக! நின் கால்பட்டெம்கை
விலங்குகள் முறிக! முறிகவே!

**காசி ஆனந்தன்**




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கொக்கிளாய் முகாம் தகர்ப்பு

## பதினைந்தாம் வருட நினைவெழுச்சி

ஓயாத அலைகள் மூன்று ஓயாது சென்று கொண்டிருக்கும் இவ்வேளையில், தமிழீழ விடுதலைப் புலிகளினால் 1985 ஆம் ஆண்டு 2ம் மாதம் 13ம் திகதி கொக்கிளாய் இராணுவ முகாம் மீது நடாத்தப்பட்ட தாக்குதலே தமிழீழ வரலாற்றில் முதலாவது இராணுவ முகாம் தகர்ப்பு ஆகும். சிங்களப்படைகளின் இராணுவத்தளங்களையும் தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்கியழிப்பார்கள் என கிழட்டுநரி ஜெயவர்த்தனாவை அதிர வைத்த தாக்குதல்.

கொக்கிளாய்ப் பகுதியில் அமைக்கப்பட்ட இவ் இராணுவ முகாம் தமிழர் நிலங்களை பறிக்கும் நோக்கிலும், தமிழீழ விடுதலைப்போராட்டம் தென்தமிழீழத்திற்கு விரிவுபடுத்தப்படுவதை முடக்கும் நோக்கிலும் அப்போதைய பாதுகாப்பமைச்சர் லலித் அத்துலத்முதலியின் நேரடி மேற்பார்வையில் அமைக்கப்பட்டது. இருநூறிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இம்முகாம்களில் தங்கியிருந்து தமிழர் நிலங்களைப் பறித்தெடுத்து சிங்களக் கைதிகளை குடியமர்த்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில் விடுதலைப் புலிகள் முதன்முதலாக தமிழீழத்தில் சிங்களப்படையின் முகாம்களை அழித்தொழிக்கும் முயற்சியில் இறங்கத் தயாராகினர்.

கொக்கிளாய் முகாம் தாக்குதல் 13 பெப்ரவரி 1985 ஆம் ஆண்டு நடைபெற்றது. இத்தாக்குதல் 5மணித்தியாலங்கள் நீடித்தது. இதன் போது இராணுவத்தினர் முகாமை விட்டு தப்பியோடி காடுகளுக்குள் புகுந்து கொண்டனர். தமிழீழ விடுதலை வரலாற்றில் முதல் முகாம் தகர்ப்புத் தாக்குதலின் போது நூற்றிற்குமேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். முப்பதிற்குமேற்பட்டோர் காயமடைந்தனர். இதன் போது நாயாறு முகாமிலிருந்து உதவிக்கென வந்த இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலின் போது 30ற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இதன் விளைவாக திரியாய், கொக்கிளாய் பகுதிகளிலிருந்து இராணுவம் பின்வாங்கி பதவியாவில் நிலைகொண்டது.

இவ்வீரமிகு தாக்குதலில் 16வேங்கைகள் வீரச்சாவடைந்தனர். அவர்கள் கனவான இதயபூமி மீட்பு நனவாகியுள்ள இந்நிலையில், வணங்காமண்ணில் விதையாகிப்போன இவ்வீர மறவர்களுக்கு எமது நினைவு வணக்கம்.

### கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதலில் வீரச்சாவடைந்த வேங்கைகள்

| | | |
|---|---|---|
| 1. | லெப்டினன் சைமன் | (கனகரட்ணம் ரஞ்சன்) |
| 2. | மயூரன் | (குணசிங்கராஜா துவாரகன்) |
| 3. | நிமால் | (கந்தையா ஜெயந்தன்) |
| 4. | தனபாலன் | (தியாகராஜா வரதராஜா) |
| 5. | சொனி | (சதாசிவம் அன்ரனி) |
| 6. | ரவி | (நமசிவாயம் தர்மராஜா) |
| 7. | காந்தரூபன் | (பொன்னையா சந்திரகுமார்) |
| 8. | ஜெகன் | (சண்முகராஜா பிரபாகரன்) |
| 9. | சங்கரி | (பாலசுந்தரம் கணேசன்) |
| 10. | வில்சன் | (எம்.கே.ஹேமசிறி) |
| 11. | மகான் | (கதிரவேல் செல்வராஜா) |
| 12. | லட்சுமணன், காத்தான் | (துரைசாமி ஸ்ரீமுருகன்) |
| 13. | கெனடி | (கனகசபை செல்வராஜா) |
| 14. | ரஞ்சன் | (பொன்னையா சண்முகநாதன்) |
| 15. | வேதா | (கனகு ராசநாயகம்) |
| 16. | காந்தி | (கந்தையா பரமேஸ்வரன்) |

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தீச்சுடர்




தெருப்படுகை இருட்டின் பிடிக்குள் மெதுமெதுவாக நுளைந்து தவித்துக் கொண்டிருந்தது. கச்சான்காறி தனது பழைய பையை மிகுதிக் கச்சானால் நிரப்பிக் கொண்டிருந்தாள். ஐந்தாறு வெள்ளைக் கொழும்பான், வெம்பிய தோற்றத்தில் அவளது பட்டறையிலிருந்தது. காலை தொடக்கம் கச்சான் விற்பனையிலிருந்த அவளது முகம் சுருங்கி, வாடி இருந்தது. தெருப்புழுதி அவளது முகத்தில் பிரண்டு மேலும் அவளது முகத்தை சோகமாக்கி இருந்தது.

மகனும், நானும் தெருவில் வந்து கொண்டிருக்கிறோம். கீச், கீச் என்கின்ற குருவிகளின் விடைபகரும் ஓசை காதுள் வந்து பட்டுத் தெறிக்கிறது. கிளிகளின் படையொன்று ஊ என்ற சிறகடிப்பின் ஒலியோடு கிழக்குப் பக்கமாகப் பறக்கிறது. ஆங்காங்கே தெரிந்த குடிசைகள் எமது கண்ணிலிருந்து மறைகின்றன. எனது மகன் மிகவும் சுவாரஷ்யமாக "அப்பா கிளி பறக்கிறது வைட்... வைட்டப்பா" என்று தனது மழலையால் என் காதை நிறைத்துக் கொண்டு வருகிறான். எமது கண் திடீரென ஒரு இடத்தில் பதிகிறது. பிறவுன் நிற சேட்டு, கறுப்புக் காற்சட்டை, மூன்று அடி உயரம். அவன் மீண்டும் அவசரப்படுத்தினான். சைக்கிளை விட்டு குதித்து இறங்கினேன்.

'அண்ணே' கையை நீட்டுகிறான். செம்மண் புழுதி முகமெங்கும் கவிந்திருந்தது. மூக்குச்சழி வழிந்த வாய் ஓரம், கன்னம் கறுப்பாக அழகாக இருந்தாலும் கண்கள் வெளிறி அவனில் வறுமை ஏறி இருந்தது. மாலையின் குளிர் தென்றல் என்னையும் சைக்கிளின் முன் கம்பிக்கூடையில் இருக்கும் எனது மகன் மூன்று வயது சிபியையும் கவிந்து குளிர்த்தியது.

"அப்பா போவம் வாங்க''

"பொறய்யா''

"அப்பா அந்தக்கடை'' மகன் அவசரப்படுத்தினான். தன்னுடைய அலுவல் பாதிக்கப்பட்டுவிடுமோ என்று மகன் துரிதப்படுத்துவது தெரிந்தது.

" அண்ணே பாண் வாங்கவேணும்''

"ஏய் எங்க இருக்கிறா'' சற்று அதலட்டாக அவன் மீது விழுந்த என் குரலை பொருட்படுத்தாத அவன் கையை ஏந்தியபடி நின்றான்.

"ஏய் எங்கடா தம்பி வீடு"

"ந்தா அதில அவன் உயர்த்திக்காட்டினான். "அம்மா அப்பா"

"அம்மா ஆஸ்பத்திரியில...அப்பா கொழும்பில..

"ஏன்"

"அவர் விட்டுட்டு போட்டார்"

அவன் தொண்டையில் துயரம் கனத்து அவனைப் பேசவிடவில்லை. நான் அத்தோடு விட்டு அருகே வந்த சீலனிடம் "சீலன் இவனுக்கு இதுதான் தொழிலா இண்டைக்குதான் இதிலை வந்தவனோ"

றேடியோக்கடை சீலன் உற்றுப் பார்க்கிறான்.

"ம் இண்டைக்குத்தான்"

"அம்மா ஆஸ்பத்திரியில.. பாண் வேண்டக் காசு தாங்க"

"அப்பா போய் வாங்கப்பா.. பலூன் வேண்டுவம், குளிருது போவம் வீட்ட"

எனது மகனின் சிணுங்கல் என்காதில் ஏறவில்லை.

ஒரு பெண்ணையும் இரண்டு குழந்தைகளையும் வயிற்றில் ஒரு சிசுவையும் உண்டாக்கி தெருவில் விட்ட அவன் யார்? எப்படி இருப்பான்? யோக்கியனா? இல்லை இவளிடம் குற்றமா? எனது எண்ணத்துள் நீதிமன்று நடமாடியது.

"சீசீ.. எப்படி இருந்தாலும்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பிள்ளைகளை தவிக்கவிட்டுப்
போட்டானே?
"வலூான் வலூான் அப்பா"
"பாண்வாங்க காசு.. இரவுக்கு
அம்மாவுக்கு சாப்பாடு இதுதான்"
பலூனின் உருவமும் கட்டிலில்
பசியோடு புரண்டு கொண்டு
இருக்கும் உருவமும் என் கண்ணில்.
"நில்லுவாறன்" சைக்கிள் ஓடியது.
அவன் ஏக்கத்தோடு
பார்த்துக்கொண்டே இருந்தான்.
"அப்பா வலூான்"
சைக்கிள் அந்த பெரிய
பல சரக்குக்கடைக்கு முன் நின்றது.
மின்னொளியில் கடை அழகாக
காணப்பட்டது.
"அண்ணை"
"சொல்லுங்கோ மாஸ்ரர்"
"பலூான் இருக்கோ"
"தம்பி மாஸ்ரருக்கு பலூான் காட்டு"
சிவப்பு மஞ்சள்.. பச்சை..
"அப்பா ரண்டு வலூான் வேணும்''
சின்ன பலூனைக் காட்டுகிறேன்.
"இது வேண்டாம். அது தான்
வேணும்'' கடைக் காரனைப்
பார்க்கிறேன்.
"இது இருபது ரூபா.. அது ஐந்து
ரூபா..''
"தம்பி இத எடும்..''
"நே நே அப்பா இது
தான்வேணும்''.
அவன் பிடிவாதமாக இருந்தான்.
தூரத்தில் அந்தச் சின்னஞ்சிறுவன்
ஒவ்வொருவரையும்
மறித்துக்கொண்டே இருந்தான்.
"தம்பி சின்னதை எடும்.''
"ம்.. ம்'' அவன் தலையை ஆட்டி
வெம்பினான். கண்கள் சிவந்தன.
தூரத்தில் அவன் ஓடி ஓடி புலம்பிக்
கொண்டிருந்தான். அவன் நாங்கள்
வந்த கடைப்பக்கமாக வெறித்துப்
பார்க்கிறான்.
"ம்.. ம்'' என்ன செய்வது..
பெரிய பலூனில் ஒன்றை கையை
விட்டு எடுத்துக்கொண்டான்
இவன். முதலாளி என்னிடம்
காசுக்காக காத்திருக்கிறார். மனம்
நடுக்கத்தோடு ஐந்நூறு ரூபாய்
தாளை எடுத்து நீட்டுகிறேன்.
பெரிதாக தலையாட்டிய அவர்
மாற்ற முடியாது என்கிறார்.

அப்போதுதான் நெஞ்சில் ஒரு வலி.
அட ஒருதனையா இரண்டு பேரை
ஏமாற்றிவிட்டேன் . மகனிடமிருந்து
பலூனை பலவந்தமாகப்
பறிக்கிறேன். ஓலமிட்டபடி அழும்
அவனைக் கட்டி அணைத்தபடி
வெளியே வருகிறேன்.
வாசலில் அவனைக் காணவில்லை.
எங்கேபோனான். இருட்டின்
வெளிச்சம் கலந்து புரண்டது.
தூரத்தில் ஒரு சின்ன உருவம்.
"ம் .. அவனா. அவனா? அவனே...''
நம்பிக்கையோடு விம்முகின்ற
மகனை விம்மல் தணித்துச்
சைக்கிளில் ஏற்றிக்கொண்டு
போகிறேன்.
"தம்பி.. தம்பி.. அவன்
எல்லாவற்றிலும் நம்பிக்கை
இழந்தவனாக தேம்பிய இதயத்
தோடு கன்னத்தில் கோலமிட்ட
கண்ணீரில் வாகனங்கள் கிளப்பிய
பெருந்தெருவின் செம்மண் புழுதி
படர்ந்தபடி நிற்கிறான்.
"தம்பி தம்..''
எதையும் எதிர்பாரா அவன் சற்று
நிற்கிறான்.
"இந்தா..'' எனது காற்சட்டை
பையிலுள்ள பதினைந்து ரூபா
சில்லறைகளைப் பொறுக்கி
நீட்டுகிறேன். "இதுபோதுமா
இவனுக்கு..'' இந்த தேசத்தின்
தெருவெங்கும் எத்தனை
குழந்தைகள் வறுமைக்குள் சிக்கி
பசி, பசி நோய், நோய் என்று
கதறுகிறார்கள். எனது வீட்டில்
வீணாய்ப் போகும் சோத்தையும்
கறியையும் நினைக்கிறேன்.
விடுதலைப் போராட்டத்தை
நேசிப்பவன் அயலில் உள்ளவனை
நேசிக்கவேண்டும். இடப் பெயர்வும்.
சொத்து இழப்பும், உறவுகள்
இழப்பும், பெற்றோர் இழப்பும்
நாளுக்குநாள் ஏன் அதிகரிக்கிறது?
"தம்பி..''
"ம்''
"உங்கட வீட்டில எத்தனைபேர்.''
"அப்பா, அம்மா, அண்ணா, நான்''
"அண்ணா வீட்டில என்ன
செய்கிறான்? ''
இல்லை என்பதுபோல்
தலையாட்டுகிறான்.
"இல்லையா.''
கண்களில் இருந்து நீர் பொலு
பொலு வென ஓடுகிறது. அவன்
மெதுவாக நடக்கிறான்.
எனக்கு ஏதோ செய்தது
தலைவிறைப்பது போல இருந்தது.
மகனின் முகத்தைப்பார்கின்றேன்.
அந்தச்சிறுவனின் முகம் தெரிகிறது.
எனது கண்களில் நீர் முட்டியது.
மயிர்புடைத்தது. குளிர்,
மேனியெங்கும் ஏறி இறங்கியது.
எனது நாவறண்டது. வார்த்தைகள்
வர மறுத்தன. மகன்...
"அப்பா போவம் வீட்டை''
அவன் சிணுங்குவது
புரிகிறதேயொழிய அவன் குரல்
என்செவியில் புகவில்லை.
வலதுகையையோ இடது
காலையோ அசைக்க முடியவில்லை
என்னால்.
அவன் போனதை என்கண்கள்
பார்த்துக்கொண்டிருந்தன. இவனது
தகப்பன் எப்படி இருப்பான். ஏன்
இந்தப் பிஞ்சைவிட்டுப் பிரிந்து
இருக்கிறான், எனக்கு என் மகனை
விட்டுப் பிரிந்து
மணிக்கணக்கிலேயே இருக்க
முடியவில்லையே.
இந்தச் சிறுவனின் இந்த
நிலைமைக்கு அவன் தந்தை
மட்டுந்தான் காரணமா?
இல்லை... இல்லை ஊரைவிட்டுத்
துரத்தி அகதியாக்கி பசியில்வாட்டி
பட்டினி போடும் அவர்கள்...
அவன் கண்ணிலிருந்து மறைந்தான்.
அவனைப் போன்ற பல ஆயிரம்
பேர் போலவே என் கண்ணுள்
அவனது உருவம் மறைந்தது.
மூக்கின் ஓட்டையை சூடாக்கிக்
கொண்டு எனது மூச்சுக்காற்று
வெளியேறியது. எனது கால்களை
அசைக்க முயல்கின்றேன்.
கண்ணுள்...
பிறவுண் நிறச் சேட்டு
கறுத்தக் காற்சாட்டை
மூன்றடி உயரம்

▼▼



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எனது வருகை

**வ**ருகிறேன்

காலமொன்றிலிருந்து
காலமொன்றுக்கு
கனவுகளின் மீதிருந்து
கனவுகளுக்கு
மகத்தான நிஜமொன்றின்
சினேகத்துக்காக
உங்களிடமிருந்து
உங்களில் வருகிறேன்.

★★★

ஆட்கள் என்னைப்
பார்க்கிறார்கள்
புதிர்,
அச்சமும் உள்ளொடுங்கலும்
சூழ்ந்த மனம்
கண்டெடுத்த புதிர்
அவர்களை
ஆட்டிப் படைக்கிறது.
வண்டின் ரீங்காரம்
விமானமொன்றை
ஞாபகப்படுத்துகிறதாம்.
சிதறிய நிணம்
உறைந்த கருஞ்சிவப்பு ரத்தம்
நெஞ்சடைக்கும் கூக்குரல்கள்
முறிந்த மரங்கள்
நிழலற்றுச் சிதைந்த முற்றம்
எல்லாம் நெஞ்சைப்
பிளக்கிறது.
நிச்சயமின்மை
ஒரு தீர்க்க தரிசனம் போல
எல்லா மனங்களிலும்
படிகிறது.
இரவே, பகலே,
சூரியனே, சந்திரனே,
நட்சத்திரங்களே,
காற்றே, கடலே,
எல்லோரும் சொல்லுங்கள்
இன்னும் என்ன செய்ய
முடியும்?

கடவுளின் முகம் எப்படி
இருக்கிறது?
உண்மையின் நிறம்
எவ்வாறு உள்ளது?
ஒன்றுமே தெரியவில்லை.
அன்பும் கருணையும் உலர்ந்த
காலம்
சருகாய் மிதிபடுகிறது
கால்களில்.
நாய்களின் வாய்களில்
குருதிக்கறை
நரிகளின் நாக்கில் வழிகிறது
இரத்தம்.
பசுக்கள் அலறுகின்றன.
உறியில் பூனை
பாலைக் குடித்த பின்
உறங்குகிறது.
பூமரங்களைச் சுற்றி
முட்செடிகள் பரவுகின்றன.
எல்லா வீதிகளிலும்




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நெருஞ்சி
விளைந்திருக்கிறதாகச்
சொல்கிறார்கள்.

★★★

வேட்டைக்காரன் இன்னும்
வீடு திரும்பவில்லை.
இரவோ
இன்னும் விடியாதிருக்கிறது.
அவன் வீட்டில்,
குழந்தைகளின் ஈனக்குரல்
பால் வற்றிய மார்பைப்
பிளந்திறங்குகிறது.
நிலவோ
யாருந் தீண்டாமல்
அநாதையாக வீழ்கிறது.

★★★

மாலையில் காடெழும்பிய
கிராமத்திலிருந்து
வெட்டப்பட்ட மூன்று
தலைகளுடன்
'வீரர்கள்' திரும்பினர்.
ஒன்று சிறியது
'அது ஒரு குருத்தின் முகம்'
என்றது காற்று.
ஒன்று
வேட்டைக்காரனுடையது
ஒன்று
நரைத்த தாடியும் சுருங்கிய
நெற்றியுமானது.
தலைகளை இழந்த மூன்று
அகதிகளிலிருந்தும்
பெருகும் துக்கம்
அகதிகள் உறைந்த மரங்களை
மூழ்கடிக்கிறது.
'ஒரு ராஜத்துரோகத்தை
தலைகள் வெட்டிக்
காத்தார்கள் வீரர்கள்'
என்று அரசு அறிக்கை
விட்டது
வீரர்களின் நெஞ்சில்
பதக்கங்கள் ஏறின.

★★★

உக்கிய குடிசைகளை
மழை
தீண்டாதிருந்திருக்கலாம்
காற்று விலகிப்
போயிருக்கலாம்.
ஆதரவாகத் தடவும்
நிலவுக்கிருக்கும்
அன்பூற்று
ஏன் வற்றி
இப்படியொரு வஞ்சம்
முறியடித்தது?
ஈரம் பெருகிய அடுப்பில்
துக்கம் ஊறிப் படர்கிறது.

★★★

ஆட்கள் பார்த்துக்
கொண்டே போகிறார்கள்.

★★★

**— கருணாகரன்**

சபிக்கப்பட்ட
ஒரு ராஜ்ஜியத்தின்
வீழ்ச்சியாக
விலகிக் கிடக்கிறது குடிசை.
துரத்தப்பட்ட
அநாதைகளாக
நூர்ந்து கொண்டேயிருக்கும்
மனிதர்கள்.

★★★

நான் வருகிறேன்.

★★★

கனவுகள் தீமூண்ட
காலத்திலிருந்து
கூவை அழுகிறது
ஆந்தை அலறுகிறது
நெருப்பாக சுழன்று நெஞ்சில்
பிடிக்கிறது.
திக்கெலாம் காற்று
சுழன்றடிக்க
பூக்கள் எரியும் மணம்
சிறகுகள் புலுண்டும் நெடி
இதயம் வதங்கித் துடிதுடிக்க
எழுகிறது ஓலம்
ஓலத்திலும் தீ பற்றிப் பிடித்து
விட்டது.

★★★

ஐயோ;
ஆட்கள்
பார்த்துக்கொண்டேயிருக்கிற
ார்கள்.

★★★

கடலில் முகம் புதைத்து
வானம் விம்முது
காற்றுக்குப் பேச்சே
வரவில்லை.
அலைகள்
கரையேறத் தயங்குகின்றன
அழுகுரல்களால் கரை
கட்டப்பட்டுள்ளது
கவிழ்க்கப்பட்ட வள்ளங்கள்
வேரோடிவிட்டனவென்று
சொல்கிறார்கள்.
கடலில் கால் நனையாமல்
காலங்கள் போகுதென்றும்
பேசினார்கள்

யார் முகத்திலும் காற்று
வீசவில்லை
யார்மீதும் நிலவு படரவில்லை

வலையில் சிக்கிய வாழ்வோ
கோடியில் தொங்குது
கோடியோ
வீட்டின் புறத்தில்
விலக்கப்பட்டவாறு
அலைகளின் மீது முள்
முளைத்துளது
முள்ளின் மறைவில்
குந்தியிருக்கின்றன வலிய
பேய்கள்

அலைகள் மனிதர்களை
ஒளித்தன
மனிதர்கள் கடலை அஞ்சினர்
கடலோ
பயங்கரங்கள்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஆழ்கிடங்காயிருக்கிறது

யாவுமறிந்த கடவுளின்
முகமோ வெளிறியது
பாற்கடலில்
விஷமோ, துளியோ,
வேறேதோ, யாதோ
நீர்க்கடலில்
இங்கே
இரத்தம் பெருகிறது
சடலங்கள் மிதக்கின்றன
கரையெங்கும் அழுகுரல்கள்
நிரம்பி
காலம் திணறுது.

★★★

ஆட்கள் பார்த்துக்
கொண்டேயிருக்கிறார்கள்

நான் வருகிறேன்

★★★

புத்தகங்களுக்குள் ஒளித்துக்
கொண்ட
பூச்சியை
நான் கண்டேன்.
'அது அழகாக இருக்கிறது'
என்கிறார்கள்
தீங்கில்லாதது, என்றும்
சொல்கிறார்கள்
பூச்சி புத்தகங்களுக்குள்
பாதுகாப்புத் தேடுகிறது
புத்தகங்களுடன்
வாழ்ந்துவிடப்போவதாக
பாவனை பண்ணுகிறது அது
பூச்சியைப் பார்க்கையில்
சிரிப்பாகவும்
பரிதாபமாகவும் இருக்கிறது
காலங்களைப் பற்றி
குறிப்புகள் நிறைந்த
புத்தகங்களில்
எந்தக் காலத்திலும் நுழைந்து
விடாமல்
புத்தகங்களிலேயே வாழத்
துடிக்கிற பூச்சி.

பூச்சியின் வாக்குமூலம்:

முள் முருக்குகளில் தேவதைகள் உறங்குகின்றன. தேவதைகளுக்குப் பாம்புகளால் ஊஞ்சல் கட்டிக்கொண்டிருக்கின்றேன். பாம்புகளின் வழவழப்பான சருமத்தில் சூரியன் மயங்குகிறது. பாம்புகள் வாழ்வதற்கு புதர்கள் தேவை. புதர்களைப் பாதுகாக்க முட்செடிகள் வேண்டும். முட்செடிகள் அழகானவை. அவை காற்றை வருடுகின்றன.

தூக்கமே சுகத்தின் பிறப்புப் புள்ளி. கனவுகளின் ஊற்றிடம் தூக்கத்திலேயே கருக்கட்டுகிறது. கனவின் நிறங்கள் நிஜமானவை. கூடுகளுள் நிறங்களை அடைத்து விடுங்கள். நிறங்கள் பறந்து வண்ணத்துப் பூச்சிகளாகி விடும். நிறங்களை கூடுகளுள் அடைத்து விடுங்கள்.

புழுக்களின் கறி சுவையானது. முட்டையிலிருந்து மதுரசம் தயாரிக்கலாம். இனி விருந்தே வாழ்வாகட்டும். எல்லோரும் தேவதைகளுடன் முள்முருக்குகளில் உறங்கலாம். விரும்பும் வேளைகளில் பாம்புகளாலான ஊஞ்சலில் ஆடலாம். அதுவே பாதுகாப்பானது. பூக்களைச் சூடிய பாம்புகளே உலகத்தில் அழகானவை.

புத்தகத்தின் குறிப்புகளிலிருந்து:

தேவதைகள் அழியும் காலத்தை ராட்சதர்கள் சிருஷ்டிப்பார்கள். காற்றை மறித்துச் சுவரெழுப்பி, அனலை உள்ளே மூட்டி, குழந்தைகளை உறங்கச் சொல்வார்கள். எலும்புகளாலான சவக்கிடங்குகளைச் சரித்திரத்தின் பாகங்களாக்கி நிலமெங்கும் பூச்செடிகளைப் போல் நடுவார்கள். பயணிகளைச் சூறையாடி வழிப்போக்கர்கள் உபசரிக்கப்படுவார்கள். அநாதைகளைத் திருடி ராஜ்ஜிய பரிபாலனம் செய்யப்படும், வீதிகளின் மீது ஓட்டைகளும் ஓட்டைகளுள்ள வீதிகளும் அரசின் சாசனங்களில் எழுதப்படும். எல்லாச் சரித்திரக் குறிப்புகளிலும் மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டு எல்லாச் சான்றுகளிலும் நிறம் பூசப்படும்.

புத்தகங்களிலுள்ள குறிப்புகளையெல்லாம் புத்தகத்தில் வாழும் பூச்சி தின்று தீர்த்தபடி புத்தகங்களில் வாழும். புத்தகங்களை அழித்தே தன் விதியை முடிக்கும் புத்தகப்பூச்சி.

★★★

தீபங்கள் ஏந்திய தேவதைகள்
இரவில் மிதந்தன
'இது மின்மினிப் பூச்சிகளின்
காலம்'
என்றான் நண்பன்.
மின்மினி பூத்த மரங்கள்
நின்றன மினுங்கிக் கொண்டு.
அகதிக் குடிசைகள்
இருளில் கிடந்தன
நாய்களை வளர்க்க யாருக்கும்
வழியில்லை
பனி இறங்கி
கிழித்த போர்வையினூடே
அகதிகளைப் பிடித்தது.
உரப்பைகளில்
மிஞ்சிய வாழ்க்கை
கட்டப்பட்டிருக்கிறது.

வேர்விட முன்னே
மீண்டும் பிடுங்கி வேறிடம்
நகர்தல்
அகதியின் தொழில்.
வேர்கள் அறுந்தன
துளிகள் வாடின
அகதியின் விதி அலைகளில்
நுரைக்கிறது.

குண்டுகள் துரத்தும்
துப்பாக்கி ஏந்திய
சப்பாத்துகள் விரட்டும்
*வாளுடன் சிங்கம்
காற்றில் மிதந்து
கலவரமூட்டும்

★★★

ஆட்கள் பார்த்துக்
கொண்டேயிருக்கிறார்கள்
போராளிகள் வருகிறார்கள்
ஒரு பிரளய வெள்ளம் போல.

வருகிறேன் நானும்.

★★★

இலையுதிர்கின்றது எங்கும்
மப்படைந்த வானம்
ஞாபகங்களைக்
கிளர்த்துகிறது.
இடையிடை அசைந்து
பின் தூங்கும் காற்று


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

குளிருடனும்
சற்று வெப்பத்துடனும்
விளையாடுது.
என்னுடைய கிழவனே!
நானும் உன்போல்
மூப்படைந்துளேன்
எனது பருவமோ
களவாடப்பட்டுளது
செந்தழல் நாக்குகளாக
மரங்கள் துளிர்விடும்
எனது பருவம் மீளாது
எனது காலங்கள்
திரும்பாதவை
என்னுடைய வசந்தத்தைப்
பாம்புகள் விழுங்கி விட்டன.

(அ)

எறும்புகளின் கனவுகளை
வெள்ளம் அடித்துப்
போயிற்று
பூக்களின் அழகினை
தீ பறித்துச் சென்றது
காற்று எப்போதும் பார்த்துக்
கொண்டேயிருக்கிறது.
எல்லாவற்றுக்குமாக
நிச்சயிக்கப்பட்ட
சாட்சிகளாய்.

(ஆ)

முற்றங்களில் குழிபறித்து
பனைகளைத்
தறித்தடுக்குகிறார்கள்
மிதிவெடிகளை புதைத்து
அவை எப்போது
பூக்குமென்று
பார்த்திருக்கின்றன விழிகள்

புறக்கணிக்கப்பட்ட நிலவோ
அநாதையாக அலைகிறது

ஒரு சுருட்டுக்கு
வழியில்லாமல்
குளிரைச் சபிக்கின்றேன்
தோட்டங்களிலும் 'ஆமி'
முட்கம்பிகளால்
சூழப்பட்டுள்ளது ஊர்
எனது இதயமோ
முள்ளில் தொங்கித்
துடிக்கிறது.



★★★

கட்டைக்குள் கிடந்து
தவிக்குது
பசு,
கன்றை
நேற்றிரவு சீறிய சன்னங்கள்
கூட்டிப் போயின.

'சூழக்காத்திருந்த
பயங்கரத்தை விரட்டினான்
வீரனெ'ன்று சூனியக்காரன்
பிரகடனஞ்
செய்யப்பட்டான்.
கன்றின் முகத்தை மாற்றி
அது புலியின் முகமென்று
குறிப்பெழுதி அரசால்
வெளியிடப்பட்டது.

வெள்ளம் அடித்துப்போன
எறும்புகளின் கனவு
கடலில் மிதக்கிறது வானத்து
நீலமாய்.
தீ பறித்துச் சென்ற
பூக்களின் அழகு
வழிகிறது சூரியனின் ஒளியாய்
சன்னங்கள் பிடுங்கிச் சென்ற
கன்றின் உயிரோ
கதறியபடி அலைகிறது
தீராத வன்மத்துடன்
பதுங்குகுழிகளைத் தேடி.
சூனியக்காரரின்
நெஞ்சுப் பதக்கத்தை நீக்கி
அது நாக்கால் நக்கியெடுக்கும்
அவன் உயிரை.

★★★

சரித்திரங்களறிந்த
நிலவுக்குத் தெரியும்
என்ன நடக்கப்
போகிறதென்று
காற்றறியும் யாவும்.
தேற்ற முடியாத் துயரின்
உளைவை
பசு
மாற்றாது நெஞ்சுள்
வைத்துளது.
ஊற்றெடுத் தெரிகிறது தீ
உள்ளே கொதிக்கிறது பழி
கன்றின் குரலை
காற்று அழைத்து வந்து
பசுவின் கனவில் சேர்க்கிறது
பசு அறியும்
காற்றறிந்த சேதியெலாம்.

★★★

சேதியெலாம் அறிந்த மனிதர்
வருகிறார்கள், இப்போது.

★★★

நான் வந்துளேன்,
காலத்தைப் பிளந்து
நீளும் துயரை ஆழப்
புதைத்துவிட
காலமொன்றின்
காலத்திலிருந்து
மகத்தான நிஜமொன்றின்
தருணத்திற்காக
உங்கள் முன் வந்துளேன்.

★★★

இப்போது ஆட்களும் வந்து
கொண்டிருக்கிறார்கள்.

*வாளேந்திய சிங்கம் — சிறீலங்காவின்
தேசியக்கொடி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மதியவேளை. காலையில் பெய்த பனிக்கு பதிலடி கொடுப்பதாய் வெய்யில் வெளுத்துக்கட்டியது.

மிகுதியாய் இருந்த மூவிங் பங்கரை வெட்டிமுடித்த பின்னர் மதிய உணவை எடுத்துக்கொண்டேன். மதிய உணவை அடுத்துக் கிடைத்த ஓய்வைப் பயன்படுத்தி தின அறிக்கை எழுதுவதற்காக கொப்பி எடுத்து அருகில் இருந்த மரத்தின் கீழ் அமர்ந்தபோதுதான் அது என் நினைவுக்கு வந்தது.

அடடா. இன்னும் ஐந்து நாள்கள்தான் இருக்கின்றன அந்த தினத்திற்கு. பத்து நாள்களுக்கு முன்னமே முடிவு செய்து விட்டேன் ஏதாவது அன்பளிப்பு கொடுப்பதென்று. ஆனால் இது வரையில் கொடுப்பதற்கு எதுவுமே என் கைக்கு கிடைக்கவில்லை. ஏன் இப்படி முடிவெடுத்தேன்? எண்ணத்தில் முடிவெடுத்துவிட்டால் அதனை செயற்படுத்திவிட வேண்டும் என்பதில் தீவிரம் சின்ன வயதில் இருந்தே என்னுடன் ஒட்டிக்கொண்ட பழக்கம். இதனால் சிலவேளைகளில் விபரீதங்களில் சிக்கி மீண்ட அனுபவங்கள் ஏராளம். எல்லாம் ஒரே குழப்பமாக இருக்கிறது. இதுதான் காதலின் மகிமையோ என எண்ணத்தோன்றுகின்றது. பயம், பதற்றம், தெளிவு, மகிழ்ச்சி என எல்லா உணர்வுகளின் கலவைதானோ காதல் என நினைத்துக்கொண்டு மனதைத் திடப்படுத்திக் கொண்டேன்.

எது எப்படியாயினும் ஏதாவது கொடுத்தேயாவது என்ற முடிவில் உறுதியாக இருந்தேன். ஏனெனில், என் காதல் அரும்பிய பின்னர் நான் சந்திக்கும் முதலாவது உலகக் காதலர் தினம் அல்லவா அது.

எல்லாமே நேற்று நடந்தது போல இருக்கிறது. முகம் அறிய முதல் என் காதில் விழுந்த அந்த இனிமையான குரல் நிர்வாகப்பொறுப்பாளரின் அனுமதியுடன் முதன்முதலாக சந்தித்தது, விருப்பத்தை

# பெப்ரவரி-14



தெரியப்படுத்திக் கொண்டது, அறிக்கைப்படிவத்தில் பதிந்தது, எதை நினைப்பது? எதை மறப்பது? பாசறையில் இருந்து இப்ப எதிரியை எதிர்பார்த்திருக்கும் பதுங்குகுழி வரை எதையுமே மறக்க முடியவில்லை. நினைவழியா நிகழ்ச்சிகளின் அல்லது மறக்க முடியாத சம்பவங்களின் தொகுப்பே இயக்க வாழ்க்கை என்பதாகி விட்டது.

ஜயசிக்குறுய்க்கு அகவை இரண்டாகின்றது. எனது காதலோ வயது ஒன்றைப் பூர்த்தி செய்யப்போகிறது. தேடல் இல்லாத வாழ்க்கையில் துடிப்பு இருக்காது என நான் எப்பவோ படித்த அந்த வரிகள் முற்றிலும் உண்மைதான்.

அன்புக்கான தேடல், அறிவுக்கான தேடல், அவலங்களுக்குள் விடுதலையைத்தேடல்,


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

துயரங்களுக்குள் மகிழ்வைத் தேடல் என வாழ்க்கையே ஒரு தேடல்தானே.

விடுதலைக்கான தேடல் முதன்மை பெற கல்விக்கான தேடலுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு வந்துவிட்டேன். இருப்பினும் அதனை முற்று முழுதாக விட்டுவிட முடியவில்லை. 'பொசிசன் லைனில்' இருக்கும் வேளைகளில் ஓய்வு கிடைக்கும் போது உணவுப் பொதிகள் சுற்றி வந்த ஆங்கில நாளிதழ்களைச் சேர்த்துவைத்து கைக்கடக்கமான ஆங்கில அகராதியின் உதவியுடன் ஆங்கிலம் படித்து வந்தேன். இப்போதெல்லாம் உணவு பழுதடையாமல் இருப்பதற்காக 'சொப்பிங்' பைகளில் வருவதினால் எனது முயற்சி நின்று விட்டது.

காதல் எவ்வளவு இனிமையானது! பக்குவம் அடையத்தான் அதன் மகத்துவம் புரிகின்றது.

பரீட்சைக்குப் படித்த நளன் அன்னத்தை தூதுவிடும் கதையெல்லாம் பாசி படர்ந்தது போல மனதில் கிடந்து இப்போது புத்துயிர்ப்புப்பெற்று துள்ளிவிளையாடுகிறது. நானும் ஏதாவதொன்றை தூது விடலாமோ என குறும்புத்தனமாக நினைப்பதுண்டு. 'சேரா நவம்பர்' லைனில் அவள் இருக்கின்றாள். நானோ 'சேரா டாங்கோ' லைனில் இருக்கின்றேன். வெல்லாவெளிக்கு எண்டால் மேகத்தை தூது அனுப்பலாம். அருகில் இருக்கும் அவளுக்கு என்னத்தை அனுப்புவது? வண்ணத்துப்பூச்சிகளோ வேறு திசைகளில் பறந்துபோகின்றன.

இப்பதான் இப்படியான வினோதமான கற்பனைகள் எல்லாம் மனதில் துளிர்விடுகிறது. எனக்குள்தானோ இத்தனையும் இவ்வளவு காலமும் புதையுண்டு போய்க் கிடந்திருக்கின்றது. காட்டுப்பூக்கள், மரங்கள், செடிகள், கொடிகள், வண்ணத்துப்பூச்சிகள், பற்றைக்குள் இருந்து துள்ளி ஓடும் முயல்கள் எல்லாம் என்னோடு உறவாடுவதாய்..... காட்டு வாழ்க்கை எவ்வளவு இனிமையானது. சின்னவயதில் அம்மா பயமூட்டிய காடு வேறு, இந்தக் காடு வேறு என எண்ணத்தோன்றுகின்றது. காட்டுக்கும் எனக்குமான உறவு பதினெட்டு மாதங்களுக்கு மோலாகிவிட்டது. பதினெட்டு மாதங்கள் என்ன, பதினெட்டு வருடங்கள் கூட இருந்து விட்டுப்போய்விடலாம். கண்ணியமாக இருந்த காட்டை கயவன்

## சிறுகதை

கருவறுத்துக்கொண்டிருக்கிறான் என்பதை நினைக்கையில் நரம்புகள் புடைக்கின்றன. நேற்றுப் பெய்த மழையில் முளைத்த காளான் போல அவனது காப்பரணும் அதற்குள் அவனும் இருப்பது இங்கிருந்து பார்க்கத் தெளிவாகத் தெரிகின்றது.

இவையளுக்கு முடிவு கட்டாமலா விடப்போகின்றோம். இவற்றையெல்லாம் நினைக்கும் போது மண் மீதான நேசிப்பு மேலும், மேலும் வலுவடைந்து கொண்டே போகின்றது. என்னயிருந்தாலும் மண்ணை நேசித்த படியாத்தான் அவளது நேசிப்புக்கிட்டியது.

இம்முறை விடுமுறையில் வீடு சென்றால் கட்டாயமாக அம்மாவுக்கு எனது காதல் விடயத்தை தெரியப்படுத்த வேண்டும். எனக்காக இந்த மண்ணில் இதுவரையும் வாழ்ந்த இனியும் வாழப்போகும் ஒரே ஜீவன் அம்மாதானே. 'போராடப் போன உனக்கேதடா காதல்' இப்படித்தான் அம்மா கேட்பாள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். மனதில் படுவதை பட்டென கேட்டுவிடும் கள்ளமில்லாத வெள்ளை உள்ளம் அம்மாவுக்கு. போருக்குள் காதல் தவிர்க்கப்படமுடியாது என்பதை அம்மாவுக்கு எப்படித்தான் புரியவைக்கப்போகின்றேனோ?

வெளிநாட்டில் வசிக்கும் அண்ணா எனக்கு அண்ணி கிடைத்திருப்பதாகவும் பேனா நண்பியாகவே முதலில் அறிமுகம் ஏற்பட்டதாகவும் கடிதம் எழுதியதும், அதற்கு 'கண்கள் சந்தித்து கைகள் கோர்த்து' எடுத்த முடிவுகள் கனவுகளில் சருகாகிப்போகும் காலத்தில் காகித வானில் மடல்கள் சஞ்சரித்து எடுத்துக்கொண்ட தீர்க்கமான முடிவினை எப்படிச்சொல்வது? அண்ணா, உனது காதலுக்கு நான் இட்ட பெயர்தான் கின்னஸ் காதல் என நான் பதில் எழுதியதும் அதற்கு பதிலடி கொடுப்பதாய் அண்ணா எனது காதலுக்கு ஜயசிக்குறு காதல் என பெயர் சூட்டியதும் என எல்லாமே என் நினைவுகளில் வந்து போகின்றன.

இந்தத் தினத்திற்காக நான் அளவுக்கதிகமாக ஆரவாரப்படுவது எனக்கு ஏதோ ஒரு குற்ற உணர்வாகப் படுகின்றது. இதுதான் இளமையின் துடிப்போ, காதலின் கிளுகிளுப்போ எதுவென்று எனக்குத் தெரியவில்லை. ஒவ்வொரு ஆண்டும் சூழல் பாதுகாப்புத் தினம், பெற்றோர்தினம், முதியோர் தினம், சிறுவர் பாதுகாப்புத் தினம் என எத்தனையோ தினங்கள் வந்து போகின்றன. அவை அனைத்தும் எம் வாழ்வில் மறக்கப்பட முடியா தினங்கள் அல்லவா? எனது வாழ்வோடு ஒன்றித்துப் போயிருக்கும் இந்த மரத்திற்கு நான் எந்தப் பரிசு கொடுத்தாலும் ஈடாகுமா? நிம்மதியாக சொற்பநேரம் இளைப்பாற நிழல் தருகின்றது; வெப்பக் காற்றை குளிர்வித்து தென்றலாக மேனியில் தடவிச் செல்லவிடுகின்றது. எனது உயிரை உருவியெடுக்க எதிரி


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

உருவேற்றிவிடும் எறிகணைச் சிதறல்களைத் தானும் தாங்கிக் கொண்டு... எனக்கும் அதற்குமான உறவு ஒருபோதும் பிரிக்க முடியாது. வாய்விட்டுப் பேச முடியுமென்றால் நானும் அதுவும் நிறையக் கதைத்து விடுவோம். அது சரி,

பரிசாக நிறைய பெறுமதியான பொருட்களை விதம் விதமாக கொடுக்க வேண்டும் என நான் நினைப்பது தவறல்லவா? நான் யார்? ஒரு போராளி அல்லவா? அதிக கனவுகளும் ஆசைகளும் மனதில் வளர இடம் கொடுக்கக்கூடாது. மனம் ஒரு குரங்கு என்று சும்மாவா சொல்லிவைத்தார்கள். நல்லவேளை, நிர்வாகத்தில் இருக்கும் போது தியானப் பயிற்சியும், யோகாசனப் பயிற்சியும் பெற்றதனால் மனதை கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடியதாக இருக்கின்றது. இதனால் எனது போராட்டச் செயற்பாடுகளில் காதல் நினைவுகள் குறுக்கிடாமல் ஒதுங்கியே இருந்து வருகிறது.



த.ம.சேந்தன்

என்னவளுக்கு எதைக் கொடுப்பது? இதற்கு விடை காண்பதென்பதே எனக்குப் பெரிய சிக்கலாகிவிட்டது. எதைக்கொடுப்பது என்பதற்கு முடிவுவெடுக்க முடியாமல் தத்தளிப்பதற்கு நான் கொடுப்பது என்னவளுக்கு மட்டுமல்லாமல் இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் பயன்படவேண்டும் என்பதில் நான் விடாப்பிடியாய் இருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

என்ன இருக்கிறது என்னிடம் கொடுப்பதற்கு? இப்போது என்னிடம் இருப்பதெல்லாம் துப்பாக்கியும் கோல்சரும், வோக்கி, இடுப்புக்கோல்சர், சாக்குத்தொப்பி, பேனாவும் குறிப்புப்புத்தகமும் இரண்டு சீருடைகள், ஒரு சாறம், ஒரு சோடி செருப்பு ஆகியனதான். இவை எதுவுமே எனக்குச் சொந்தமானவை அல்ல. துப்பாக்கியும் கோல்சரும் சகபோராளிகள் குருதி சிந்தி எதிரியின் முகாம்களுள் புகுந்து எடுத்தவை. மற்றவை அனைத்தும் மக்களுடையது. பங்களிப்பாக மக்களிடம் திரட்டிய பணத்தில் இயக்கம் தந்தது. குறிப்புப்புத்தகத்தில் எழுதப்படும் கவிதைகள்—வசனங்களுக்கு மட்டுமே நான் சொந்தக்காரன்.

போதிமரத்தின் கீழிருந்து புத்தர் ஞானம் பெற்றது போல அன்பை வெளிப்படுத்த, அன்பளிப்பாகக் கொடுக்க அறுகம்புல்லும் போதும் என முடிவெடுத்தவனாக மரத்தின் வேரில் தலைசாய்த்து மல்லாக்கப்படுத்தேன். அப்போது அது என் கண்ணில்பட்டது.

— பெப்ரவரி 14.1999.

தனது காவற்கடமை முடிந்த கையுடன் நேராகச் சென்று மரத்தில் தெங்கவிடப்பட்ட நாள்காட்டியை அவதானித்து அன்றைய நாளில் அதில் உள்ள அறிவுத் துணுக்குகளை படித்து குறிப்பெடுத்துக் கொள்வதை அவள் பழக்கப்படுத்தியிருந்தாள். இன்றும் வழமை போல நாள்காட்டியைப் பார்த்தவளுக்கு உலக காதலர் தினம் என்ற அறிவுத்துணுக்கு நெஞ்சில் ஆயிரம் செய்திகளைச் சொல்லி நின்றது.

அப்படியென்றால் எனக்கும்... என்று நினைத்துக் கொண்டவளின் எதிர்பார்ப்பிற்கு கிடைத்ததாய் அமைந்தது அணித்தலைவியின் அழைப்பு.

'ஓமக்கா' என்று அணித்தலைவி நின்ற இடத்திற்குச் சென்றவள் திரும்பி வரும்போது கடிதம் ஒன்றுடன் வந்தாள்.

அவளுக்கு ஒரே பரபரப்பாக இருந்தது. இதுவரை வந்த கடிதங்களைவிட அந்தக் கடிதம் சற்று பருமனாக இருந்தது. அவளுக்கு இனம்புரியாத மகிழ்ச்சியைத் தோற்றுவித்தது.

கடித உறையைக் கிழித்தாள். உள்ளே கடதாசியில் மாத்திரைகள் சுற்றியது போல சிறிய சரையும் கடிதமும் இருந்தன.

கடிதத்தை ஆர்வத்தோடு படித்தாள்.

அன்பே!<br>
தாய் மீதான நேசிப்பு<br>
மண் மீதான நேசிப்பு<br>
மரங்கள் மீதான நேசிப்பு<br>
அண்ணா மீதான நேசிப்பு<br>
நேசிப்பே<br>
எல்லாவற்றிக்கும் மூலம்.<br>
உன் மீதான நேசிப்புக்கு<br>
உலக காதலர் தினமாகிய<br>
இன்று<br>
நான் தரும் பரிசு,<br>
இதுதான்.

அவள் அதை இதயத்தில் ஒற்றிக்கொண்டாள்.

* * *

"அக்கா நீங்க நாட்டின விதை முளைச்சிட்டுது" என்று ஆரவாரமாக ஓடி வந்தாள் அந்த அணியில் உள்ளவர்களில் வயதில் இளையவள். காப்பரணில் இருந்து பார்க்கக்கூடிய தூரத்திலேயே அதனை அவள் நாட்டியிருந்தாள். அவளும் ஆவலுடன் நோக்கினாள். அது முளைவிட்டு மெல்ல மெல்ல வளரத் தொடங்கியது அவளது காதலைப்போல.

▼▼



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மொழி

ஜோ. அருண்

மனிதன் தனது உள்ளத்தில் பொங்கி எழுகின்ற உணர்வுக் குவியல்களையும் பட்டுத் தெறிக்கின்ற சிந்தனைகளையும் வெளிப்படுத்தவும், அவற்றைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ளவும் மொழியைப் பயன்படுத்துகிறான். சைகை, ஒலி போன்றவை உணர்வுகளையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்த ஓரளவு உதவினாலும் மொழிதான் உள்ளத்து உணர்வுகளையும் எண்ணங்களையும் முழுமையாக வெளிப்படுத்தி ஓர் ஆழமான புரிதலுக்கு இட்டுச்செல்கிறது. மற்றய உயிரினங்களிலிருந்து மொழி மனிதனை வேறுபடுத்திக் காண்பிக்கின்ற குறியீடாக இருக்கின்றது. இன்று மனிதன் அடைந்திருக்கின்ற வளர்ச்சிகளுக்கெல்லாம் மொழி ஓர்அடிப்படையாக இருந்திருக்கிறது. கற்கால மனித வாழ்வு தொடங்கி இன்றைய கணிப்பொறி மனிதன் வரை நிகழ்ந்த நாகரீக நகர்வுகளுக்கு மொழி அச்சாணியாக இருந்திருக்கின்றது.

தொடக்கத்தில் இனக்குழுக்கள் தங்களுக்கென்று ஒரு மொழியை ஒருவருக்கொருவர் உறவுகொள்வதற்கு பயன்படுத்தினர்.

அந்த மொழி பேச்சு வழக்காகவே இருந்து வந்தது. பேச்சு வழக்காகவே அந்தக்குழுமத்தின் வாழ்க்கை, வரலாறு, பழக்கவழக்கங்கள் ஆகியவை அடுத்தடுத்த சந்ததிக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டன. எழுத்து வடிவம் நடைமுறைக்கு வந்த பின் கல்வெட்டுக்களிலும், ஓலைச்சுவடிகளிலும் எழுதினர். இதைத் தொடர்ந்து வந்த வடிவத்தில் மொழி கோர்க்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு தலைமுறையும் முந்தைய தலைமுறையின் வரலாற்று நிகழ்வுகளை முன்னேற்ற நகர்வுகளை மொழிமூலம் புரிந்து கொண்டு மேலும் மேலும் மேம்பாட்டை கண்டது. வளர்ச்சி பெறப் பெற மொழியின் தன்மையும் தரமும் வளர்க்கப்பட்டு கூர்மைப்படுத்தப்பட்டது. இந்த வளர்ச்சியின் நகர்வுகளுக்கு ஏற்றவாறு புதிய புதிய சொற்கள் புகுத்தப்பட்டன. இன்று இணையத்தின் மொழியை வைத்து ஒரு மாபெரும் தகவல்ப் புரட்சிக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறோம்.

இப்படி ஒரு மிகப்பெரிய நாகரீக வளர்ச்சி நிகழ்கின்றபோதே மொழியின் அடித்தளத்தில் இருக்கின்ற பண்பாட்டை மறந்துவிடக்கூடாது. மொழிக்கும் பண்பாட்டுக்கும் ஒரு நெருங்கிய தொடர்புண்டு. பண்பாடு என்பது ஒரு குழுமம் மனித வாழ்வை நோக்குகிற விதம், வாழ்வைப் பற்றிச் சிந்திக்கின்ற, உணர்கின்ற, கொண்டாடுகின்ற விதம். இது விழாக்களாக, குறியீடுகளாக, பழக்க வழக்கங்களாக, குடும்ப உறவுமுறைகளாக, கலைகளாக வெளிப்படுத்தப்படுகிறது. ஒரு குழுமத்திற்கு அடையாளத்தையும், இருப்பையும் தருகின்றது. இப்படிப்பட்ட பண்பாட்டுக் கூறுகளை ஒரு குழுமம் தங்களது மொழியில் பதிவு செய்து அதைப் பின்வரும் சந்ததிகளுடன், பிறகுழுமங்களுடன் பகிர்ந்து கொள்கிறது. ஒலிகள் இணைந்து நிற்கும் சொற் கூறுகளிலும் சொற்களிலும் ஒரு குழுமத்தின் பண்பாடு நிரப்பப்படுகிறது. ஒரு மொழி பேசப்படுகின்ற, வாசிக்கப்படுகின்ற இடமெங்கும் பண்பாடும் பரப்பப்படுகிறது.

> மொழியும் பண்பாடும் ஒன்றுக்குள் ஒன்று பின்னிக்கிடக்கின்றன. ஒன்றைப் பிரிந்து மற்றொன்றின் கனபரிமானத்தை புரிந்து கொள்ள முடியாது. ஒரு பண்பாட்டை அழிக்கவோ, அதை வளர்க்கவோ வேண்டுமென்றால் மொழிதான் தொடக்கமுறை

மொழி வெறும் தகவல் கருவியாக மட்டும் இருப்பதில்லை. அதுவே பண்பாடாக மாறிவிடுகிறது. அந்த மொழி பேசுகின்ற இனத்தின் வரலாறாகிவிடுகிறது. மொழி அந்தப் பண்பாட்டைத்தாங்குகிற கொள்கலனாகிவிடுகிறது. ஒருமொழியைக் கற்கிறபோது அந்தமொழிக்குச் சொந்தமான குழுமத்தின் பண்பாட்டை கற்றுக்கொள்வது அவசியமாகிறது. எவ்வளவு சொன்னாலும், நயம்பட உரை எழுதினாலும் தமிழ்ப் பண்பாட்டை உணர்வோடு, சதையும் ரத்தமுமாகப் புரிந்து கொள்வதற்கு, தமிழ்மொழி கண்டிப்பாகவேண்டும். ஒவ்வொரு குழுமமும் தனது வரலாறு, வாழ்க்கைமுறை, சிந்தனைப்போக்கு, வாழ்வியல் கலைகள் முதலியவற்றைத் தனது மொழியில் தான் பதிவுசெய்துகொள்கிறது.

ஆகவே மொழியும் பண்பாடும் ஒன்றுக்குள் ஒன்று பின்னிக்கிடக்கின்றன. ஒன்றைப் பிரிந்து மற்றொன்றின் கனபரிமாணத்தை புரிந்து கொள்ள முடியாது. ஒரு பண்பாட்டை அழிக்கவோ, அதை வளர்க்கவோ வேண்டுமென்றால் மொழிதான் தொடக்கமுறை.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நேர்காணல்

நாடகம் என்பது மரபுகளை கடந்த தெருவெளி அரங்குகளினூடாக மக்கள் மனங்களைத் தொட்டு நிற்கிறது என்பற்கு புதுவை அன்பனின் "புதிதாய் பிறப்போம்" எனும் படைப்பு சாட்சியமாய் நிற்கிறது.

கண்ணீரிலும் வாழ்வின் துயரங்களிலும் இருந்துதான் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஏனைய விடுதலைப் போராட்டங்களும் கருக்கொண்டன எனும் கருத்தில் நம்பிக்கை உடைய இப்படைப்பாளி கல்வியில் மட்டுமல்ல, எமது வாழ்வியலின் பல்வேறு விடயங்களிலும் புதிய சிந்தனை வேண்டும் எனத் தெரிவிக்கிறார்.

# கண்ணீரிலும் துயரங்களிலிருந்தும் தான் போராட்டங்கள் கருக்கொள்கின்றன

❑ உங்கள் ஆரம்ப கால நாடக அனுபவம் பற்றிக் கூறுங்கள்?

✍ நான் யாழ்ப்பாணம் புத்தூர் கிராமத்தின் வறிய கூலி விவசாயக் குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவன். என்னுடைய தந்தையார் திரு.நாக முத்து ஒரு நாட்டுக் கூத்துக் கலைஞர் ஆவார். அக்காலத்தில் பிரபலமான பூதத்தம்பி கூத்தில் பூதனாக நடித்தவர். சிறுவயது முதலே இவர்கள் கூத்துப்பழகுவதைப் பார்த்து வந்திருக்கிறேன் குறிப்பாக படச்சட்ட மேடை நாடகங்களை பழம்பெரும் கலைஞர் உயர்திரு.வி.வி.வைரமுத்து அவர்கள்தான் என் தந்தையாருக்கு பழக்குபவர் ஆவார். என்னுடைய பத்தாவது வயதிலேயே புதிய தேடல்களுக்குப் புறப்பட்டுவிட்டேன். இதுவே என்னை நாடகக் கலையுடன் இணைத்த ஆரம்பப்பாலம் ஆகும். நான் நாடக அரங்க கல்லூரிகளிலோ அல்லது பயிற்சிப் பட்டறைகளிலோ படிக்கவில்லை. பள்ளி வாழ்க்கை என்பது கூட எனக்கு கனவாகவே அமைந்துவிட்டது. இரண்டாம் வகுப்புக்குமேல் படிக்கவில்லை. இதற்குக் காரணம் எனது குடும்ப வறுமையாகும். எனக்கு பதினைந்தாவது வயதில் எனது தந்தையார் அகால மரணமானதால் எமது குடும்பம் மேலும் வறுமைப் போருக்கு முகம் கொடுக்க வேண்டியதாயிற்று. ஏழு பிள்ளைகளை காப்பாற்ற எனது தாயார் கடுமையாக வறுமையோடு போராடினார். அந்த நேரம் நானே மூத்த ஆண் பிள்ளை என்பதால் அந்த 15 ஆவது வயதிலேயே நானும் கூலி வேலைக்கு செல்ல வேண்டியதாயிற்று. ஆயினும் எமது கிராமம் கல்வி பொருளாதார ரீதியிலும் மற்றும் சமத்துவ சமூக அமைப்பு ரீதியாகவும் பின் தங்கிய நிலையில் இருந்தது. இந்த நிலையில் எமது சமூகத்தை முன்னேற்ற வேண்டும் என்ற ஒரு ஆவேசம் என்னுள் எழுந்தது. அந்த சிறு வயதிலேயே பொது வேலைக்கே நான் முன்னுரிமை கொடுக்க வேண்டியதாயிற்று. எமது கிராமத்து மக்களின் ஒற்றுமையும் அன்றைய இளைஞர்களின் உற்சாகமான உழைப்பையும் நான் இன்றும் பெருமையோடு நினைக்கின்றேன். என் சமூக பொதுப்பணிக்கு எனக்கு வழிகாட்டியாக இருந்தவர் எனது ஒன்றுவிட்ட சகோதரரும் விடுதலைப் புலிகளின் ஆரம்பகால உறுப்பினரும் வெலிக்கடைச் சிறையில் வீரச்சாவடைந்த (புத்தூர் மாமா) தாமு கந்தையா அண்ணன்.

எனது இளமைக் காலத்தில் எனதூரில் அற்புதசிங்கம் என்பவர் அற்புதாலயா கலாமன்றம் என்னும் மன்றத்தினூடு நாடகங்கள் நடத்திவந்தார். ஆரம்பத்தில் அவருக்கு உதவியாளராகச் செயற்பட்டேன். எழுபதுகளில் யாழ்ப்பாணத்தில் பரவலாக நாடகப்போட்டிகள் நடத்தப்பட்டன. அம்பனை கலைப்பெருமன்றம் மகாஜனாக் கல்லூரியில் நடாத்திய நாடகப் போட்டியில் எமது குழுவினரின் குமணன் நாடகம் பங்கு பற்றியது. அதில் சீத்தலைச் சாத்தனாராக வேடமேற்று நடித்தவர் அன்று வரவில்லை. எனவே என்னை அப்பாத்திரத்தை செய்யும்படிகேட்டனர். பங்கு பற்றிய ஐம்பதுக்கு மேற்பட்ட நாடகங்களுள் எமது நாடகமே முதலிடம் பெற்றது. இந்த நாடகங்களில் இருந்து சிறந்த நாடகருக்கான தேர்வும் நடைபெற்றது. இதற்கு நடுவராக கவிஞர் கந்தவனம் கடமையாற்றினார். சிறந்த நடிகராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். தேர்வு பற்றிய கவிஞரின் விமர்சன உரை எனக்குப் புது உத்வேகத்தைக் கொடுத்தது இந்த நாடகம். 30 போட்டிகளில் பங்குபற்றி 27 முதற்பரிசையும் இரண்டு முறை 2ஆம் பரிசையும் ஒருமுறை மூன்றாம் பரிசையும் பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

❑ அன்றைய கால நாடகங்களுக்கும் இன்றையகால நாடகங்களுக்கும் இடையே காணப்படும் வளர்ச்சி வேறுபாடுகள் பற்றிக்குறிப்பிடுங்கள்?

✍ அறுபது எழுபதுகளின் தசாப்தங்களில் எமது நாடகங்கள் தென்னிந்திய சினிமாப்பாணியிலேயே



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அமைந்திருந்தன. எழுபது எண்பது களில் தசாப்தங்களிலும் ஈழத்து மண்வாசனை பிரதிபலிக்கும் நாட கங்கள் உருவாகின. அப்போதும் கூட சினிமாப்பாணியின் தாக்கத்தில் இருந்து முற்றாக விடுபடவில்லை. பின்னான நாட்களில் எமது சமூ கத்தின் துயரத்தை தேவைகளைப் பிரதிபலிக்கும் நாடகங்கள் உருவா கின. ஆயினும் நாம் நாடகத்துறை யில் வளந்துவிட்டோம் எனக்கூற முடியாது. உலக நாடகங்களுடன் ஒப்பிடும் போதுதான் அரங்கியல் தேடலில் நாம் இப்போதுதான் வளர்ச்சிப்படியில் காலடி எடுத்து வைத்துள்ளோம் என்றே கூறமுடியும்

❑ உங்களுடைய நாடக முயற்சிகள் பற்றி எமது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்?

✍ களத்தில் காத்தான், இனி ஒருவிதி செய்வோம், சதியை வென்றசாவுகள், குருத்தோலை, அழுவதேன், சண்டியன் ஜெயசிக்குறு, ஒரு வெள் ளைப் புறா சிவப்பானதேன் போன்ற நாடகங்கள் உட்பட இருபத்தி மூன்று நாடகங்கள் வரை செய்துள்ளேன். என்னு டைய நாடகங்கள் பல பாரா ட்டுக்களைப் பெற்றுள்ளன. ஆனாலும் எனது எந்த நாடகமும் எனக்கு பூரணதிருப் தியைத் தரவில்லை. எனது நாடகங்களை பிறர்பாராட்டும் போதெல்லாம் அந்தப் படைப் பிலே காணப்படும் குறைபா டுகள் பற்றியே நான் கவலைப்படு வேன். அதன் மூலம் புதிய தேட லுக்கு என்மனம் அங்கலாய்க்கும். களத்தில் காத்தான் நாடகம் 301 தடவை மேடைகளில் ஏற்றப்பட் டது. மாவீரன் கேணல் கிட்டு வரு கையும் அவருக்கு இழைக்கப்பட்ட சதியையும் சித்தரிக்கும் சதியை வென்ற சாவுகள் என்னும் படைப்பை பார் வையிட்ட எமது மதிப்பிற்குரிய தேசி யத் தலைவர் அவர்கள் நான் நினைத் தது அனைத்தும் இந்நாடகத்தினூா டாக வந்துவிட்டது என நெகிழ்ந்து பாராட்டியதை என்னுடைய படைப் பிற்கு கிடைத்த மிகப்பெரிய கௌர வமாக கருதுகிறேன்.

❑ புதிதாய் பிறப்போம் எனும் படைப்பை உருவாக்குவதற்காக உந் துதல் உங்களுள் எவ்வாறு எழுந்தது என்பதைக் கூறுவீர்களா?

✍ இதுவரை எமது படைப்புக்களி னூடே எதிரியால் எமக்கு இழைக் கப்பட்ட கொடுமைகளைத்தான் வெளிப்படுத்தி வந்தோம். ஆனால் விடுதலைக்காக போராடும் நாம் தெரிந்தும் தெரியாமலும் இந்த விடுதலைப் போராட்டத்திலிருந்து அந்நியப்பட்டு நிற்கிறோம் என்ற கசப்பான உண்மையை சுட்டிக்காட் டும் அதேவேளை அரசுக்கு சேவகம் செய்யும் இன்றைய கல்விமுறையா னது சமூகத்தில் வர்க்க பேத உணர்



வுகளுக்கே ஊக்கம் தருபவையாக அமைகிறது என்பது எனது தாழ்மை யான கருத்து. எனவே எமது சமூக சமதர்ம நீதிக்கானதும் எமது தேச வளங்களை விருத்தி செய்யக் கூடிய துமான ஓர் கல்விமுறை பற்றி நாம் சிந்திக்க வேண்டும் என்பதோடு இன்று எங்கள் கண்ணீருக்கு நாங் களே காரணமாக இருப்பதைச் சுட் டிக்காட்டி சுயநலத்தில் மூடிக்கிடக் கும் நாங்கள் புதிதாய் பிறப்போம் எனும் சிந்தனையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே இப் படைப்பை உருவாக்கினேன்.

❑ இன்று எமது மக்கள் பலர் முக் கியமாக கருதும் இன்றைய கல்வி முறையும் பாடசாலை அமைப்பை யும் நிராகரித்தல் என்பது சரியா னதா?

✍ எமது சமூகத்தில் ஏற்றத்தாழ்வை ஏற்படுத்துவதற்கு இக் கல்வி முறையே காரணமாகிறது. எம்மை அடிமைப் படுத்த முயற்சிக்கும் சக்திகளே இக் கல்வி முறையை தீர்மானிக்கும் காரணிகளாகின்றன. இக் கல்விமுறை எம்மை அடிமைப்படுத்துவதற்கான ஒரு சூழ்ச்சிப் பொறியாகும். உழைப் பிற்கு மதிப்பளிக்கும் தன்மை இக் கல்வி முறையில் இல்லை. அரசுக்கு சேவை செய்யும் மனப்பாங்கையும் சுயநலத்தையும் தேசபக்தியின்மை யையும் ஏற்படுத்துவதற்கு இக்கல்வி முறை பயன்படுகிறது. எமது தேசத்தின் வளங்களுக்கேற்ற உயர்வு தாழ்வு அற்ற ஒரு சமூக அமைப்பினை உருவாக்கும் கல்விமுறையே எமக்குத்தேவை. இது எமது தேசம் மீட்கப் பட்டதன் பின்பே சாத்திய மாகும் இன்று எமது இருப் பிற்கும் உயிருக்கும் உத்தர வாதமில்லை. எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்பார்கள். இன்று எமக்கும் உயிர் வாழ்தல் என்பதே பிர தானமாகும். அதற்காக போராட்டமே எமது தேவையாகவும் உள்ளது.

இன்று கல்வி கற்காதுபோனால் நாளைய தமீழீழத்தை ஆளு வதற்கு கற்றோர் சமூகம் இல்லாது போய்விடும் என் பது பலரின் வாதமாகும். தமிழீழம் என்பது ஆளப்படுவதற்காக அல்ல, நாங்கள் சுதந்திரமாக வாழ்வதற் காகவே தேவைப்படுகிறது என நான் கருதுகிறேன். கல்வி என்பது பாடப் புத்தகங்களுள் மட்டும்தான் உண்டு என நினைப்பது தவறு. போராட் டத்தினுள்ளும் கல்வி உண்டு. இக் கல்வி இன்று போராட்டத்தினூடு வளர்ந்து போராளிகளை பல்வேறு துறை சார்ந்த நிபுணர்களாக ஆக்கி யுள்ளது. பாடசாலைகள் பரீட்சை கள் என்பவற்றிக்கும் அப்பால் கல்வி உண்டென்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். நான் யாரு டைய மனதையும் புண்படுத்த


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இதனைப் படைக்கவில்லை. அதிபர்கள் ஆசிரியர்கள் எல்லோருமே இப்படித்தான் இருக்கின்றார்கள் என நான் கருதவோ சுட்டிக்காட்டவோ இல்லை. அவ்வாறு இருப்பவர்களின் உணர்வுகளை மட்டும் சுட்டிக்காட்டியுள்ளேன். எல்லோரையுமே திருப்திப்படுத்துவது என்பதைவிட எல்லோருக்கும் தேவைப்படுவதை சமூகத்திற்கு அவசியமானதை வெளிக்கொணர்வது கலைப் படைப்பின் பணியாக இருக்கவேண்டும்.

❑ உணவுக்காக பிச்சை எடுக்கும் சிறுமியின் பாத்திரம், சகோதரர்கள் போராட்டத்தில் இணைந்ததினால் தான் அவ்வாறான நிலை ஏற்பட்டது எனும் கருத்து நிலையை ஏற்படுத்துமா என ஒருசிலர் கேள்வி எழுப்பினர். இதுபற்றி என்ன கருத்துக்கூற விரும்புகிறீர்கள்?

✍ ஒரு கருத்தை பல கோணங்களிலிருந்து பார்க்கலாம். கண்ணீரிலும் வாழ்வின் துயரத்திலும் தான் தமிழீழ விடுதலைப் போராட்டம் மட்டுமல்ல உலக விடுதலைப் போராடங்கள் கருப்பெற்றன. அத்தகைய போராட்டங்கள் வெற்றியும் பெற்றன. அர்ப்பணிப்புக்களை சொல்லும் பொழுது



துயரங்களை அடையாளப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. போராளியும் அவனுடைய சகோதரியான சிறுமியும் சந்தித்துக்கொள்ளும் காட்சியானது பார்ப்பவர்கள் அனைவரின் இதயங்களையும் இறுக்கிப் பிழிந்து விடுகிறது. இங்கே கண்ணீருக்கும் கடமைக்கும் இடையே ஒரு பெரும் உணர்ச்சி யுத்தம் நடக்கிறது. இறுதியில் கடமை வெற்றிபெறுகிறது ஆனாலும் தோற்றுப்போனதாக அர்த்தமில்லை. அந்தக் கண்ணீர் அவனுடைய உடன் பிறப்பின் கண்ணீர் மட்டுமல்ல, எதிர்காலத்துக்காக பூத்திருக்கும் சந்ததியின் ஒட்டு மொத்த கண்ணீர். அந்தக் கண்ணீரை துடைப்பதற்கு அவன் வழிதேடிப்போகிறான். குறிப்பாகச் சொல்லப்போனால் பிச்சை எடுக்கின்ற நிலைவரினும் பட்டினி கிடந்து சாகிற நிலைவரினும் துன்பங்கள் தொடர்ந்து எம்மை துரத்திவரினும் நாம் தொடர்ந்து போராட வேண்டியது தவிர்க்க முடியாத மிகப்பெரிய கடமை என்பதை வலியுறுத்துகிறது. இந்த சோகத்தின் வேதனையால் ஒரு வீரத்தின் ஆவேசம் கிளர்ந்தெழ வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு இந்த நாடகத்தை நிறைவு செய்திருக்கிறேன். இந்த எனது முயற்சி எந்தளவுக்கு என்ன விளைச்சலை தந்தது என்பதை எங்கள் சமூகம் குறிப்பாக இன்றைய இளைய தலைமுறைதான் தீர்மானிக்கவேண்டும்.

# இந்திய விடுதலையை விரைவுபடுத்திய வீரமறவன் பகத்சிங்



மாவீரன் பகத்சிங் 1907ஆம் ஆண்டு ஒக்டோபர் 7ம் திகதி லாயல்பூர் மாவட்டத்திலுள்ள பாங்கா கிராமத்தில் பிறந்தார்.

பகத்சிங், தந்தையார், பாட்டனார் அனைவரும் சுதந்திரப் போராட்டவீரர்களாய் இருந்தனர். சிறுவனாக இருந்த போதே மாவீரன் பகத்சிங்கை ஜாலியன் வாலா படுகொலை (13.04.1919) அன்று பஞ்சாப் அமிர்தசரஸில் பிரிட்டிஷ் அரசிற்கு எதிராக நடந்த பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் மீது பிரிட்டிஷ் தளபதி ஜெனரல் டயர் தலைமையிலான படையினர் நூற்றுக் கணக்கான இந்திய மக்களை படுகொலை செய்திருந்தனர்) பாதித்திருந்தது. அன்றிலிருந்து அந்நியரை ஆயுதத்தின் மூலம் விரட்டவேண்டுமென உறுதியெடுத்துக் கொண்டான்.

**"போராளியென்பவன் பழி தீர்த்துக் கொள்ளும் பயங்கரவாதியல்ல, அவன் பிறக்கப்போகும் சமுதாயத்திற்கான மருத்துவன், அவன் தூக்கிய ஆயுதத்தின் கீழ் நாளை நம்பிக்கையுடன் வளர்கிறது. போராளி மரணத்தில் புதைக்கப்படுவதில்லை விதைக்கப்படுகிறான்"** என்பதை உள்வாங்கி அதனையே தனது நண்பர்களுக்கு போதித்து வழி நடாத்தியவன் மாவீரன் பகத்சிங்.

1928 காலப்பகுதியில் இந்திய சமதர்ம குடியரசு இராணுவத்தில் இணைந்து பல இராணுவ நடவடிக்கைகளில் கலந்து கொண்டார். இறுதியாக 08.04.1929இல் அன்றைய பொம்மை இந்திய அரசின் நாடாளுமன்றத்தை குண்டுவைத்து தகர்க்கும் நடவடிக்கைக்கு தலைமைதாங்கி கைதாகினான். நீதிமன்ற மேடையை விடுதலை முழக்க மேடையாக மாற்றினான். சந்தோசமாக தூக்குத்தண்டனையை ஏற்றுதான் இந்திய விடுதலை வீரனாக இறக்க விரும்புவதால் இராணுவத்தின் துப்பாக்கியால் சுடும்படி தனது இறுதி ஆசையை வெளியிட்டான். அவனது விடுதலை முழக்கத்திற்கு செவிகொடுக்காத ஆங்கிலேய அரசு தூக்கிலிட்டு படுகொலை செய்தது.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சிங்களத்தின் போர்பட்ஜெட்

நோர்வே மத்தியத்துவத்தின் கீழ் தமிழ்—சிங்கள தேசங்கள் இணக்க முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக செய்திகள் வெளியிடப்பட்டவேளையில் 5243கோடி ரூபாய்களை போரிற்கு செலவிடப் போவதாக சந்திரிகா அறிவித்துள்ளார். இதனை சிறீலங்காவின் போர் பட்ஜெட் என உலகசெய்தி ஏடுகள் விபரித்தன. சிறீலங்கா மற்றுமொரு போர் வரவு செலத் திட்டத்தை ஏற்பாடு செய்து 'சாதனை' படைக்கும் ஒரு நிதி ஒதுக்கீட்டை போரிற்கு செய்துள்ளது—மோசமான பொருளாதார சூழ்நிலைகள் மத்தியில் இவ்வாறு செய்யப்பட்டுள்ளது என இன்டியன் எக்ஸ்பிரஸ் சந்திரிகாவின் நிதி ஒதுக்கீட்டை வர்ணித்து இந் நிதி ஒதுக்கீட்டைபற்றி விளக்கம் அளித்த சிறீலங்கா நிதி அமைச்சின் உயரதிகாரி ஜெயசுந்தர, சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அழுத்தத்தை கொடுப்பதற்காகவே அரசு இவ்வாறான அதிகத் தொகையை போரிற்கு ஒதுக்கியுள்ளதாகக்கூறினார். இராணுவத்தை மீளக்கட்டியெழுப்ப தமது அரசு முயலவில்லை எனவும் பொலிஸ்துறைக்கு அதிகமாக ஒதுக்குவதன் மூலம் அவர்களுக்கு முக்கிய பாத்திரம் கொடுக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார் (ஏ.எப்.பி 17.02.00)




வரவு செலவு அறிக்கையை பாரளுமன்றத்தில் சமர்ப்பித்த சிங்கள சனாதிபதி சந்திரிகா, எதற்காக தமது அரசு பெரும் நிதியை போரிற்கு ஒதுக்குகின்றது என்பதற்கு விளக்கமளிக்காது சமாதானம் பற்றிய போலி விளக்கங்களையே போர்நிதி ஒதுக்கீட்டுக்கு முகவுரையாகக் கொடுத்துள்ளார்.

15000 பேரை புதிதாக இராணுவத்தில் இணைத்தல் 20000 தப்பியோடிய இராணுவத்தினரை மீள மன்னிப்புக் கொடுத்து போரில் பயன்படுத்துதல், பெரும் ஆயுதத் தளபாட கொள்வனவு என தொடரான இராணுவ பலப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சிறீலங்கா, இராணுவ நடவடிக்கைகளுக்கான நிதி ஆதாரத்தை இப்போது நிதிஒதுக்கீடு மூலம் வழங்கியுள்ளது என்பதை நடுநிலை ஆய்வாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

நோர்வே சமாதான முயற்சிகளை வெறுமனே இராஜதந்திர — அரசியல் விடயங்களாகக் கையாண்டபடியே ஒரு தீர்க்கமான இராணுவ வழிமுறையில் சிங்களம் செல்லமுயல்வதையும் ஆய்வாளர்கள் அவதானிக்கின்றனர். இன்று யாழ்.குடாநாட்டில் விரிந்து கிடக்கின்ற பெரும் சமர்க்களமும் தமிழீழத்தின் பிறபகுதிகளில் தொடர்சியாக விரிவடைந்து செல்லும் போரும் சிங்களம் போர் நோக்கினை புலப்படுத்துவன. ஆகிரமிப்பையே தமது ஆளுமைக்கான இறுதி வழிமுறை எனத்திடமாக நம்பும் சிங்கள இயந்திரத்தையே சந்திரிகா தலைமை தாங்குகின்றார்! ■■

சிறீலங்கா இனவாத இயந்திரம் தம்து 2000ம் ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

41 வீத ஏற்றுமதி வீழ்ச்சி என்பன வற்றின் மத்தியில் சந்திரிகா பண்டார நாயக்கா 2000ம் ஆண்டிற்கான தனது வரவு செலவு அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். இவ்வறிக்கையில் 2000ம் ஆண்டில் தமது அரசு 5243 கோடி ரூபாய்களை போரிற்கு செலவிடப் போவதாக அறிவித்தார். கடந்த ஆண்டின் வரவு செலவு 4700 கோடி ரூபாய்களை சிங்கள அரசு போரிற்கு ஒதுக்கியது. பின்னர் பிறிதொரு இடைக்கால அறிக்கை மூலம் 5620 கோடிரூபாய்களாக இது அதிகரிக்கப் பட்டது.

இவ்வாண்டு நிதிஒதுக்கீட்டில் படைகளிற்கு தேவைப்படும் உடைகள். சப்பாத்துக்கள் என்பனவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவ சந்திரிகா அரசு பெரும் நிதியை ஒதுக்கியுள்ளது.மேலும் இறந்தவர்களின் உடல்களை புதைப்பதற்கான விடயத்தில் வரிச்சலுகை வழங்கியுள்ளது சிங்கள அரசு. இவ்வாண்டு வரவுசெலவு அறிக்கையில் அறிவிக்கப் பட்ட நிதியிலும் 20. 25வீதம் அதிகமான நிதி போரிற்கு செலவிடப்பட்டும் என ஏ.ஏப்.பி செய்தி நிறுவனம் ஊகித்துள்ளது. இது 6000 கோடியிலும் அதிகமாக இருக்கும் எனக்கருதப்படுகின்றது


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எனது தகப்பனாரின் அஸ்தி என்றுகூறி சிறியபெட்டியொன்றை வீசிவிட்டுச் சென்றனர்

தற்போது நியூயோர்க் நகரில் வசித்து வரும், யூத இனத்தைச் சேர்ந்தவரான லூயிஸ் அயக்கிறீன் என்னும் மூதாட்டி ஜேர்மனியிலுள்ள ஹம்பேர்க் நகரில் 1925–ஆம் ஆண்டு பிறந்தவர். இவர் இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜேர்மனிய நாஸிப்படைகளால் தனது குடும்பத்திற்கும் தனக்கும் நடந்த விபரீதங்களையும் நாஸிப்படைகளால் தமது குடும்பம் சிதைக்கப்பட்டது பற்றியும் லண்டன் பி.பி.ஸி தொலைக்காட்சியில் ஒலிபரப்பாகும் “பியூப்பிள் செஞ்சரி” என்னும் நிகழ்ச்சி மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார். அதன் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது.

எனக்கு அந்தக் கொடுமையான, பயங்கரமான நினைவுகள் இன்னும் என் மனதை விட்டகலாது வாட்டிவதைத்துக் கொண்டிருக்கின்றன. 1939—ம் வருடம் செப்டம்பர் மாதம் 1—ம் திகதி என நினைக்கிறேன், அன்று தான் போலந்து நாட்டின் மீது ஜேர்மனியர் படையெடுத்து ஆக்கிரமிப்புச் செய்து சரணடையச்செய்த கொடுங்கோன்மையான நாள். அன்றே எனது தந்தையும் கைது செய்யப்பட்டு சித்திரவதை முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டார். ஜேர்மனியிலுள்ள டஷாவ்(Dachau) என்பது பிரசித்தமான வதை முகாமாகக் கருதப்பட்ட இடம். கடைசியாக அங்கும் அனுப்பப்பட்டார்.


1941 ஜனவரி மாதம் பகல் வேளை யாரும் எதிர்பாராதவகையில் எமது வீட்டினுள் புகுந்த கெஸ்டாபோ என்றழைக்கப்படும் ஜேர்மன் இரகசியப் பொலிசார் றபர் பட்டியால் சுற்றப்பட்டிருந்த சிறிய சுருட்டுப் பெட்டியொன்றை குசினிக்குள்ளிருந்த மேசையின்மேல் வீசியெறிந்து விட்டு, இதுதான் உன் அப்பாவின் அஸ்தி (சாம்பல்) என்றவாறு வெளி





www.tamileelamarchive.com

யேறிவிட்டனர். என் மனம் துணுக்குற்றது. அப்பாவை எண்ணி மனம் வேதனைப்பட்டாலும் ஒருவாறு தேற்றிக் கொண்டேன். சில காலங்களின் பின்பே இது என் அப்பாவின் அஸ்தி அல்ல என்பது விளங்கியது. அவர்கள் ஒருபோதும் யூதர்களைக் கொலை செய்து எரித்த அஸ்திகளைக் கொடுப்பதும் கிடையாது. தனித்தனியாக எரிப்பதும் கிடையாது. கொல்லப்பட்டவர்களை ஒருவர் மேல் ஒருவராகக் குவியல்களாக்கி எரித்ததும், பெரிய கிடங்குகைள வெட்டி அதனுள் போட்டும், புதைத்தும், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் போன்ற பலதரப்பட்டவர்களை நச்சு வாயுவுடன் கூடிய மண்டபங்களில் அடைத்து சாகடித்து அடையாளம் தெரியாமல் செய்து விடுவர். இவற்றுக்கெல்லாம் காரணகர்த்தா அன்றைய நாட்களில் உலகத்துக்கெல்லாம் சர்வாதிகாரியாக இருக்க வேண்டுமென்ற அவாக்கொண்ட கிட்லரின் உன்மத்தமான செயல்களே. அந்த அஸ்தி கொண்டுவரப்பட்டது டஷாவ் முகாமிலிருந்தே என்பது தெரிந்தது. அந்த வகை முகாமை 50 வருடங்களின் பின்பே சென்று பார்க்க முடிந்தது.



பின்னர் 1941 ஆம் ஆண்டு மஞ்சள் நிற நட்சத்திர அடையாளம் பொறித்த உடைகளணிந்த ஜேர்மனியர்களால் எமக்கு அங்கிருந்து கிழக்குப் போலந்துக்கு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டது. அவர்கள் பின்னர் எங்களையெல்லாம் கிழக்கு போலந்திலுள்ள சுடுகாடு போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருந்த முகாம்களில் தங்கவைத்தனர். குடிக்கத் தண்ணீரோ மலசலகூடமோ, வேறு எந்தவிதமான அடிப்படை வசதிகளுமற்ற நிலையில்

மொழியாக்கம்
**ஜெனன்**

வைக்கப்பட்டிருந்தோம். வேளாவேளைக்கு உணவு கிடையாது பசியின் கொடூரம் எங்களையெல்லாம் வாட்டி வதைத்தது. நான்கு வருடங்களாக அந்த நிலையில்... ஏதோ இருந்தாற் போல சிறிய உணவு அளித்து மீதி நேரங்களில் பட்டினி போட்டவாறு வைத்திருந்தனர். எனக்கு இப்போது கூட அந்தப் பசியின் கொடுமை நினைவில் ஊசலாடுகிறது. என்னால் விரும்பப்பட்ட மீனோ, இறைச்சியோ, பழவகைகளோ கேட்டால் அவ்வளவுதான். கேளுங்கள் கொடுக்கப்படும் என்பார்கள். ஆனால் கேட்டால் கிடைப்பது அடியும் உதையும் தான். சில நாட்களால் என் தாயும் பசிக்கொடுமை தாளாது மாண்டு போனாள். அதேபோல அங்கிருந்த சிறுவர் சிறுமியரும் பசியால் வரிசைக்கிரமமாக மாண்டு மடிந்தனர். அதன் பின் என்னை மிகவும் பலவீனப்படுத்தியது என் தங்கை திடீரென காணாமல் போய்விட்டிருந்தது. இன்றுவரை அதன் மர்மம் எனக்கு விளங்கவேயில்லை.

1944ஆம் ஆண்டு ஜேர்மனியப் படைகள் முகாம்களிலிருந்த அத்தனை பேர்களையும் லொறிகளில் ஏற்றி ‘அவுசிடஸ்’ என்ற சித்திரவதை முகாமுக்கு கொண்டு சென்றனர். அதுபற்றி முன்னர் நாம் அறிந்திருக்காவிட்டாலும் பின்னர் அவை எப்படியான மனிதவதைக் கூடங்கள் என்பது பற்றி அறிந்தோம். நச்சு வாயு செலுத்தப்படும் மண்டபங்கள் இரும்புகளால் அமைக்கப்பட்ட கொக்கிகள் (தூக்குப் போடுவதற்கு ) மேலும் பல உபகரணங்களுடன் கூடிய பகுதியாகவே தென்பட்டன. அங்கிருந்தவர்களைப் பகுதி பகுதியாகப் பிரித்தெடுத்து அழைத்துச் செல்வதும் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் திரும்பி வராமையும் எமது சந்தேகங்களை உறுதிப்படுத்தின. ஆனால் ஒன்று மட்டும் விளங்கியது. அதாவது அங்கு ஏதோ வித்தியாசமாக நடைபெறுகின்றதென்பதும், பலவித துர்நாற்றங்கள் நெடிகள் நாசியில் மோதுவதால் ஏற்படும் உணர்வுகளால் பெரிதும் கலக்கமடைந்து அடுத்தபடியாக எமக்கு ஏற்படப்போகும் பயங்கரத்தை எண்ணி கண்ணீர் வடித்தேன். என் அதிஸ்டமோ என்னவோ அதிக நாள் அங்கு வைத்திருக்கவில்லை. Bergen Belsen என்ற இடத்திற்கு கப்பல் மூலம் அழைத்துச் சென்றனர். அந்நாட்களில் போஜன் பெல்சன் முகாம்களில் பயங்கரமான விசித்திர நோய்கள் அங்கிருந்தோரைப் பீடித்திருந்தது. என் மனம் எனக்குள் எதிரொலித்தது. இன்னும் சில நாட்களில் என் வாழ்வு முடிவடையப்போகின்றதென்பதை. அங்கேயும் பட்டினிப்பேய் தலைவிரித்தாடியது. எமக்கேற்பட்ட சோகத்தையும் அவலத்தையும் உலக மகா முர்க்கர்களின் கொடுங்கோண்மைகளையும் எண்ணியவாறு உறக்கத்தில் ஆழ்ந்தேன்.

இப்படி எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் 1945 ஆம் வருடம் ஏப்ரல் 15 ஆம் திகதி பிரித்தானியப் படைகளால் ஜேர்மனி கைப்பற்றப்பட்டது. ஜேர்மனியர்கள் செய்வதறியாது திகைத்தனர். நாம் இருந்த முகாமுக்குள்ளும் திடீரென அவர்கள் நுழைந்தனர். 42 ஜேர்மனியப் படையினர் கைதுசெய்யப்பட்டனர். பிரித்தானியப் படைகளுக்கு உதவியாக நாமெல்லாம் செயற்பட்டோம். இதற்கெல்லாம் நல்லபடியாக ஒரு முடிவு வரும் என்பதை நான் கனவிலும் நினைக்கவில்லை. அங்கிருந்து வெளியேறிய நான் 1946 ஆம் ஆண்டு


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நியூயோர்க் நகருக்கு சென்றேன். ஆனால் ஒன்றை மட்டும் உலக மக்களுக்கு வெளிப்படையாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இனம், மதம், கலாச்சாரம் எனப் பரம்பரைப் பழக்க வழக்கங்களில் ஊறிப் போயிருந்தது எமது யூத இனம்.

மதம் சம்பந்தமான நம்பிக்கைகளிலும் வணக்கங்களிலும் யூத இனம் முன்னோடியாகத் திகழ்ந்தது. சிறு வயதிலிருந்தே ஆண்டவன் மீது பற்றுதலும், மத வெறியும் எனக்கு ஏற்பட்டிருந்தன. ஆனால் யூத மக்களுக்கு ஏற்பட்ட அழிவுகளுக்கு, சிதைவுகளுக்கு கைக்குழந்தைகள்கூட காஸ் அறைகளுக்குள் திணிக்கப்பட்டு கொன்றதையும், சிறு பாலகர்கள் அடித்து, உதைத்து கொலை செய்யப்பட்டதையும் மற்றும் நானாவித கொடூரச் செயல்களையும் இந்தப் பாவப்பட்ட கண்களால் காண நேரிட்டது.

■■

# சுதந்திரம் சும்மா கிடைப்பதில்லை

இலங்கை அரசு சமாதானப் பேச்சு என்று முன்னால் கையசைத்துக் கொண்டு பின்னால் மேலும் ஆயுதங்களை வேண்டிக் குவிக்கும் நடவடிக்கையில் மும்மரமாக ஈடுபட்டுள்ளது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை அரசியல் பிரிவால் வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது அரசாங்கம் அன்மையில் நாடு பூராகவும் 52ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டங்களை முன்னெடுத்தது.

எனினும் எமது தாயகப்பிரதேசங்களில் இது பெரிதும் எடுபடவில்லை.

அன்றையதினம் அரச அலுவலகங்கள் சிலவற்றில் மட்டும் விரல் விட்டு எண்ணக்கூடிய சில அதிகாரிகள் சுதந்திரதினத்தை ஒரு சம்பிரதாய வழமைக்காக நினைவுகூர்ந்துள்ளார்களே தவிர வேறு எதுவும் இடம் பெறவில்லை.

இது எமக்கு எதை உணர்த்துகின்றது? இல்லாத ஒன்றை தந்துள்ளது என்று அரசாங்கம் காட்ட முற்பட்டபொழுது தமிழ் மக்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

நாம் சுதந்திரமாக எமது தாயகப்பிரதேசங்களில் எதைச்செய்ய முடிகின்றது. எந்தச் செயலைச் செய்யப்போனாலும் தடைகளும், நெருக்குதல்களும், கட்டுப்பாடுகளும், தொல்லைகளும், கெடுபிடிகளும் சூழ்ந்து ஒரு நடமாடும் கைதிகள் போன்று ஒவ்வொருவரும் நாம் ஆக்கப்பட்டுள்ளோம்.

உங்களுக்குச் சுதந்திரம் இல்லை. ஆயினும் நீங்கள் சுதந்திரததினத்தைக் கொண்டாடவேண்டும். இது அரசின் நிலைப்பாடு.

அரசு சமாதானப் பேச்சு என்று முன்னால் கையசைத்துக் கொண்டு பின்னால் மேலும் ஆயுதங்களை வேண்டிக்குவிக்கும் நடவடிக்கையில் மும்மரமாக ஈடுபட்டுள்ளது. சமாதானத்தில் அக்கறை கொண்டுள்ளதாகக் காட்டும் அரசு வருடாந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவினங்களுக்கென மேலும் நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவித்தது.

அரசாங்கத்தின் இந்த இரட்டை அணுகுமுறைத் தந்திரத்தில் நாம் அகப்பட்டுவிடப் போவதில்லை. எமது மக்களும் இதைப்புரிந்து கொள்ளாத அளவுக்கு ஒன்றும் அரசியல் குருடர்கள் அல்லர்.

இன்றுவரை நாம் கற்றுக்கொண்டது என்னவென்றால் எமக்கு எந்த சிங்கள அரசும் சுதந்திரம் தரப்போவதில்லை என்பதாகும்.

எனவே அரசின் சுதந்திரதின விழாவைப் புறக்கணித்து விட்டால் எமக்குச் சுதந்திரம் கிட்டிவிடும் என அர்த்தம் இல்லை. இது ஒரு நிலைப்பாடு மட்டுமே.

எமது நல்வாழ்வுக்காக நாம்தான் உழைக்கவேண்டும். எமது சுதந்திரத்திற்காக நாம் அவசியம் போராடித்தான் ஆகவேண்டும்.

இந்த நிலையில் இருந்து சிந்தியுங்கள். இதை நடைமுறைப்படுத்துவோம் வாருங்கள். சுதந்திரம் சும்மா கிடைப்பதில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை அரசியல் பிரிவால் வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரம்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சிலுவையூன்றாச் சவக்காலை

கழுத்தை வளைத்த
சுருக்குக்கயிற்றைப் பழிதீர்க்க
துர்நாற்றம் மிகுந்த உண்மைகளை
* மண்துார்த்தகைகள் கக்கின.

உண்மைகள்
காணமல்போன மனிதர்களை பிணங்களாய்
கிளர்த்தின.
மண்ணகழ்ந்த கிடங்குகளில் மனிதர்களை நிரவி
செம்மணிவயலில் சாவிளைத்த இராணுவச்சாகசம்
சந்திசிரித்தது.

உயிர்ப்பொறை உரியுண்டு உயிர்சுண்டிய
எம்புருஷர் தேகப்பொதிகள்
செம்மணியின் கள்ளறையுள்ளிருந்து புகைந்தன.

வனப்புமிகு எம் பெண்டிர்
தசைபுசித்த வெறியுடல்கள்
தசைகுளிரும் பொழுதுவரை புசித்த
தசைவெறி உடல்கள்
செம்மணியின் பசியமண்ணில் பதனமிட்ட
பிண்டங்கள் தெருக்களில் சம்மணமிட்டு
வார்த்தையாடின.

குழிகளில் புழுத்த
உடல்கிளைத்த வயிறுகளின்
ஒப்பாரிப்பாடல்பெற்ற ஸ்தலமாயிற்று செம்மணி.

சுடலை சூடிச் சுடர்ந்த செம்மணியின்
சிலுவையூன்றாச் சவக்காலைக் குரூரம்
மனங்களைத் தின்கிறது.

கம்பிச்சிறையொன்றுள்
உயிரைக் கிடுக்கிக் கிடக்கும் என்ற
குருதித்துயர் தேற்றலில்
அழுகியகுருதி நாறிற்று.

கண்ணிலொற்றிய தாலிகள் அறுந்தன.
சுமந்த சூலறைகள் கருவழிந்தவாறாய்க் கலங்கின.
உண்டியொழித்து
வயிறுசுண்ட நோற்ற நோன்புகள் பொய்த்தனவா?

பிணவீச்சம் கமழ 'வெட்டியான்'கள்
பவனிவருகிறார்கள்.
எந்த ஒப்பனைகளாலும் முடியவில்லை
சவக்களை பொருந்திய முகங்களைச் சிங்காரிக்க.
வயல்வெளிகளில் இடுகாட்டின்
அமைதியுறைகிறது சொப்பனங்கள் வியர்க்க
நெற்குலைகள் பிணங்களாய் ஊசலிடுகின்றன.
நடுநிசிமயமான பல்லிடுக்கில் கந்தலாய்க்கிழிகிறது
இருப்பு.

சிலுவையூன்றாச் சவக்காலைக்கிரையாகுமோ வாழ்வு?
வாழ்வைச் சப்புகிறது எண்ணம்!



**-எஸ். உமாஜிப்ரான்-**

* படையினன்
லான்ஸ் கோப்ரல் டி. சோமரட்ண ராஜபக்ஷ


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## இரு சிங்களப் படங்கள் ஒரு நோக்கு

# "பூரண நிலவில் ஓர் இறப்பு"

## சிறீலங்கா கொலைக்கரங்கள் கத்தரித்த திரைப்படம்

தமிழீழ விடிவிற்கான போர் இருபது வருடங்களுக்கு மேலாக தொடர்கிறது. இரண்டாயிரமாண்டு தொடங்கியும் சிங்களம் தமிழீழத்தை விட்டு அகலக்காணோம். சிங்களத்தின் ஒரு சாரார் போரின் மீது நம்பிக்கையிழந்து வருகின்றனர். அத்துடன் போரின் அழுத்தங்களை உணரத் தலைப்படுகின்றனர். இதனை வெளிப் படுத்தும் படைப்புக்கள் சிங்களவர் மத்தியில் வெளிவருவது அரிதாக உள்ளது. அவ்வாறு அரிதாக வெளி வருவனவும் சிங்கள அடித்தட்டு மக் களையோ சர்வதேச அரங்கையோ எட்டுவதில்லை. அவை முளையிலேயே சிங்களப் பேரினவாத தணிக்கைக் குழுவினால் கிள்ளியெறியப்பட்டு விடும்.

இந்த வகையில் வந்த திரைப்படமே "பூரண நிலவில் ஓர் இறப்பு" (புற கண்டா கலுவாற) என்பதாகும். இந்தப்படம் சிங்களம் தமிழீழத்தின் மீது தொடுத் துள்ள அநியாய யுத்தத்தினால் சிங் களத்தில் ஏற்படும் அவலங்களை தொட்டுக்காட்டுகிறது. இதன் பிரதான கதைக்களமாக வடமத்திய மாகா ணத்தின் பின்தங்கிய ஏழைச் சிங்க ளக் கிராமமொன்று காட்டப்படுகின் றது.

கதையில் வரும் சிங்களக் கிராமம் வறண்டதாகவும், மக்கள் வேலை வாய்ப்பற்ற நிலையில் இளைத்துப் போய் எதிர்காலம் இருள்சூழ்ந்த மக்களாகவும் வாழ்கின்றனர். வன்னி காமி (ஜோய் அபேவிக்ரம) ஒரு குருட்டு மனிதன். வன்னிகாமியின் குடும்பச்சூழலும் கிராமத்தின் வேலை



வாய்ப்பற்ற தன்மையும் அவருடைய மகன் பண்டாரவை இராணுவத்தில் சேரவைக்கிறது. பண்டாரவிற்கு வேறு வாய்ப்பிருக்கவில்லை. இதன் மூலம் தனது தங்கையின் திருமணத்தையும் அதற்கு சிறிய வீட்டையும் தேடிக் கொள்ள முடியும் என்பதாலேயே இராணுவத்தில் இணைந்துகொள் வது என்பது அழகாக படம்பிடித் துக் காட்டப்படுகின்றது.

ஒரு பூரண நிலாக்காயும் இரவு வேளையின்போது யுத்தத்தில் கொல லப்பட்ட வன்னிகாமியின் மகனு டைய உடலெனக் கூறி சிங்கள அர சால் 'அரக்கிடப்பட்ட' (மூடப்பட்ட) சவப்பெட்டியொன்று அனுப்பி வைக் கப்படுகின்றது. பௌத்த சம்பிரதா யங்களின்படி பண்டார உடலுள்ள தாக கருதப்படும் பெட்டி புதைக்கப் படுகிறது. ஆனால் திறந்து பார்க்கப் படவில்லை. பண்டாரவின் இறுதிக் கிரியைகள் முடிவுற்ற நிலையில் அக்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# "சரோஜா"

## சிங்களப் பேரினவாதத்திற்கு தீனிபோடும் திரைப்படம்



கிராம உத்தியோகத்தர்(மகேந்திர பெரேரா) இந்த அர்த்தமற்ற யுத்தத்தில் சிங்களவர்களை விட தமிழீழத்தவர்கள் அதிகம் பாதிக்கப்படுவதாக குறிப்பிடுகிறார். சிங்கள இராணுவத்தினர் அப்பாவித் தமிழர்கள் மீது செய்யும் அநியாயங்களை அறிந்த வன்னிகாமி தனது மகனின் நட்டஈட்டுப் பணத்தைப் பெறுவதற்கான பத்திரங்களில் கையெழுத்திட மறுக்கிறார். இதனை அமைதியாக அங்கீகரித்த இளையமகள் ஆடைத்தொழிற்சாலையில் வேலைபுரியத் தயாராகிறாள். ஆனால் அவளுக்கென்று நிச்சயிக்கப்பட்ட இளைஞன் அந்த நஷ்டஈட்டுப் பணத்தைப் பெற்று நமக்கென்று ஒரு நல்வாழ்வை அமைத்துக்கொள்ளலாம், அதனை பெற்றுத் தர வன்னிகாமியை வற்புறுத்தும்படி தூண்டுகிறான். இவன் மாத்திரமன்றி வன்னிகாமியின் மூத்தமகள், அவளின் கணவன், கடனுக்கு பணம் தந்த அரச உத்தியோகத்தர், பண்டாரவின் திவசத்திற்காக பிக்குமார் என அவரின் சுற்றஞ் சூழலெல்லாம் வன்னிகாமியை நட்டஈட்டை பெற்றுத் தருமாறு வற்புறுத்துகின்றனர்.

இவ்வேளையில் எவரும் எதிர்பாராத நிலையில் வன்னிகாமி ஏதோவொரு உள்மனது உந்தப்பட்டவராய் மகனுடைய உடல் புதைக்கப்பட்ட இடத்தை கிளறுவதற்கு மண்வெட்டியுடன் புறப்படுகின்றார். அவருக்கு கிராமத்தவர்களும் உதவுகின்றனர். இறுதியில் பண்டாரவின் உடலுள்ளதாகக் கருதப்படும் சவப்பெட்டியைத் திறக்கிறார்கள். உள்ளே அவர்கள் கண்டது ஒரு பாறாங்கல்லும் இரு வாழைக்குத்திகளுமே. இதன் மூலம் நட்ட ஈட்டை பெற முடியாது என்பதை நன்குணர்ந்த வன்னிகாமி தனது மகனை போர் கொல்லவில்லை, அரசே கொன்றது என்பதை நன்குணருவது போல முடிகிறது திரைப்படம்.

75 நிமிடங்கள் கொண்ட இத்திரைப்படம் சிறீலங்கா அரசின் யுத்த நடவடிக்கைகளுக்கு அப்பாவி இளைஞர்கள் பலிக்கடாவாக்கப்படுகிறார்கள் என்றும் இந்த யுத்தத்திற்காக நாட்டின் அபிவிருத்தி நிதிகளனைத்தும் செலவழிக்கப்படுகிறது என்பதையும் தெளிவுபடுத்துகின்றது. இந்தப் போரில் கொல்லப்படும் சிங்கள இளைஞர்களின் உடல்களின் மீது சந்திரிகா அரசு அரசியல் சதுரங்கம் ஆடுகிறது என்பதையும் போரில் ஈடுபடும் சிங்களச் சிப்பாய்களின் பெற்றோர்களுக்கு அறிவுறுத்துகிறது. தமது அரசியல் சித்து விளையாட்டுக்கள் பாமர சிங்கள மக்களுக்கு தெரிந்துவிடும் என்ற அச்சத்தாலேயே இத்திரைப்படத்தை திரையிட சந்திரிகா அரசு மறுத்துவிட்டது.

சந்திரிகா அரசு, அதர்ம யுத்தத்திற்கு ஆதரவாக கூறும் கருத்துக்களையும், தமிழ்மக்களின் மீட்பர்களான தமிழீழ விடுதலைப் புலிகளை கொடியவர்களாக காட்டும் கற்பனைப் புளுகுகளைக் கொண்ட சோமரட்ண திசநாயக்கவின் "சரோஜா" திரைப்படத்தை அனுமதித்தன் மூலம் சிங்களத் திரைப்படங்கள் கூட சிங்களப் பேரினவாதத்திற்கு பலியாகும் அவலம் நேர்ந்துள்ளதை வெளிக்காட்டுகின்றது.

சரோஜா திரைப்படத்தில் வருகின்ற தமிழ்ப் பெண்குழந்தையின் சகோதரனும் தந்தையும் தமிழீழ விடுதலைப்போரில் கட்டாயமாக இணைக்கப்பட்டுள்ளனராம். அந்தச் சிறுமியின் தந்தையான சுந்தரம் தப்பிவிடுகிறார். அவரைத் தேடிவரும் விடுதலைப்புலிகள் சிறுமியின் தாயாரையும் சுட்டுவிடுகின்றனராம். அத்தோடு அவர்கள் இருந்த வீட்டையும் கொழுத்திவிட்டுச் செல்வதாகவும் போகிறது கதை.

பின்னர் அக்குழந்தையும் தந்தையும் அயலிலுள்ள சிங்களக் கிராமத்திற்கு தப்பியோடுகின்றனர். அங்கு வைத்து சிங்கள ஆசிரியர் ஒருவரால் பராமரிக்கப்படுகின்றனராம். அங்கும் அவர்களைத் தேடிவரும் விடுதலைப் புலிகள் சுட்டுக்கொல்லுகின்றனராம் என்று முடிகிறது கதை. இடையே பல செருகல்களின் மூலம் விடுதலைப்புலிகளை கொடூரமானவர்களாகக் காட்ட முயற்சிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்போரில் தமிழீழ மக்கள் சிங்களப்பேரினவாதத்திற்கெதிராக தமிழீழ விடுதலைப் புலிகளின் பின்னே மனப்பூர்வமாக இணைகின்றனர். தமிழீழ சிறுவர்களை அநாதைகளாக்குவதில் முன்னிற்பதும் சிறீலங்கா இராணுவமே என்ற உண்மைகளை மறைத்து இனவாதிகளின் ரசனைக்கேற்ப படைக்கப்பட்ட ஒரு திரைப்படமே "சரோஜா".

இன்று சிங்களப் பேரினவாதிகள் அங்கீகரிப்பனவற்றையே சிங்கள பாமரமக்கள் பார்க்க முடியும்.

பேரினவாதத்திற்கு எதிரான எதனையும் சிங்கள பாமர மக்களை சென்றடைய பேரினவாத சத்திகள் விடாது என்பதே நிதர்சனமான உண்மை.

—சுழல்



www.tamileelamarchive.com

# மீள்பார்வை 2000

## ஜனவரி

**02.01.00**
ஓயாத அலைகள் 3 நடவடிக்கையின் போது பலியான 16 சிங்களப் படையினரின் சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அரசிடம் விடுதலைப் புலிகளால் ஒப்படைக்கப்பட்டது.

**06.01.00**
களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழீழ அரசியல் கைதிகள் சிங்கள அரசியல் கைதிகளாலும் சிறைக்காவலாளிகளாலும் தாக்கப்பட்டனர். இதன் விளைவாக இரு தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 40 தமிழீழ அரசியல் கைதிகள் படுகாயம் அடைந்தனர்

**07.01.00**
தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் திரு.குமார் பொன்னம்பலத்திற்கு மாமனிதர் விருது வழங்கப்பட்டது.

- கொழும்பில் வத்தளை மற்றும் வெள்ளவத்தை பகுதிகளில் சிறீலங்காப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்களின் போது 3000ற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் கைது செய்யப்பட்டார்கள்

**15.01.00**
வாரிக்குட்டியூர் செட்டிகுளம் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணி வெடித் தாக்குதலில் 9 சிங்களப்படைகள் பலி. 6 பேர் படுகாயம்.

- ஜெனிவா ஐ.சி.ஆர்.சி பொதுப் பிரதிநிதி ஜே.எம். மொனைட் வன்னிக்கு விஜயம். தமிழ் மக்களின் அவலநிலைகளை கண்டறிந்தார்.

**27.01.00**
சிறீலங்காவில் சமாதான பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நிலைகளை ஆராய நோர்வே பிரதி வெளிநாட்டமைச்சர் லுண்டே வருகை.

- தமிழீழப் பகுதிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் தொடர்பு சாதனங்களுக்கூடாக எதுவித தகவல்களையும் வெளியிடக்கூடாது என வட—கிழக்கு ஆளுனர் ஜெனரல் அசோக ஜயவர்த்தனா அறிவிப்பு.

**28.01.00**
மொறக்கொட்டாஞ்சேனையில் காவலரணிலிருந்த சிங்களப்படை மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் செல்லத்தம்பி விஜயராஜன் (வயது14) என்ற அப்பாவித் தமிழ்மாணவன் பலி. மற்றும் 4 பேர் காயம்.

- முருங்கனில் அப்பாவித் தமிழர்கள் ஐவர் சிறீலங்காப் படைகளால் படுகொலை செய்யப்பட்டனர்.
- திருகோணமலையில் விடுதலைப் புலிகள் தாக்கியதில் 3 சிங்களப் படையினர் பலி.

**29.01.00**
மூதூர் பிரதேசத்தில் சிறீலங்காப் படையினர் சுற்றிவளைத்து 10,000க்கு மேற்பட்ட தமிழர்களை தடுத்து வைத்து விசாரணை செய்தனர்.

**30.01.00**
முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்டங்களில் 5600 குடும்பங்கள் சந்திரிகா அரசின் நிவாரண வெட்டால் பாதிப்பு.

**05.01.00**
தமிழீழ மக்களின் விடுதலைப்போரின் நியாயத்திற்காக ஓங்கிக் குரல் கொடுத்த ஒரேயொரு தமிழ் அரசியல் வாதியும் மனித உரிமைகள் சட்டத்தரணியுமான திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் கொழும்பில் சிறீலங்கா அரச கூலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதன் மூலம் அரசு சிறீலங்காவில் தமிழர் போராட்டத்தை அங்கீகரிக்கும் எந்தக் குரலையும் அனுமதியாது என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. மறுபடியும் சந்திரிகா அம்மையார் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட பொழுது தெரிவித்த பேரினவாத கருத்துக்களுக்கெதிராக அமரர் குமார் பொன்னம்பலம் பகிரங்கக் கடிதம் எழுதிய மறுவாரமே படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



**13.01.00**
28.12.99 ஆம் திகதி சிறீலங்கா கடற்படையால் பாலியல் வல்லுறவுக் குட்படுத்தியபின் படுகொலை செய்யப்பட்ட புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலய பூசகரின் மகளான இளம்தாய் சாரதாம்பாளின் இறுதிக்கிரியை இன்று கொழும்பில் நடாத்தப்பட்டது. சிறீலங்காக் கடற்படையின் காட்டுமிராண்டித்தனத்தால் சாரதாம்பாளின் மகள் சிறுமி சுமிதா அநாதையாக்கப்பட்டுள்ளார். சிறீலங்கா அரசின் தமிழின அழிப்பு நடவடிக்கையால் அநாதைகளாக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ்ச் சிறுவர்களின் வரிசையில் சுமிதாவும் சேர்ந்து கொள்கிறார்.



**23.01.00**
கொழும்பின் கொலன்னாவ பிரதேசசபை, கம்பகா மாவட்டத்தின் பல பகுதிகளிலும் அதிகாலை நான்கு மணிக்கு ஊரடங்குச்சட்டம் பிறப்பித்து சிறீலங்கா பொலிஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக தேடுதல் நடத்தி 4000ற்கு மேற்பட்ட அப்பாவித்தமிழர்களை கைதுசெய்தனர். இதன்போது வயது பால் வேறுபாடின்றி அரச அதிகாரிகள், கர்ப்பிணித் தாய்மார், மாணவர்கள் என அனைத்து தரப்பினரையும் விசாரணைக்கு உட்படுத்திய நடவடிக்கையில் ஏறக்குறைய 5000 சிறீலங்காப்படையினர் ஈடுபடுத்தப்பட்டனர்.



**30.01.00**
கொழும்பையொத்த உச்ச பாதுகாப்பினைக்கொண்ட பகுதியான வவுனியா தபாலகத்தில் படையினர் தமது சம்பளப் பணங்களை மாற்றிக்கொண்டிருந்த வேளையில் குண்டொன்று வெடித்ததில் 10 பேர் பலி 70பேர் காயம். சிறீலங்காவில் உச்ச பாதுகாப்பினைக் கொண்ட பிரதேசம் என்பது சாத்தியமில்லை என்பதையே தபாலக குண்டு வெடிப்பு சுட்டிக்காட்டுகின்றது.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# 'கண்கள் கூறும் வார்த்தைகள்'




பெண்புலி வீரம் காணும் கண்களே,
கூறும் வார்த்தை என்ன?
அஞ்சல் ஊடாக எரிமலைக்கு.






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




பாலன் பசியாற முடியாமல் தாய்முலையில் பால்வற்றிப் போயிற்று
காலம் எப்போது விடியும்...? ஏங்கும் கண்களில் எப்போதும் ஊற்று!

www.tamileelamarchive.com